பக்கங்கள்: 24
விலை:20 ரூபா

யாழ்.நகரில்
புத்தம் புதிய நவீன ஆடைத் தெரிவுகளுக்கு
றோயல் கலெக்ஷன்ஸ்
இல.223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5573

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 24, ஞாயிற்றுக்கிழமை 08.01.2017 | கதிர் 64

### ஒருபுறம் திறப்பு விழாவில் ரணில்; மறுபுறம்

# அம்பாந்தோட்டையில் ஆர்ப்பாட்டக் களேபரம்

### 3 பொலிஸார் உட்பட 21 பேர் காயம்

கொழும்பு,ஜனவரி 08

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்ற அம்பாந்தோட்டை முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கான ஆரம்ப நிகழ்வுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பெரும்களேபரம்ஏற்பட்டது. இதில்3பொலிஸார்உட்பட 21பேர் காயமடைந்தனர்.**

அம்பாந்தோட்டை முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கான ஆரம்பநிகழ்வுகள்நேற்றுநடைபெறவிருந்த நிலையில் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவிருந்தது. இதையடுத்து அம்பாந்தோட்டைப் பிரதேசத்தின் சில பகுதிகளில் நேற்று முன்தினம் முதல் 14 நாள்களுக்கு ஆர்ப்பாட்டங்களைநடத்துவதற்குநீதிமன்றம் தடை விதித்திருந்தது.

இந்த நிலையில் அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்துக்கான ஆரம்ப நிகழ்வை ஆரம்பித்து வைப்பதற்காக பிரதமர் ரணில்விக்கிரமசிங்கதலைமையிலான குழுவினர் நேற்று அம்

பக்கம் 23 »

## வடக்கு முதல்வருக்கு கனடாவில் வரவேற்பு



வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று சனிக்கிழமை பிற்பகல் கனடாவின் ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தைச் சென்றடைந்தார். மார்க்கம் நகரசபை சார்பில் லோகன் கணபதியும் கனடா அரசின் சார்பில் பிரம்டன் மேற்கு நாடாளுமன்ற உறுப்பினர் கமால் கேராவும் பூங்கொத்து வழங்கி அவரை வரவேற்றனர். (ம)

### ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை முடிவுகள்

## யாழ்.இந்து, வேம்படியில் தலா 25 மாணவருக்கு '3ஏ'!

யாழ்ப்பாணம், ஜன.08

நேற்று வெளியான ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சை முடிவுகளுக்கமைய யாழ். மாவட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி மற்றும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகியன தலா 25 '3ஏ' சித்திகளைப்பெற்றுமுன்னிலையில் உள்ளன.

பக்கம் 23 »

## அரசுக்கு எதிரான புதிய சக்தி தேவை!

### டலஸ் அழகப்பெரும அழைப்பு

கொழும்பு, ஜன.08

அரசின் அடக்குமுறை வேலைத்திட்டத்துக்கு எதிராகச் செயற்படுவதற்கு புதிய சக்தி ஒன்றின்தேவைஏற்பட்டுள்ளது என கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் பின்னர் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்

பக்கம் 23 »

## கண்ணீர்ப் புகைக்குண்டில் சிக்கினார் நாமல்



கொழும்பு, ஜன.08

அம்பாந்தோட்டையில்நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, முன்னாள் ஜனாதிபதியின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ மீது கண்ணீர்ப் புகை மற்றும் நீர்தாரைப் பிரயோக தாக்கு

பக்கம் 23 »

## அம்பாந்தோட்டை ஆர்ப்பாட்டம்; 52 பேர் கைது செய்யப்பட்டனர்!

கொழும்பு, ஜன.08

நேற்று நடைபெற்ற அம்பாந்தோட்டை முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கான ஆரம்பநிகழ்வுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நீதிமன்றத்தின்தடைஉத்தரவையும் மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் 52 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் அம்பாந்தோட்டையில்நேற்றுஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்

பக்கம் 23 »

## ஸ்கந்தா மாணவன் யதுர்சாயன் தேசிய மட்டத்தில் முதலிடம்

### பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில்



நேற்று வெளியான ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சை முடிவுகளின்படி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவன் கனகசுந்தரம் யதுர்சாயன் பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் '3ஏ' பெறுபேறுகளைப் பெற்றமையுடன் அகில இலங்கை ரீதியிலும், மாவட்ட மட்டத்திலும் முதலிடத்தைப் பெற்று, தனது கல்லூரிக்கும் யாழ். மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

## ஜனாதிபதி – ஆந்திர முதல்வர் சந்திப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டி இரண்டாம் வருடம் இன்று பூர்த்தியாகின்றமையை ஒட்டிய நிகழ்வில் அதிதியாகப் பங்குபற்றுவதற்காக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு கொழும்பு வந்துள்ளார். அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றுச் சந்தித்தபோது எடுத்த படம்.

## மானிப்பாய் இந்து குருபரேசன் தேசிய மட்டத்தில் 2ஆம் இடம்

### கலைத்துறை பாடத்திட்டத்தில்



நேற்று வெளிவந்த ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பெறுபேறுகளுக்கு அமைய மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் பத்மநாதன் குருபரேசன் கலைப் பிரிவில் தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தையும் தமிழ் மொழி மூலம் முதலாமிடத்தையும் மாவட்ட மட்டத்திலும் முதலிடத்தையும் பெற்றுள்ளார்.

### அளப்பு அருணாசலம்



அங்க காணி பிடிச்சா அவைக்கு வலிக்குற மாதிரி தானே இங்கயும் எங்களுக்கு...

Aaruthal
பாராட்டி வாழ்த்துகின்றோம்
கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களையும், உயர் பெறுபேறுகளைப் பெற்று பெருமை சேர்த்த மாணவர்களையும் வாழ்த்துவதோடு மேலும் சாதனைகளை நிலைநாட்ட வேண்டுமென்று வாழ்த்துவதில் ஆறுதல் நிறுவனம் பெருமை அடைகிறது.
(C-151)

# ஐ.நா.சபையின் அடுத்த அமர்வில் இலங்கைக்கு எதிரான பிரேரணை

*சென்னைச் சட்டத்தரணிகள் முயற்சி*

கொழும்பு,ஜன.08

ஐக்கிய நாடுகள் சபையின் அடுத்த அமர்வில் இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்றைக்கொண்டுவருவதற்கு சென்னையின் பிரபல சட்டத்தரணிகள் மற்றும் சட்டத்துறை அமைப்புகளின் உறுப்பினர்கள் முயற்சிகளை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கையின் அரசமைப்பின் 6ஆம் திருத்தத்திற்கு அமைய மக்களின் கருத்துச் சுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ளது. 18 மற்றும் 19ஆம் உறுப்புரைகள் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையை மீறுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதற்கு எதிராக பிரேரணையை ஒன்றைக் கொண்டுவருவது தொடர்பில் சென்னையைச் சேர்ந்த சட்டத்தரணிகள் நாளை மறுதினம் கூடி ஆராயவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணை தொடர்பிலான பணிகளை அமெரிக்காவின் முன்னாள் சட்ட மாஅதிபர் ராம்ஸே கிளார்க், சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.பி.சிவசுப்பிரமணியம் மற்றும் நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் விஸ்வநாதன் ருத்ரகுமாரன் ஆகியோர் முன்னெடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்படவுள்ள இந்தப் பிரேரணைக்கு ஆதரவு தருமாறு இலங்கை மற்றும் சர்வதேச சட்டத்தரணிகள், புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் உலகத்தமிழர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்ததின அறக்கொடை விழா நேற்று

*இரு வைத்தியசாலைகளுக்கும் 100 மாணவருக்கும் நிதியுதவி*




சுன்னாகம் ஜன.08

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மாஅப்பாக்குட்டியின்92 ஆவதுபிறந்ததினஅறக்கொடை விழா நேற்று சனிக்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மண்டபத்தில் இடம் பெற்றது

துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திருமதி ஜெயசிங்கம் புஸ்பலதா தம்பதிகளும் சிறப்பு விருந்தினராக இலங்கை சைவ வித்தியாவிருத்திச்சங்கத் தலைவர் சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம்கலந்துகொண்டார்கள்.

சிவத்தமிழ்ச் செல்வி நினைவாலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வழிபாட்டைத் தொடர்ந்து ஆசியுரைகளை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள், மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தான அறங்காவலர் சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்,நல்லைதிருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அமெரிக்கா ஆன்மீகச் சுடர் ரிஷிதொண்டுநாதன்சுவாமிகள் ஆகியோர் வழங்கினார்கள்.

பிறந்த நாள் அறக்கொடை வழங்கலில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பெண்கள் வைத்தியப் பிரிவுக்கு வழங்கப்பட் ஒரு இலட்சம் ரூபா நிதியை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கான ஒன்றரை லட்சம் ரூபா நிதியை வைத்திய கலாநிதி யோகேஸ்வரன் திவாகரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் 2017 இல் கற்கும் திறமையான, அத்துடன் உதவி தேவைப்படும் நூறு மாணவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. இதற்கான 2 லட்சம் ரூபா நிதியை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில்2017ஆம்ஆண்டுக்கான சிவத்தமிழ் விருதுகள் வைத்திய நிபுணர் சே.ஆனந்தராசா, நாதஸ்வரவித்துவான் எம்.பி.பாலகிருஷ்ணன், பண்டிதர் தி.பொன்னம்பலவாணர், பேராசிரியர் அ.சண்முகதாஸ், பண்டிதை திருமதி மகாதேவி பத்மநாதன் ஆகியோருக்கும் வழங்கப்பட்டன.

(ம-54)

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா கிளை நிர்வாகம் தெரிவு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட கிளையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்றுச் சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் குருமண்காட்டில் அமைந்துள்ள மாவட்ட காரியாலயத்தில் மாவட்ட கிளையின் தலைவரும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சருமாகிய ப.சத்தியலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது. புதிய தலைவராக மீண்டும் ப.சத்தியலிங்கம் தெரிவுசெய்யப்பட்டார். செயலாளராக சி.சிவசோதி தெரிவானார். நிர்வாகக் குழு உறுப்பினர்களாக 25 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

வவுனியா நகர், செட்டிகுளம், வவுனியா வடக்கு ஆகிய பிரிவுகளைச்சேர்ந்த பல அங்கத்தவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது வவுனியாவில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமாகிய இரா.சம்பந்தனின் உருவப்படம்விஷமிகளால்எரிக்கப்பட்டதற்கு வவுனியா மாவட்ட தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை சார்பில் ஏகமனதாகக் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (ம-100)

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பனை செய்ய மாட்டோம்

*அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு*

இலங்கை – சீன அபிவிருத்தி வலயம்தென்பகுதிமக்களுக்கு கிடைத்த மிகப் பெரு வெற்றி எனவும் அம்பாந்தோட்டை துறைமுகம் விற்பனைசெய்யப்படமாட்டாது எனவும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

துறைமுகத்திற்காக பெற்ற கடனை அடைப்பது மாத்திரமே இதன் ஊடாக நடக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டுஆண்டுகளில் ருகுணு அபிவிருத்தி வலயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எமக்கு இருந்த பிரச்சினைகளைத் தீர்த்து நாடு என்ற வகையில் உலகில் பிரபலமான மற்றுமொரு அபிவிருத்தித்திட்டத்தை ஆரம்பிக்க முடிந்துள்ளது.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பதில் கூறிக் கொண்டிருந்தால், பணிகளைச் செய்து முடிக்க முடியாது. துறைமுகத்துக்கான செலவு 197 மில்லியன் டொலர்.

இந்த கடனை எப்படி செலுத்துவது?

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில்தான் இந்த மாகம்புர துறைமுகத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

நாங்கள் துறைமுகத்தை விற்பனை செய்யமாட்டோம். கடன்அடைத்து,துறைமுகத்தை அபிவிருத்திசெய்யஉள்ளோம். முதலீட்டாளர்களுடன்இணைந்து இதனை மேற்கொள்கிறோம்.

கடந்த அரசாங்கத்தினால், செலுத்தமுடியாதுபோனகாணிகளுக்கான இழப்பீடுகளை நாங்கள் தற்போது செலுத்தி வருகின்றோம்.

இன்று நடந்த பேச்சு வெற்றியளித்துள்ளது. மக்களுக்கு சுமையை ஏற் றாமல் எம்மால் கடனைச் செலுத்த முடியும்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் கடனை கொழும்பு துறைமுகத்தின் வருமானத்தில் செலுத்தி வந்தோம். இதன் காரணமாக கொழும்பு துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய முடியாது போகும்.

இன்னும் சில வாரங்களில் அடிப்படை உடன்படிக்கையை கையெழுத்திட முடியும்.

இதுதெற்குபகுதிமக்களுக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி. இரண்டாயிரம்ஊழியர்கள்வரை தேவைப்படுகின்றனர். இதனால் எம்முடன் கைகோத்துக்கொள்ளுங்கள். – என அமைச்சர் ரணதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

# கீரை வியாபாரத்தில் ஈடுபட்டபோது தாக்கப்பட்ட சிறுமிக்கு நிதி உதவி

*அவரதும் சகோதரியினதும் கல்விச் செயற்பாட்டுக்காக*

சாவகச்சேரி பொதுச் சந்தையில்கீரைவியாபாரத்தில்ஈடுபட்ட சிறுமி மீது சக பெண் வியாபாரி தாக்கிய சம்பவம் சமூக ஆர்வலர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்திய நிலையில், அந்தச்சிறுமியினதும் அவரது சகோதரியினதும் கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவ சமூக அமைப்புகள்முன்வந்துள்ளன.

இதன் ஒரு கட்டமாக தாக்கப்பட்ட மாணவிக்கும் அவரின் சகோதரிக்கும் சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத்தினர் மாதாந்தம் நிதிக் கொடுப்பனவுகளை வழங்க முன்வந்துள்ளனர்.

மேற்படி மன்றத்தின் முன்னாள் தலைவர் நமசிவாயத்தின் 23 ஆம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு அந்த இரு மாணவிகளுக்குமான ஜனவரி மாதக் கொடுப்பனவை மன்றத் தலைவர்நமசிவாயம்சிவபாலன் வழங்கிவைத்தார்.

மாதாந்தம்தலா ஆயிரம் ரூபா வீதம் இவர்களின் பல்கலைக் கழக கல்வி வரை இக் கொடுப்பனவு வழங்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது. இவ் உதவித் தொகையை தென்மராட்சியில் உள்ள 36 மாணவர்கள் ஏற்கனவே பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-21)


## விஸ்டம் தொழில் நுட்பக்கல்லூரி

விஸ்டம்

இல-63, சிவன் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். 0772487774

பாராட்டி வாழ்த்துகின்றோம் 2016 (A/L தொழினுட்பப்பிரிவு)


K. Jathursajan (jaffna) E.TECH Island Rank - 01 Dist Rank - 01


Nilani R (jaffna) E.TECH Island Rank - 67 Dist Rank - 02


S. Vishnuvarathan (jaffna) E.TECH Island Rank - 104 Dist Rank - 04


K.Kalaiyamuthan (mullai) E.TECH Island Rank - 751 Dist Rank - 01


Y.Shainthan ( mullaii) E.TECH Island Rank -829 Dist Rank - 02


T.Sangeev (Trinco) E.TECH Island Rank - 253 Dist Rank - 01


P.Dillujan (Vavuniya) E.TECH Island Rank -559 Dist Rank - 01


I.Akimsha (Jaffna) B.TECH Island Rank - 06 Dist Rank - 01


Sujevathany V(jaffna) B.TECH Island Rank - 19 Dist Rank - 03


D.Judzy (Mullai) B.TECH Island Rank - 125 Dist Rank - 02


T.Dilojan (Killi) B.TECH Island Rank -77 Dist Rank - 02

E.TECH

| | Result | D.Rank |
|---|---|---|
| Krishalini Sellathurai | 3B | 6 |
| Jeyamohan Joel Jeyapprakash | A2B | 7 |
| Sempotsothy Piranavan | 3B | 9 |
| Thanabalaratnam Athavan | 2BC | 10 |
| Kandasamy Vijay | 2BC | 11 |
| Vithiya Rasanayagam | B2C | 13 |
| Purushalini Purusothman | 3C | 4 |

| | Result | D.Rank |
|---|---|---|
| Thanaventhan Malavan | B2C | 24 |
| Amirthalingam Gowthaman | 2BS | 27 |
| Renuka Kugan | 3C | 30 |
| Raveenthiran Ketheeswaran | B2C | 32 |
| Ganeshamoorthy Sarukan | 3C | 38 |
| Eruthayaseeli Eruthayarasa | 3C | 43 |
| Arasalingam Jude | 3C | 50 |

B.TECH

| | Result | D.Rank |
|---|---|---|
| K.Dilkki | A2B | 5 |
| T.Vithursan | ABC | 7 |
| J.Nithurshan | A2B | 8 |
| J.Noilin | A2B | 10 |
| G.Saraga | ABC | 12 |
| S.Pavitha | 3B | 13 |
| E.Thishanthini | 2BC | 14 |

| | Result | D.Rank |
|---|---|---|
| Rumesh | 3B | 16 |
| S.Lojana | ABC | 19 |
| Elini | 2BC | 21 |
| S.Vithusha | ABC | 22 |
| V.Nishanthini | ABC | 23 |
| S.Dayani | B2C | 24 |
| S.Tharshana | 2BC | 29 |
| T.Sankavi (Killi) | 3B | 4 |

# மைத்திரியின் நல்லாட்சி அரசு தானாகவே கவிழும் வாய்ப்பு

## திஸ்ஸ விதாரண எம்.பி. யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.08

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஆட்சியை கவிழ்க்க யாரும் தேவையில்லை. இந்த அரசில் காணப்படும் முரண்பாடுகள் காரணமாக ஆட்சி தானாகவே கவிழும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர், நேற்றுச் சனிக் கிழமை யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

இந்த அரசுக்குள் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றமை முழு நாட்டுக்கும் வெளிச்சமாகியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்கின்றனர். அதுமட்டுமின்றி ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களும் தமக்குள் முரண்பட்டுக் கொள்கின்றனர்.

எனவே, இந்த ஆட்சி நிலையற்ற ஆட்சி மாத்திரமின்றி, இந்த ஆட்சி நாட்டில் தொடர்ந்து நீடிக்கவும் முடியாது.

நாடாளுமன்றில் மாற்றங்கள் ஏற்பட்டு, நாடாளுமன்றினுள்ளேயே இந்த ஆட்சி உடையக் கூடும். மாறாக மக்களை ஒன்றிணைத்து இந்த ஆட்சியைக் கவிழ்க்க முயற்சிக்கத் தேவையில்லை.

இவ்வாறானதொரு நிலையற்ற, தேசத்துரோக, தேச விரோத அரசு ஒன்று இலங்கை வரலாற்றில் இதற்கு முன்னர் இருந்ததுமில்லை. இனி இந்த ஆட்சி நீடிக்கவும் கூடாது.



இந்த ஆட்சியை நாம் கவிழ்க்கத் தேவையில்லை. இந்த அரசாங்கத்தில் காணப்படும் பேதங்களால் ஆட்சி தானா கவே கவிழும்.- என்றார்.

(ஐ)





ஜனாதிபதி பதவியேற்று இரண்டு வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு இரத்ததானம் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுசிவில்பாதுகாப்புத்திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 30 அங்கத்தவர்கள் மாஞ்சோலை பொது வைத்தியசாலையில் உள்ள பிராந்திய இரத்த மத்திய நிலையத்தில் இரத்ததானம் வழங்கினர்.

இந்த நிகழ்வு நேற்றுக் காலை 9 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்திய சாலை இரத்த மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் உட்படச் சுமார் 30 பேர் இரத்த தானம் செய்தனர்.

இதன்போது இரத்த வங்கியின் பொறுப்பு வைத்தியர் ரஜித சிறிவர்த்தன ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

(ஐ)

## களவாடப்பட்ட பொருள்கள் மீட்பு

மட்டக்களப்பில் சந்தேக நபர்கள் இருவரிடம் பெறப்பட்ட வாக்கு மூலங்களின் அடிப்படையில் 4 ஸ்மாட் கைபேசிகள் மற்றும் 4 சைக்கிள்கள் என்பன நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பொலிஸாரால் மீட்கப்பட்டன.

மட்டக்களப்புபோதனா வைத்தியசாலையின் நோயாளி விடுதியிலிருந்து ஒருகைபேசிகள வாடப்பட்டமைதொடர்பாக பொலிஸ் நிலையத்தில் செயப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், ஏறாவூரைச் சேர்ந்த சந்தேகநபர் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பிரஸ்தாபநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்தே இவை மீட்கப்பட்டன.

பொலிஸாரால் மீட்கப்பட்ட சைக்கிள்களை உரிமையாளர்கள் உரிய ஆதாரங்களைக் காண்பித்து பெற்றுக்கொள்ளலாம் என குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரிசிந்திக்கவிஜேசிங்க தெரிவித்துள்ளார். (ச)

## வெப்பமான சுற்றுலா தளங்களில் இலங்கையும் பட்டியலிடப்பட்டது

கொழும்பு, ஜன.08

2017 ஆம் ஆண்டில் 20 வெப்பமான ஆடம்பர சுற்றுலா தளங்களில் ஒன்றாக இலங்கையும் பட்டியலிடப்பட்டுள்ளது.

ப்ளூம்பெர்க் வணிக ஊடக கூட்டமைப்பின் பட்டியலுக்குள்ளேயே இவ்வாறு இலங்கையும் இணைந்துள்ளது.

இலங்கையில் உச்ச பருவத்தில், சராசரி ஆடம்பர விடுதிக் கட்டணம் குறைந்த வரம்பிலேயே காணப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது மடகாஸ்கர், கொலம்பியா, பெரு மற்றும் இலங்கை ஆகிய நாடுகளே இந்தப் பருவத்தில் குறைந்த கட்டண வரம்பை அறவிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இலங்கை தொடர்பாகப் ப்ளூம்பெர்க் அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் குறைவான அளவு ஆடம்பர ஹோட்டல் தேர்வுகளே உள்ளமை மற்றும், தற்போது அங்கு உள்ளூர் தொழில் பயிற்சியாளர்களை நிரப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது குறித்தும் ப்ளூம்பெர்க் அவதானித்துள்ளது.

சுற்றுலா அதிகாரிகள் 2.2 மில்லியன் சுற்றுலா பயணிகளை இலக்கு வைத்த போதிலும், 2016ஆம் ஆண்டு இலங்கை 2 மில்லியன் சுற்றுலா பயணிகளை ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

## கசிப்பு வைத்திருந்த இருவர் கைது

கிண்ணியா ஆலங்கேணிப் பகுதியில் கசிப்பு வைத்திருந்த இருவரை நேற்றுக் காலை பொலிஸார் கைதுசெய்தனர்.

பிரஸ்தாப நபர்களிடம் இருந்து கசிப்பு வடிக்க வைத்திருந்த பொருள்களுடன், 8ஆயிரத்து25மில்லி லீற்றர்கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

கிண்ணியா பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலை அடுத்தே இந்தக் கைது இடம் பெற்றது. (ச)

## பட்டப் போட்டியில் பங்கு கொள்ளலாம்

சுன்னாகம், ஜன.08

துள்ளுமீன் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் பருத்தித்துறை நகர அபிவிருத்தி ஒன்றியத்தால் பட்டம் ஏற்றல் போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டி பொங்கல் தினமான எதிர்வரும் 14ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு பருத்தித்துறை நடராஜா திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விருப்புவோர் பருத்தித்துறை சண் டிஜிட் டல் நிறுவனம் அல்லது பருத்தித்துறை நியூவே சொப்பிங் சென்ரர் நிலையத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-54)


## திருமறைக் கலாமன்றம் கலைத்தூது அழகியல் கல்லூரி

எமது கல்லூரியால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான 2017 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

### பிரதான பாடங்கள்

★ வாய்ப்பாட்டு ★ நடனம் (பரதம், கதகளி, மோகினி)
★ வீணை ★ வயலின் ★ புல்லாங்குழல்
★ மிருதங்கம் ★ ஓர்கன் (கீபோட்) ★ கிற்றார் ★ ட்றம்
★ ஒக்ரோபாட் ★ சித்திரம் ★ நாடகமும் அரங்கியலும்

### சிறப்புப் பாடங்கள்

★ கூத்து ★ கண்டிய நடனம் ★ யோகாசனம்
★ அழகுக்கலை (முக ஒப்பனை, தலையலங்காரம், கேக் ஐசிங், சேலை அலங்காரம், தையல்)
★ பண்பாடு (கிறிஸ்தவக் கலைகள், சைவசித்தாந்தம்)

### துணைப்பாடம்

★ ஆங்கிலம்

இப்பாடங்களைப் பயில விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து 25.01.2017 புதன்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.

(C/152)

மேலதிக விவரங்களுக்கும் தொடர்புகளுக்கும்

அதிபர்,
கலைத்தூது அழகியல் கல்லூரி
இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 9419

## கனரக வாகன சாரதி தேவை

கனரக வாகன சாரதி தேவை. அதற்குரிய சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் - வெளிமாவட்டங்களுக்குச் சென்று வரக் கூடிய - சாரதிகள் உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு இல:- 021 222 3344 0766953339

(C/203)

## பிறந்ததின வாழ்த்து

67 ஆவது அகவை காணும் அன்பர் முன்னாள் பூநகரி பிரதேச சபைத் தலைவர்

**பொன்னம்பலம் ஸ்ரீஸ்கந்தராசா**



அவர்கள் குடும்ப நலனிலும், தொழில் வாண்மையிலும் பொது சமூக சேவைகளிலும் பெற்ற அனுபவத்தை தொடர்ந்து பிரயோகித்து மிளிர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவஞான சுந்தரம் சுபேந்திரன்
பூநகரி மக்கள் சார்பாக
பிரதேச சபை, பூநகரி.

(C/202)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## காலத்தே பயிர் செய்யத் தவறின்...!

'காலத்தே பயிர் செய்' என்பார்கள். உரிய காலத்தில் - உரிய சமயத்தில் - பயிர் செய்தால்தான் விளைச்சல் கிட்டும். இல்லையேல் வீண் விரயமாகும் - இதுதான் நியதி.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிக்கு மட்டுமல்ல, எல்லா அரசியல் எத்தனங்களுக்கும் கூட இந்த முதுமொழி பொருந்தும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற தேர்தல் விஞ்ஞாபன அறிவிப்போடு 2001 டிசெம்பரில் ஆட்சிக் கட்டிலுக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவின் அப்போதைய அரசு, புலிகளுடன் பேசித் தீர்வு காணும் விடயத்தில் காலமறிந்து செயற்படவில்லை. இரு தரப்புகளுமே காலத்தை இழுத்தடித்தன. விளைவு - சமாதான முயற்சிகள் அவமாகின.

2001 டிசெம்பரில் பொதுத் தேர்தல் நடந்தபோது, அவ்வேளையில் யுத்தமுனைப்பில் நின்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசை நிராகரித்த சிங்கள மக்கள், சமாதான விருப்போடு தம்மை அடையாளப்படுத்திய ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கட்சியை ஆட்சிக் கட்டில் ஏற்றினர்.

மக்களின் ஆணை கிடைத்த அந்தக் கையோடே - சூட்டோடு சூடாக - சமாதான முன் முயற்சிகளை நகர்த்தி, வெற்றி காண்பதை விடுத்து, குறுகிய அரசியல் இலாபங்களை இலக்கு வைத்துக் காலத்தை இழுத்தடித்து காரியங்கள் ஒப்பேற்றப்பட்டன.

காலத்தே பயிர் செய்யத் தவறி இரண்டு வருடங்களை இழுத்தடித்ததால், கள நிலைமை மாறியது. போரின் அழுத்தத்தால் துவண்டு, பாதிப்புற்றிருந்த தென்னிலங்கைச் சிங்களம், அந்த வலியைத் தாங்கமுடியாது சமாதானப் புறாவை வரவேற்றிருந்தது. ஆனால், இரண்டு வருட கால ஆசுவாசம் தென்னிலங்கையின் மனநிலைக் கருத்தைப் புரட்டிப் போட்டது.

2001 டிசெம்பரில் சமாதான முயற்சிகளுக்காக வாக்களித்து ரணிலை அரியணை ஏற்றிய சிங்களம், 2004 ஏப்ரலில் - சரியாக இரண்டரை வருடத்துக்குள் - போர் வெறிகொண்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. கூட்டுக்கு ஆதரவு நல்கி, ரணிலின் அரசைக் குப்பையில் வீசியது.

காலத்தே பயிர் செய்யத் தவறியதால் அந்தச் சமாதான முயற்சி வீணாயிற்று.

இப்போதும் அதுதான் நிலைமையோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

2015 ஜனவரி 08 ஆம் திகதி - சரியாக இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் - நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை இலங்கை மக்கள் வீட்டுக்கு அனுப்பினர். எதிரணியின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதிப் பதவியில் அமர்த்தினர்.

ஆட்சிக்கு - அதிகாரத்துக்கு - வந்த கையோடே தமக்குத் தேவையான விடயங்களில் 'காலத்தே பயிர் செய்ய' மைத்திரி தவறவில்லை.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு தடவைகளோடு கட்டுப்படுத்தல், நீதித்துறை உட்பட பல்வேறு அரச துறைகளின் நிர்வாகங்கள் மீதான நிறைவேற்று அதிகாரத்தின் அதீத செல்வாக்கை நீக்கும் விதத்தில் ஆணைக்குழுக்களை நியமித்தல் முதலியவை அடங்கிய அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தம் மளமளவென்று கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்க உதவிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு இராணுவச் சேவைத் தரம் மீள வழங்கப்பட்டமையுடன் அவர் நான்கு நட்சத்திர ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டார்.

மஹிந்த ராஜபக்ஷவின் காட்டுத்தர்பார் அரசினால் பலவந்தமாகப் பதவியில் இருந்து துரத்தப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு நீதி செய்யும் விதத்தில் மீண்டும் பதவிக் கதிரைக்கு அவர் வந்தமர்ந்து, அதில் இருந்து கௌரவமாக ஓய்வுபெறுகின்றமைக்கு வழி செய்யப்பட்டது.

இவையெல்லாம் 'காலமறிந்து பயிர் செய்யும்' விடயங்களாக ஒப்பேற்றப்பட்டன.

ஆனால், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்களுக்கு செய்ய வேண்டியன செய்யப்படாமல் காலம் தப்பி நீளுகின்றன.

மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து பொதுமக்களின் காணிகளை விடுவித்தல், காணாமற்போனோர் விவகாரம், அரசியல் கைதிகளை விடுவித்தல் என்று தொடங்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஏற்பாடுகள் வரை எதுவும் பருவத்தே செய்யப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றன.

இந்தக் கால இழுத்தடிப்பு இங்கு களப் புறச் சூழலைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டிருப்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

பொதுபலசேனா, இராவண பலய, சிங்க லே என்று சிறு அலையாக ஆரம்பித்த தென்னிலங்கைப் பேரினவாதம் இப்போது 'சுனாமி' போல ஆழிப்பேரலையாக கிளம்பும் ஏதுக்கள் தென்பட்டுள்ளன.

தென்னிலங்கைப் பௌத்த பீடங்களின் பீடாதிபதிகளுக்கு அடுத்த நிலையிலுள்ள பௌத்த மதத் தலைவர்கள் கடந்த வியாழனன்று கண்டியில் கூடி, தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிரும் ஏற்பாட்டுக்கு எதிராக விடுத்திருக்கும் சூளுரை அதனையே காட்டுக்கின்றது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த கையோடு - காலத்தை இழுத்தடிக்காமல் - செய்திருக்க வேண்டிய வேலையை - தாமதித்து, இழுபடவிட்டதன் விளைவுதான் இது. காலத்தே பயிர் செய்யத் தவறியதால் ஏற்படப்போகும் அனர்த்தத்திற்கு பிக்குகளின் கண்டிக் கூட்ட முழக்கம் கட்டியம் கூறலன்றி வேறில்லை.



# இன ஐக்கியத்தை விரும்புவோருக்கு ஏமாற்றம் தந்துள்ளது மைத்திரி அரசு

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.08

இனவாதிகளின் நடவடிக்கைகளை அங்கீகரித்து ஒத்துழைக்கும் வகையில் மைத்திரி தலைமையிலான அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இன ஐக்கியத்தையும் சுக வாழ்வையும் விரும்பும் அத்தனை பேரையும் ஏமாற்றம் அடையச் செய்துள்ளது. இனவாதிகளுக்கு மஹிந்த அரசு மறைமுகமாக வழங்கிய ஆதரவை மைத்திரியின் அரசு தற்போது வெளிப்படையாக வழங்கத் தொடங்கியிருக்கின்றது.

இவ்வாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் அப்துர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக இலங்கையில் இனவாத சக்திகளோடு அரசு கொண்டிருக்கும் உறவுகள் அவர்களின் விருப்பத்துக்கு ஏற்ப அரசு மேற்கொண்டுள்ள தீர்மானங்கள் தொடர்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஆட்சி மாற்றத்துக்காக வாக்களித்த மக்கள் இந்த அரசிடம் பல முக்கிய விடயங்களை எதிர்பார்த்தார்கள். ஊழல் மோசடிக்காரர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பது மக்களின் பிரதான எதிர்பார்ப்பாக இருந்தது. இந்த விடயத்தில் தனது கடமையைச் செய்வதற்கு இந்த அரசு தவறியிருக்கிறது. நாட்டின் சொத்துக்களைக் கொள்ளையடித்தவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை அரசியல் பேரம் பேசலுக்கான ஒன்றாகவே இந்த அரசு பயன்படுத்தியிருக்கிறது. சட்டத்தை மீறி வன்முறைகளைத் தூண்டி, அரச அதிகாரிகளையும் அச்சுறுத்தியவர்களை அவர்களின் காலடிகளுக்கே தேடிச் சென்று, அவர்களின் செயற்பாடுகளை நியாயப்படுத்தும் அறிக்கைகளை இந்த நாட்டின் நீதியமைச்சரே செய்யும் போது மக்கள் யாரிடம் நீதியை எதிர்பார்க்க முடியும்.

முஸ்லிம்களுக்குச் சொந்தமான, பல தசாப்தங்கள் பழைமைவாய்ந்த மத பாரம்பரிய கலாசார தலங்களை இல்லாது ஒழிப்பதற்கான செயற்பாடுகளும் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தொல்பொருள் பாதுகாப்பு என்கின்ற போலியான காரணம் இதற்கு பயன்படுத்தப்படுகின்றது. இதற்குத் தற்போதைய அரசும் உடந்தையாக இருக்கிறது.

குறுங்கால அரசியல் இலாபங்களுக்காக இனவாத சக்திகளை அரவணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மைத்திரி அரசு ஒன்றை மறந்து விடக்கூடாது.

இனவாதம், மொழிவாதம் மற்றும் பிரிவினை வாதம் என்பனவற்றை இந்த நாட்டில் தமது அரசியல் நோக்கங்களுக்காக முன்னெடுத்தவர்கள் யாவரும் இறுதியில் தோல்வியையே சந்தித்தார்கள்.

மஹிந்தவின் தோல்வி அதற்கான மிக அண்மைய உதாரணமாகும். ஆட்சி மாற்றத்துக்காக மக்கள் வாக்களித்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகும் இந்தத் தருணத்தில் மக்கள் ஏன் மஹிந்தவை தோற்கடித்தார்கள் என்பதையும், ஏன் மைத்திரிக்கு ஆதரவு வழங்கினார்கள் என்பதையும் சிந்தித்துப் பார்த்து தமது நடவடிக்கைகளை மீள்பரிசீலனைக்கு உட்படுத்த அரசு உடனடியாக முன்வரவேண்டும்.- என்றுள்ளது. (ச)

# அம்பாறையில் டெங்கு நோயால் இதுவரை 5 பேர் உயிரிழப்பு

## கடந்த வருட புள்ளி விவரத் தகவல்

அம்பாறை, ஜன.08

நாடளாவிய ரீதியில் 10 மாவட்டங்கள் டெங்கு நோயால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் அம்பாறை மாவட்டம் 10 ஆவது இடத்தில் உள்ளது. கடந்த வருடம் அம்பாறை மாவட்டத்தில் டெங்கு நோயால் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

-இவ்வாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். மொஹமட் நஸீர் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை காரியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கல்முனை சுகாதார சேவைகள் பணிமனை வலயத்தின் கீழுள்ள பிரதேசங்களில் 3 பேரும், அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழுள்ள பகுதிகளில் 2 பேரும் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர்.

கல்முனை தெற்கு, சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களில் டெங்கு நோய் தாக்கம் அதிகமாக உள்ளன. இதனால் இந்தப் பகுதிகளில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, மத்திய சுகாதார அமைச்சு ஆகியன இணைந்து டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கான நிதியை வழங்கவுள்ளன.

சுகாதாரத்துறை மாத்திரமன்றி அனைத்துத் திணைக்களங்களும் ஒத்துழைத்தால் தான் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியும்.- என்றார். (ச)

### நாளை

09.01.2017
திங்கட்கிழமை
நட்சத்திரம்: கார்த்திகை மு.ப. 8.24 வரை
திதி: துவாதசி பி.இ. 12.23 வரை
சுபநேரம் : 12.32 – 02.02
இராகுகாலம் : 8.02 – 9.32

# கடற்றொழில் பரிசோதகர் அலுவலகத்தை வடமராட்சி கிழக்கில் இயக்கக் கோரிக்கை

வெற்றிலைக்கேணி, ஜன.08

வடமராட்சி கிழக்கு கடற்றொழில் பரிசோதகர் அலுவலகத்தைப் புனரமைத்து மீண்டும் தினந்தோறும் சேவையை வழங்க முன்வர வேண்டும் என்று கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது கடற்றொழில் பரிசோதகர் வாரத்தில் ஒருநாள் மட்டும் வடமராட்சி கிழக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் அலுவலகத்தில் தனது கடமைகளை மேற்கொள்கின்றார்.

இந்தச் சேவை போதாமல் உள்ளது என்று கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சிக் கிழக்குக் கடல் பிரதேசத்தில் இடம்பெறும் சட்ட விரோதமான தொழில் நடவடிக்கைகளை உடனுக்குடன் கட்டுப்படுத்தவும் கடல்தொழிலாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ளவும் இயங்கா நிலையில் பற்றைக் காடாக உள்ள கடற்றொழில் பரிசோதகர் அலுவலகத்தை உடனடியாக இயக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



இதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-35)

# குற்றச் செய்திகள்

கசிப்பு விற்பனை செய்த நால்வருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து 290 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த நால்வருக்கு 26ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் மல்லாகம் நீதிவான் ரீ.கருணாகரன். நால்வரும் தலா 180 மில்லி லீற்றர் கசிப்புடன் கைதாகினர்.

இவர்களில் சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த மூவருக்கு 21 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. அதேபோல் 750 மில்லி லீற்றர் கசிப்புடன் கைதான சுழிபுரம் வடக்கு, சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதே வேளை, 180 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்தவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் மயிலங்காடு பகுதியில் 180 மில்லி லீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார் மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன். அத்துடன் பறிமுதல் செய்த கசிப்பை அழிக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

கடந்த வருட இறுதி காலப் பகுதியில் மயிலங்காடு பகுதிக்குச் சென்ற சுன்னாகம் பொலிஸார் 180 மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்த நபரைக் கைது செய்திருந்தனர். அந்த நபருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரம் மன்றில் வாசிக்கப் பட்டது. அவர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டமையை அடுத்து 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

★ ★ ★

அனுமதிப் பத்திரத்தில் உள்ள நிபந்தனையை மீறி டிப்பர் வாகனத்தில் மண் ஏற்றிச் சென்ற சாரதிக்கு 20ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார் சாவகச்சேரி நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன். அத்துடன் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்ட மண்ணையும் வாகனத்தையும் மீளவும் ஒப்படைக்க கொடிகாமம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். கடந்த வாரம் மீசாலை பகுதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனத்தைப் பொலிஸார் மறித்து சோதனை மேற்கொண்டனர். இதன் போது வழங்கப்பட்ட நேரத்துக்குள் மண் ஏற்றி வராமல் நேரம் மாறி வந்த குற்றச்சாட்டில் குறித்த டிப்பர் சாரதிக்கு எதிராகக் கொடிகாமம் பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## உயர்தரப் பெறுபேறு மீள் திருத்தத்துக்கு 23 ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்குக!

2016 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ள நிலையில், பெறுபேறுகளை மீள் திருத்துவதற்கு ஜனவரி 23 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. பாடசாலை மாணவர்களுக்கான மீள் திருத்தும் விண்ணப்பப் பத்திரம், பெறுபேறுகளுடன் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் எதிர்வரும் நாள்களில் தேசிய பத்திரிகைகள் ஊடாக வெளியிடப்படும் விளம்பரத்தின்படி விண்ணப்பபத்திரத்தைப் பூர்த்தி செய்து அனுப்புமாறு பரீட்சைகள் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# மைத்திரி ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவில் வழிபாடு



கொழும்பு, ஜன.08

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இரண்டு வருட பதவி பூர்த்தியை முன்னிட்டு ஜனாதிபதிக்கும், நாட்டு மக்களுக்கும் நல்லாசி வேண்டியும், மழை வேண்டியும் பிரித் பாராயணம் ஒன்று நேற்று முன்தினம் இரவு ஹட்டன் டிக்கோயா நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நுவரெலியா மாவட்ட அமைப்பாளர்களான டபிள்யூ.ஜே.ரணசிங்க மற்றும் தர்மபிரியவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பிரித் பாராயணத்துக்குத் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர்.

மத்திய மாகாணத்தில் நிலவும் வறட்சியான காலநிலையை அடுத்து ஆறுகள், ஓடைகள், நீரூற்றுகள், நீர்த்தேக்கங்கள் ஆகியவை வற்றிப் போய் உள்ளன.

எனவே, மழை வேண்டியும் இந்தப் பாராயணத்தில் விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றன. பிரித் பாராயணத்தில் வைத்து பிரார்த்தனை செய்யப்பட்ட புனித நீர், நீர்த்தேக்கங்களிலும், நீரேந்தும் பிரதேசங்களிலும் தெளிக்கப்பட்டன.

சுமார் 16 பௌத்த மதகுருமார்கள் கலந்து கொண்டு இந்தப் பிரித் பாராயணத்தை நடத்தி வைத்தனர். (ஐ)

# கடலட்டை கடத்த முயன்ற இருவர் கைது!

வவுனியா - முல்லைக்குளம் கடற்பகுதியில் சட்ட விரோதமான முறையில் சுறா இறக்கைகள் மற்றும் கடலட்டைகள் கடத்த முயன்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைதானவர்களிடமிருந்து 694 கிலோ கிராம் சுறா இறக்கைகள் மற்றும் 367 கிலோகிராம் கடலட்டைகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப் படுகின்றது. குறித்த நபர்களிடமிருந்து படகு மற்றும் ஜி.பி.எஸ். கருவியும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. இதேவேளை, மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பண மோசடி செய்தவருக்கு 12 லட்சம் ரூபா ஆள் பிணை

4 லட்சத்து 63 ஆயிரம் ரூபா பண மோசடி செய்த சந்தேக நபருக்கு 12 லட்சம் ரூபா பிணை வழங்கப்பட்டுள்ளது.

பணத்தைப் பெற்றுவிட்டு நம்பிக்கை மோசடி செய்த குற்றச் சாட்டில் கைதான அல்வாய் பகுதியைச் சேர்ந்த நபருக்கே இந்தப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

தலா 4 லட்சம் ரூபா பெறுமதியான 3 ஆட்பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாதிக் கப்பட்ட நபர் கொடிகாமம் பகுதியில் கடை ஒன்றை நடத்தி வருகின்றார். அவரிடம் சந்தேக நபர் 4 லட்சத்து 63 ஆயிரம் ரூபா பணத்தைக் கடனாகப் பெற்றுள்ளார். பணம் வாங்கியவர் அதனைத் திரும்பக் கொடுக்காமல் இழுத் தடிப்புச் செய்து வந்துள்ளார். அத்துடன் நீண்ட காலம் ஏமாற்றியுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட நபர் கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த வழக்கில் சந்தேக நபர், பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக ஒரு லட்சம் ரூபா வழங்குவதாகவும், மாதம் தோறும் 50 ஆயிரம் ரூபா வழங்குவதாகவும் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, தலா 4 லட்சம் ரூபா பெறுமதியான 3 ஆள் பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-9)

புதிய பட்டதாரிகளுக்கு வாழ்த்துக்கள்
நாளை மறுதினமும் அடுத்த நாளும்
யாழ்.பல்கலைக்கழகத்தில்
புதிய பட்டதாரிகளாகக்
கௌரவம் பெறும்
அனைவரையும் வாழ்த்துவதில்
காலைக்கதிர் Kalaikkathir
மகிழ்வுடைகின்றது
பட்டதாரிகளாகும் உங்கள்
நண்பர்கள், உறவினர்கள்,
மதிப்பார்ந்த அன்பர்களை
வாழ்த்துவதற்கு மிகக் குறைந்த
சலுகைக் கட்டணத்தில்
காலைக்கதிர் Kalaikkathir
வாய்ப்பளிக்கின்றது
தொடர்புகளுக்கு: விளம்பர முகாமையாளர்,
இல. 30, கஸ்தூரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 3000
021 222 2600

# சில பாடசாலைகளின் உ/த. பரீட்சைப் பெறுபேறுகள்

நேற்று வெளியானஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி சில பாடசாலைகளுக்குக் கிடைத்த விவரங்கள் வருமாறு:-

கிடைக்கப்பெறும்ஏனைய பாடசாலைகளின்விவரங்கள் தொடர்ந்து பிரசுரமாகும்.

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**கணிதத்துறை**

**3ஏ சித்தி பெற்றோர்**

கஜரோகணன் கஜானன், இராவீந்திரன்பானுப்பிரியன், சிவபாலன்சங்கீர்த்தன், செல்வரத்தினம் லாவர்த்தன், கனகலிங்கம் சங்கீத், சிவபாதசுந்தரம் மதுரிகன், பேராதரன் சுகேதன், தேவகுமாரன்றஜிந்தன், பரமேஸ்வரன் ரசீதன், சிவனேஸ்வரன் துவாரகன், பாலசுந்தரம் ஆர்த்தீபன், மயில்வாகனம் திலக்சன், கணேசலிங்கம்அருட்சங்கர், சிவகுமார்கார்த்திக், லிங்கரட்ணம் சுபகரன், இரவீந்திரன் ஆரூரன், யோகஸ்வரலிங்கம் ரவிதர்சன், சிவ குமார்சிவசங்கர்.

**உயிரியல்துறை - 3ஏ சித்தி பெற்றோர்** - திருஞானசம்பந்தன் ஆகாசன், யோகேந்திர ராசாசாகித்தியன், திருமாறன் இளமாறன், பத்மநாதன் மேஷிகன், ஜெயக்குமார் லக்சுஜன், சிவதாசன் தர்மிகன், குகநாதன் பிரியதர்சன்.

**கணிதத்துறை - 2ஏ,பி சித்தி பெற்றோர்** - சிற்றம்பலம் சூரியகுமார், முருகேசப்பிள்ளை டினேஸ்குமார், சிவ ஞானம் துவாரகன், வெற்றிவேல்நிசோதன், விஜயகுமார் தர்சனன், சிறிநிவாசன் சாருஜன், சுரேஸ்குமார்சிந்துஜன், செந்தில்குமரன் சுகன்யன், கதிரவேல் துலாஞ்சன், லெஸ்லி பாஸ்கரதேவன் கோபிநாத், சந்திரகுமார் கஜன், இலட்சுமணகுமார் டிலக்சிகன், மூர்த்தி கௌதமன்.

**உயிரியல் துறை - 2ஏ,பி சித்தி பெற்றோர்** - சத்தியசீலன் கோகுலன், கண்ணநாதன் பிரணவன், சிறீகாந்தராஜா விஜயசாந், தர்மானந்தசிவம் நவீனன், பாலசுந்தரம் தருசன், மாப்பாணப்பிள்ளை சாருஜன், யோகேஸ்வரன் சுவஸ்திகன்.

**வர்த்தகத்துறை -**
இ.தர்சனன் 2ஏ,பி.

**கலைத்துறை -**
வி.சாரங்கன் 2ஏ,பி.

**பொறியியல் தொழில்நுட்பம்**
சிறிதரன் விஷ்ணுவர்த்தன் - ஏ, பி, சி.

**உயிர்முறைமைகள் தொழில் நுட்பம்** - தனபாலன் விதுர்சன் - ஏ, பி, சி, ஜெயந்திரன் நிதுர்சன் - ஏ, 2பி.

## நெல்லியடி மத்திய கல்லூரி

**உயிரியல்** - தர்மராஜா நிரோசன் - 2ஏ,பி,விஜயரட்ணம் தனன் - 2ஏ,பி, சண்முகநாதன் விதுர்சா- 3பி, கிருஷ்ணகுமார் அபிரா - ஏ,பி,சி,சுப்பிரமணியக்குருக்கள் வைஸ்ணவி - ஏ,பி,சி, புஸ்பராசா கம்சன் - ஏ,பி,சி, லோகேஸ்வரன் விதுர்சா - 2பி, சி, பரமேஸ்வரன் நிருஷன் - 2பி, சி, நேசரட்ணம் உஜானா - 2பி, சி, மகாகணபதி ஆரணி - 2பி, சி.

**கணிதத்துறை** - லிங்கரட்ணம் ஜெயசுதா 3ஏ, விக்னராஜா அஜந்தன் - 3ஏ, பாலகிருஷ்ணன் வினித்குமார் - 2ஏ,சி, பரராஜசிங்கம் ராம்ஜி ஏ,2பி, யோகலிங்கம்சுயந்தன் - ஏ,2பி, கிருஸ்ணமூர்த்தி அபிநயன்3பி, தபேந்திரராஜா அஜிந்தன் - 3பி, மனோகரன் துசிதா - 2பி, சி, குலச்சந்திரன் கிருசாந் - 2பி, சி, தனபாலசிங்கம் தனுசிகா - 2பி,சி, சுப்பிரமணியம் ஆர்த்திகாயினி - பி,2சி, செவ்வேல் சுகனவேல் - பி,2சி, சுபேந்திரன் நதிருசன் - பி,சி,எஸ்.

**வர்த்தகம்** - பிரபாகரன் அனிந்திதை - 3ஏ, தர்மரத்தினம் யாழினி - 3ஏ, யோகன் நிரூஜா - 3ஏ, ஞானரத்தினம் விஜிகரன் - 2ஏ,பி, சிவனேஸ்வரன் விதுஷன் - ஏ,2பி, குகதாசன் மதுஷானி - 3பி, சிவப்பிரகாசம் லக்ஷன் -2பி, சி, வேலும்மயிலும் வேணுகா - பி, 2சி.

**கலை** - ஜோதீஸ்வரன்ஹம்சத்வனி - 3ஏ, சிவராஜாதர்சன் - 2ஏ,பி,பரஞ்சோதி சிற்சபேசன் -ஏ,2பி, கிருஸ்ணதாஸ் கிருஷாந்தன் - ஏ, 2பி.

**உயிர்முறைமைகள் தொழில் நுட்பம்** - யோகராஜா பிரதீப் - 3பி, லக்னேஸ்வரன்கீர்த்திகா 2பி, சி, சிவநாதன் பவித்திரா - ஏ, 2சி, சிவநாதன் அபிநயா - பி, 2சி.

**பொறிமுறைத்தொழில்நுட்பம்** - சண்முகராஜா நரேஷ் - பி, 2சி, தியாகராஜா சிவராம் - ஏ, 2சி, யோகராசா யாழவன் - 2பி, சி, அற்புதராஜா குகதாஸ் - 3சி, குகராசா அஜித்தா - 3சி, அருந்தவராசா திருபரன் - பி,சி,எஸ், செல்லத்துரை பாமிசன் - 2சி, எஸ்.

## வட்டு. இந்துக் கல்லூரி

**கணிதம்**-யோ.பிரசாந்தன்-3ஏ, வி.ஜீவப்பிரியந்தன் -3ஏ, பி.பிரசாந் - 2ஏ,பி, சி. நிறோசன் - ஏ,2பி, சி.கிரிசாந்- ஏ,2பி,ஜெ. றொசான் - ஏ,2சி, க.பிரசாந் - ஏ,2சி, கு.நிறோஜன் - பி,2சி, சே.அனுசன் - 3சி, ஆ.அஜீபா - ஏ,2எஸ், ந.விமல்ராஜ் - 3சி, பு.மனோஜா - பி2எஸ், தே.மிதுசன் - 2சி,எஸ், து.சசிகரன் -2சி,எஸ், நே.பிரதீபன் - 2சி,எஸ்.

**உயிரியல் பிரிவு** - ம.விவிதாரணி - ஏ,2பி, கி.கோபிராஜ்- 2பி,சி, பி.ரிசிகாந்தி - பி,2சி, நா.சங்கவி - பி,2சி.

**கலைப்பிரிவு**- கு.தர்சிகா - 3ஏ, பு.சதீஸ்கரன் - ஏ,பி,சி, ச.சுகன்யா -ஏ,பி,சி, சி.மிதிலா - 2பி,சி, ஜீ.கௌசிகா - 2பி,சி.

**வணிகம்**-ஜெ.நிதர்சிகா-3ஏ, இ.லுக்சனா - 3ஏ, ம.யசோதை - 2ஏ,சி, க.நளாயினி - ஏ,பி,சி.

**பொறிமுறைத் தொழில் நுட்பவியல்** - அ.தக்சயன் - 3பி, ஐ.மதுசன் - 2பி,சி, க. ஆதவன் - பி,2சி, க.ரஜீவன் - 3சி, த.றொசாந் -3சி.

**உயிர்முறைத் தொழில் நுட்பவியல்** - ம.எழிலினி - 2பி,சி, த.கனிஸ்ரிகா - பி,2சி, கை.பவதாரணி - பி,2எஸ், செ.பவிசா - 3சி, எஸ்.கிரிசாந்தி - 3சி, எஸ். லக்சனா-3சி, க.கவிதா - பி,2சி, தாட்சாயனி - 2பி,சி.

**பொது (ICT)** - தி.லோஜினி - பி,2சி, கி.மகிபன் - 2சி,எஸ், உ.உமைரதன் - 2சி,எஸ்.

## சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி

**பொறியியல் தொழினுட்பம்** - கே.யதுசாயன் - 3 ஏ, ஜோயல் ஜெயபிரகாஷ் ஏ, 2 பி, ஏ.ஜுட் 3 சி, என்.கானுஜன் 2சி, எஸ்.

**கணித, விஞ்ஞானப் பிரிவு** - அ.கோகுலன் 3 ஏ, சி.ஆரமுதன் 3 பி, அ.காண்டீபன் 2பி,சி, பி.கோவர்த்தனன் 2 பி,சி, ரி.துஷ்யந்தா பி, 2 சி, ரி.சமித்தா பி, 2 சி, பி.கீர்த்தனா பி,சி, எஸ்., எஸ்.ராதிகா 3 சி.

**கலை, வர்த்தகப் பிரிவு**
கே.விஜிதா 2ஏ, பி, பி.மிந்தலா 3பி, எஸ்.கீர்த்தனா 3பி.

## வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

**விஞ்ஞானம்** - உ.சகானா -2ஏ,பி, பி.சர்மிளா - 2ஏ,பி, மு.வெண்ணிலா - ஏ,2பி, க.ரூபினி -ஏ,பி,சி, கு.ரஜிலதா -2பி,சி, பா.நர்மதா- பி,2சி, ஞா.தர்சினி -2சி,எஸ், ச.டிலோஜி - 2சி,எஸ், சி. நீரஜா- 2சி,எஸ், செ.தர்சினி-2சி,எஸ்,ம.மாதுமை - சி,2எஸ், செ.விஸ்ணுப்பிரியா -2சி,எஸ், செ.விஸ்ணுமீரா - சி, 2எஸ்,இ.கேதாரகௌரி-3எஸ்.

**கணிதம்** - கா.கீர்த்தனா - 2ஏ, பி, ஜெ.ஜதுஷா - 3 எஸ், க. நிதுசா - 3 எஸ், ம. கனிஸ்ரா - பி,சி,எஸ், இ. மதுஷனா- 3 எஸ், செ.சர்மினி - சி,2 எஸ், சி.நிருபா- 3எஸ்,சி.கீர்த் தனா - ஏ, 2சி, அ.மோகனா - ஏ, 2சி, கா. கிருஷாளினி - சி, 2எஸ், பி.சர்மிளா - 2ஏ, பி, சி, டிலக்சினி - சி, 2எஸ், சி. கோகிலா - 2 பி, சி, த.நிதர்சினி - 3 சி, வீ. கஜிதா - 2சி, எஸ்.

**வர்த்தகம்** - ஜெ.சரண்யா - 3 ஏ, சி. சிவஸ்திகா - 2ஏ, பி, அ.நிரஞ்சனா-2ஏ, பி, க.பிரகாசினி - ஏ, 2 பி, கி. துவாரகா - ஏ, பி, சி, ஜெ. சங்கவி - 2பி, சி, சி.சாதனா - 2பி, சி, நி.நிஷிதா - 2பி, சி, லு.துஷாயினி - ஏ, பி, எஸ், பா. ஆசா - பி, 2எஸ், ம.லவுதா - 3 சி,அ.நிரோஜினி - 2பி, எஸ், ம.நிரோஜிதா-2சி,எஸ்,ஈ.பாலதேவி - சி, 2எஸ், ம.மதிவதனம் - 3 எஸ், ஆ.கௌதமி - 3 எஸ்.

**கலை** - மு.நிந்துஜா - 3ஏ, த.தர்சினி - 2ஏ, பி, ச.மிதுனா - ஏ, 2 பி, இ.ரசிதா - ஏ, 2பி, த.தயாளினி - 2 ஏ, சி, ச. சாளினி - ஏ, பி, சி, த.துவாரகா - ஏ, பி, சி, த.நிஷாந்தினி - ஏ, பி, எஸ், நா.மோகனா - ஏ, பி, சி, கு.காயத்திரி - ஏ, பி, சி,ஏ.ஜெ.மேரியூலின் - ஏ, 2 சி, த.தமிழ்ச்செல்வி - 2பி, சி, இ.றேகலா - பி, 2சி, ம.விதுர்சனா - 2பி, சி, கி.சரண்யா - பி, 2சி, க.கலைவாணி - 3பி, ஜெ.யோகா - 2பி, சி.

**கலை**- அ.றிசோதா - பி, 2சி, கி.கிருபாலினி - பி, சி, எஸ், ந.பாமினி - பி, 2 சி, த.மதுரா - பி, சி, எஸ், நே.லக்சனா - ஏ, 2எஸ், இ.கிருத்திகா - 3 சி, இ.சயந்தினி - பி, சி, எஸ், ஏ.ஏ.மேரி ஆன் - பி, சி, எஸ், த.தமயந்தினி - பி, சி, எஸ், இ.சாளினி - பி, சி, எஸ், இ.றெந்திரா - பி, சி, எஸ், கி.கீர்த்தனா - பி, சி, எஸ், ப.நிவிதா - 2சி, எஸ், ப.தர்சாந்தி - 2சி, எஸ், பா.மதுஷா - 3 சி, ம. மேரிடீனிகீ - 2சி, எஸ், அ.அஸ்விகா - 2சி, எஸ், பு.பிரியவர்னா - சி, 2எஸ், எ.வி. குயின்சி அன்ரனி - சி, 2எஸ், த.லக்சனா - 3எஸ், க.றக்சனா 3எஸ்.

## மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை

**விஞ்ஞானப் பிரிவு**- ர.ஜஸிதா - 3ஏ, சி.பௌனா - 3ஏ, வை. அகல்யா -2ஏ,பி, கு.ஆர்த்திகா - 2ஏ,பி, சி.ஜெயலக்ஷ்மி - 2ஏ,பி, பா.மயூரிகா - 2ஏ பி, ஸ்ரீ.சுஜீவா - ஏ,2பி, உ.நிவேதா - ஏ,2பி.

**கணிதப் பிரிவு** - யோ.லாவண்யா - 2ஏ, பி.

**வர்த்தகப் பிரிவு** - ர.கான்யா - 3ஏ, கு.துஷ்யந்தி - 3ஏ, வி.ரிதிகா - 2ஏ,பி, தி.கிருஷாஞ்சினி - 2ஏ,பி, மு.மயூரிஜா 2ஏ,பி, சி.துஷ்யந்தினி - 2ஏ, பி.

கலைப்பிரிவு - வி.தவதுரி -2ஏ, பி, சே.ஜென்சி - ஏ,பி,சி.

தொழில்நுட்பம் (பொறியியல்) - ரா.தெய்வேந்தினி -2ஏ,பி, த.லக்ஷ்மி - ஏ,பி,சி.

தொழில்நுட்பம் (விஞ்ஞானம்) - இ.மஞ்சிகா -ஏ,பி,சி, தி.சரூபிகா - 2பி,சி, வா.சங்கீதா - 2பி,சி, உ.நிர்மலா -பி, 2சி, சா.சரண்யா - பி,2சி.

## பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

கணிதப் பிரிவு - 3ஏ சித்தி பெற்றவர்கள் - ஆர்.திருபரன், எஸ்.வித்தகன், எஸ்.கோகுலன், ஆர். அனங்கன், என்.கபிலன், எஸ்.துவாரகன், கே.பானுகோபியன்.

2ஏ,பி சித்தி பெற்றோர் - எஸ்.சைலேஷ், வி.கோகுலன், எஸ்.சதாரூபன், எம். விக்னரூபன்.

2ஏ,சி சித்திபெற்றோர் - ரி.ரமணன், கே.கஜரூபன், எம்.தயானந், ஆர்.சானுஜன்.

ஏ,2பி சித்தி பெற்றோர் - எம்.மணிவண்ணன், எட்மன் லுக்சன்.

ஏ,2சி சித்திபெற்றோர்- ஆர்.கிவாஸ்கர், பி.விதுசன்.

**விஞ்ஞானப் பிரிவு**- ஆர். நிரோஜன் - 3ஏ, எம்.சிவதர்சன்- 2ஏ,பி, எஸ்.இளங்குமரன் -2ஏ,பி, கே.பிரசாந்தன் - 2ஏ, பி, ஆர் ஆதித்தியன் - ஏ,பி,சி, இ.அருண் - ஏ, பி,சி.

**வர்த்தகப் பிரிவு** - ஆர்.திலக்சன் - 3ஏ, பி.சதுர்தீபன் - 3ஏ,எம்.ராகுலன் - 2ஏ,பி, கே.துஷ்யந்தன் - ஏ,2பி, எல். வேணுகரன் ஏ,2பி. ஆர்.அஜித் ஏ,பி,சி, கே.ரமணன் ஏ,பி,சி, பி.கோபிராஜ் ஏ,பி,சி,

**கலைப்பிரிவு** - வி.தவதுரி -2ஏ, பி, சே.ஜென்சி - ஏ,பி,சி.

**பொறியியல் தொழில்நுட் பப் பிரிவு** - எஸ்.ரஜீந்தன் -ஏ, பி,சி, ஜெ.சாத்வீகன் - பி, 2சி,எஸ்.ஜீவாந்த் -பி,2சி, எஸ். ஜனக்சன் -3சி, வி.பிரதீபன் ஏ,சி.எஸ்.

**உயிரியல் தொழில்நுட்பப் பிரிவு** - ஆர்.கஜன்ராஜ் -2பி,சி.

கலைப்பிரிவு -எஸ். திவாகர் 2ஏ,பி.



மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட முனைக்காடு விவேகானந்தா வித்தியாலய சாரண மாணவர்கள், சுகாதாரக்கழகம் மற்றும் சென்ஜோன்ஸ் படையணி ஆகியன இணைந்து டெங்கு நோய் ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த ஊர்வலத்தில் 'சூழலைச் சுத்தம் செய்து ஆரோக்கியமாக வாழ்வோம்', 'டெங்கு இல்லாச் சூழல் உயிர் வாழும் சூழல்' ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் பலரும் கலந்துகொண்டனர். (ச)

# இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம்!



## காலி தொழிற்சாலை திறப்பு விழாவில் ரணில்

காலி, ஜன.08

இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலி கொக்கல முதலீட்டு வலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கையுறை உற்பத்தித் தொழிற்சாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கையுறைத் தொழிற்சாலை ஐந்து கோடி மில்லியன் ரூபா முதலீட்டுடன் சகல வசதிகளையும் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலை மூலம் இளைஞர், யுவதிகள் 7 ஆயிரம் பேருக்கு நேரடி வேலை வாய்ப்புக்களும் 10 ஆயிரம் பேருக்கு வேறு வகையிலான வேலைவாய்ப்புகளும் கிடைக்கவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு உரையாற்றும் போதே பிரதமர் ரணில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனவாதம் பேசி மக்களைத் திசை திருப்புவதை விடுத்து நாட்டை முன்னேற்றுவதில் கவனம் செலுத்தவேண்டும்.

உலக நாடுகள் அனைத்தும் இலங்கைக்கு உதவத் தயாராகவுள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அபிவிருத்தியிலும் முதலீட்டிலும் நாட்டைக் கட்டியெழுப்புவது அவசியமாகும்.

இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆனால், அன்று ஆட்சியிலிருந்த போது இந்த நாடுகளுடன் உறவு கொண்டாடியவர்கள் இன்று இந்த நாடுகளுக்கு எதிராகச் செயற்படுகின்றனர்.

இரண்டு பிரதான கட்சிகள் இணைந்து ஆட்சியமைத்திருப்பது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கேயாகும். சமகால தேசிய அரசாங்கம் பல சவால்களுக்கு மத்தியிலேயே முதலீடு மற்றும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

அரசாங்கத்துக்கு நிலையான தேசியக் கொள்கையொன்று உள்ளது.

அடுத்து வரும் தேர்தலில் எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் இந்தக் கொள்கையில் மாற்றம் ஏற்படாது.

கடந்த மூன்று தினங்களில் எம்மால் 16 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கும் திட்டங்களை ஆரம்பிக்க முடிந்துள்ளது.

அதேபோல் , அம்பாந்தோட்டையில் அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் ஊடாக மொத்தமாக 26 ஆயிரம் தொழில் வாய்ப்புகளுக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படுகிறது என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான ஜயந்த கருணாதிலக, சந்திம வீரக்கொடி, வஜிர அபேவர்தன மலிக் சமரவிக்ரம, பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஜேம்ஸ் டோகீஸ் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# செயலணியுடன் கருத்துக்களைப் பகிர்ந்தவர்கள் விடயத்தில் இராணுவத்தினரும், பொலிஸாரும் தலையிடமாட்டார்கள்!

## உறுதியளிக்கிறார் பாதுகாப்புச் செயலர்



கொழும்பு, ஜன.08

போரின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான கலந்தாய்வு செயலணியுடன் கருத்துக்களைப் பகிர்ந்தவர்கள் விடயத்தில் இராணுவத்தினரோ அல்லது பொலிஸாரோ தலையீடு செய்யமாட்டார்கள் என்று பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கலந்தாய்வு செயலணியின் முன்பாகச் சாட்சியமளித்தவர்கள், கருத்துக்களைப் பகிர்ந்தவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று செயலணியின் தலைவர் மனோரி முத்தெட்டுவேகம கோரியிருந்தார்.

இது தொடர்பாக அவர் கடந்தவாரம் பாதுகாப்புச் செயலரைச் சந்தித்து, சாட்சியமளித்தவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவது முக்கியம் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

இராணுவம் மற்றும் முன்னாள் போராளிகளின் நடவடிக்கைகளில் இருந்து சாட்சியங்களைச் சமர்ப்பித்தோரின் பாதுகாப்பை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் கோரியிருந்தார்.

இதுகுறித்துக் கருத்து தெரிவித்துள்ள பாதுகாப்புச் செயலர், கலந்தாய்வுச் செயலணியிடம் சாட்சியங்களை அளித்தவர்களின் விடயத்தில் இராணுவமோ, பொலிஸோ தலையீடு செய்யாது.

தமது கவலைகளை எடுத்துக் கூறியவர்களின் விடயங்களில் படையினர் தலையீடு செய்வார்கள் என்ற கருத்து அடிப்படையற்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# கலந்தாய்வு செயலணி மீது எனக்கு நம்பிக்கையில்லை!

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, ஜன.08

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான கலந்தாய்வு செயலணி மீது நம்பிக்கை இல்லை என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீதித்துறை சுதந்திரத்தைப் பற்றி யாரும் முறையிடவில்லை. நல்லிணக்க மற்றும் அமைதிக்கான செயல்முறை தான் எமக்குத் தேவை. இந்தச் சூழலில் இந்த அறிக்கை தேவையற்றது.

எனவே, கலந்தாய்வு செயலணியின் பரிந்துரைகளை பின்பற்ற வேண்டியதில்லை.



சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்குமாறு எவரும் எம்மை அழுத்தம் கொடுக்க முடியாது. அவ்வாறான அழுத்தங்கள் தொடர்ந்தால், விடுதலைப் புலிகளால் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கேட்பதற்குச் சிங்கள, முஸ்லிம் மக்கள் தள்ளப்படுவார்கள். தலதா மாளிகை, ஸ்ரீமா போதி, அரந்தலாவ, காத்தான்குடி போன்ற தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை அவர்களும் கோருவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் நெரிசல்!



கட்டுநாயக்கா, ஜன.08

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

விமான நிலையத்தில் ஓடுபாதை புனரமைப்பு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளன.

இதனால், கட்டுநாயக்க விமான நிலையத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கடும் நெரிசல் ஏற்பட்டுள்ளது.

விமான சேவை நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், ஏற்பட்டுள்ள பயணிகள் நெரிசலைக் கருத்தில் கொண்டு, பயணிகளை 5 மணிநேரம் முன்னதாகவே விமான நிலையத்துக்கு வருமாறு கோரப்பட்டுள்ளனர்.

# 'எட்கா' உடன்பாடு இறுதிக் கட்டத்தை எட்டியது; இந்தியக் குழு கொழும்பிலிருந்து புறப்பட்டது

கொழும்பு, ஜன.08

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கொழும்பில் இந்தவாரம் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து, எட்கா உடன்பாடு தொடர்பான பேச்சுக்கள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

எட்கா உடன்பாடு குறித்து இலங்கையுடன் பேச்சு நடத்த இந்திய அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு வந்திருந்தது.

இந்தக் குழு பேச்சுக்களை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது.

இந்தப் பேச்சுக்கள் தொடர்பாக, இந்தியத் தூதரக ஊடகச் செயலர் நிதின் யோலா தெரிவித்தவை வருமாறு:-

எட்கா உடன்பாட்டின் இறுதிக் கட்டம் தொடர்பாகப் பேச்சு நடத்தவே இந்திய அதிகாரிகள் கொழும்பு வந்திருந்தனர். பேச்சுக்கள் நன்றாக இடம்பெற்றன. உடன்பாட்டை இறுதி செய்யும் கட்டத்தை இருதரப்புகளும் நெருங்கிவிட்டன. இந்தப் பேச்சுக்களால் எட்கா உடன்பாடு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

சில பிரச்சினைகள் தொடர்பாக முடிவு எடுப்பதற்கு இரண்டு தரப்புகளும் இன்னமும் பணியாற்ற வேண்டியுள்ளது.

எப்போது உடன்பாடு இறுதி செய்யப்படும் என்று கூற முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

# வீடுகளை பெற்றுத் தருமாறு கோரி சிதம்பரபுரம் மக்கள் ஆர்ப்பாட்டம்!





வவுனியா, ஜன.08

வவுனியா, சிதம்பரபுரம் வன்னிக்கோட்டத்தில் மீள் குடியேறியுள்ள கிராம மக்கள் நேற்றுக் காலை9.30மணியளவில் ஒன்றிணைந்துதமக்கான வீட்டைப் பெற்றுத் தருமாறு கோரி பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர்.

இந்த நிலையில் அங்கு சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வன்னி மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளருமான கே.கே.மஸ்தான் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கலந்துரையாடிவடமாகாணத்துக்குக் கிடைக்கவுள்ள 65 ஆயிரம் வீடுகளில் உதவி பெற்றுக் கொடுப்பார் என்று வாக்கு றுதியளித்தார்.

அத்துடன் வவுனியா பிரதேச செயலாளரிடம் ஒரு சிலரை அழைத்துச் சென்றும்கலந்துரையாடப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், ''வெயிலில் காய்ந்து மழையில் நனைகின்றோம், காட்டாதே காட்டாதே பாராபட்சம் காட்டாதே'' போன்ற வாசகங்களைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 193 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்தப் பகுதிக்குச் சென்ற வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆகியோரும் இந்தப் பகுதி மக்களைச் சந்தித்து தீர்வைப் பெற்றுக் கொடுப்போம் எனத் தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-100)

## பூந்தோட்டம் ம.வியில் கேட்போர் கூடம்

வவுனியா,ஜன.08

வவுனியா, பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தில் கேட்போர் கூடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சால் ஒதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட பிரதான கேட்போர் கூடமே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபர் திருமதி கி.நந்தபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் கேட்போர் கூடத்தைத் திறந்து வைத்தார்.

இதன்போது, பாடசாலைக்கென வரவேற்பு கீதம் இயற்றப்பட்டு இறுவட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (ஐ)

# குஞ்சுக்குளத்தின் புனரமைப்பை முழுமையாக மேற்கொள்ளுங்கள்

## பிரதேச மக்களும் விவசாயிகளும் கோரிக்கை





ஒட்டுசுட்டான், ஜன.08

முள்ளியவளை பிரதேசத்தில் வ்டக்கு கிராம அலுவலர் பகுதியில் காணப்படும் குஞ்சுக் குளம் மிக நீண்ட காலமாக நிரந்தர அபிவிருத்தி இன்றி காணப்படுகிறது. காலத்துக்குக் காலம் அந்தக் குளத்தினுடைய அபிவிருத்தி என்ற பெயரில் பகுதியளவான அபிவிருத்தி வேலைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் மீண்டும் மீண்டும் அந்தக் குளம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேவையுடனேயே உள் ளது என்று பிரதேச விவசாயிகளும் பொதுமக்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தக் குளத்தின் அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட அதிகாரிகளும் நிறுவ னங்களும் இதனைக் கருத்தில் எடுத்து இனிவரும் அபிவிருத்திவேலையை யாவது நிரந்தரமாக மேற்கொள்வது தொடர்பில் கவனமெடுக்க வேண்டும் என்று விவசாயிகள் மற்றும் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

அத்துடன், இந்தக் குளத்தை முழுமையாகப் புனரமைத்தால் இந்தக் குளத்திலிருந்து முள்ளியவளை முதலாம் வட்டாரம்,முள்ளியவளை நான்காம் வட்டாரம், பள்ளவெளி, வற்றாப்பளை மற்றும் துறையடி பகுதிகளில் மக்கள் விவசாய நடவடிக்கைகளை முழுமையாக மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-82)

## கிளிநொச்சி மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்



கிளிநொச்சி, ஜன.08

கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' விசேட செயற்குழுவின் ஏற்பாட்டில் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்றிட்டத்தில் முதல் கட்டமாக கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியை சேர்ந்த போரால் பாதிக்கப்பட்ட, பெற்றோரை இழந்த அல்லது பொருளாதார நலிவான குடும்பங்களைச் சேர்ந்த 30 பிள்ளைகள் தெரிவு செய்யப்பட்டு கற்றல் உபகரணங்கள், பாடசாலைக் காலணிகள் என்பன வழங்கப்பட்டன.

அத்துடன் கிளிநொச்சி கருணா இல்லத்தைச் சேர்ந்த 20 பிள்ளைகளுக்குப் பாடசாலை புத்தகப் பைகளும் வழங்கப்பட்டன. அன்பு இல்லம் மற்றும் காந்தி இல்லத்தைச் சேர்ந்த சிறார்களுக்கான ஒரு நாள் உணவும் வழங்கப்பட்டது. (ஐ)

# வன்னி வறட்சி பாதிப்பைப் பேரிடராகக் கருதி நிவாரணம் வழங்க விரைந்து செயற்படுக!

## அமைச்சர் அநுரவுக்கு சிவசக்தி ஆனந்தன் எம்.பி. அவசர கடிதம்

வவுனியா, ஜன.08

வன்னி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் உள்ளிட்ட பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பாவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளாளர்.

இந்த விடயம் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பருவ மழை பொய்த்ததன் காரணமாக வட மாகாணம் முழுவதும், விசேடமாக வன்னி மாவட்டம், பெரும் வறட்சியை எதிர் நோக்கியுள்ளது.

பயிர்செய்கைக்கான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விதைக்கப்பட்ட பல வயல் நிலங்கள் தண்ணீர் இன்றி அழிந்து கொண்டும் இருக்கின்றன. இந்த வறட்சியான காலநிலை தொடர்ந்தும் நீடிக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. அத்துடன் விவசாய நிலங்களில் கூலி வேலை செய்த பலரும்தற்போது வேலை வாய்ப்பின்றி மிகவும் வறுமையான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அடுத்த சில தினங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவும் சூழல் உருவாகி வருகிறது. விரைந்து செயற்படவில்லை என்றால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். இந்தச் சூழலை இயற்கைப் பேரிடராகக் கருதி விரைந்து செயற்பட்டு பயிர் நிலங்களைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயக் கிணறுகள் அமைக்கப்பட வேண்டும். அழிந்து போன வயல் நிலங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும். வறட்சி நிவாரணம் வழங்கப்பட வேண்டும். மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கான தானியங்கள், விதைகள், நீர் இறைக்கும் இயந்திரம் என்பன வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் மாற்றுப் பயிர் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.- என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்ட செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-100)

# அரசியல் இழுபறிகளுக்குத் தமிழர் இனியும் பலிக்கடாவாக முடியாது

## மனோ கணேசன் ஆக்ரோஷம்



கொழும்பு, ஜன.08

பெரும்பான்மைக் கட்சிகளின் அரசியல் இழுபறிகளுக்குத் தமிழ் பேசும் மக்கள் இனியும் பலிக்கடா ஆக முடியாது என்று தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, பொது எதிரணி ஆகிய கட்சிகளின் தலைவர்களுக்குத் தனித்தனியாக எழுதியுள்ள கடிதத்திலேயே இந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டுவரும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் புதிய அரசமைப்பு கலந்துரையாடல் தொடர்ந்து தள்ளி வைக்கப்பட்டுக் கொண்டே போகிறது.

அனைத்துக் கட்சி பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய வழிகாட்டல் குழுவில், தயாரிக்கப்பட்ட இடைக்கால வரைபு பற்றிய தத்தமது நிலைப்பாடுகளை முன் வைப்பதில் கட்சிகள் இடையில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இனிமேலும் இதை தள்ளி வைக்க முடியாது. குறிப்பாக அதிகாரப் பகிர்வு, தேர்தல் முறைமை, நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஆகியவை தொடர்பாக உங்கள்நிலைப்பாடுகளை வழிகாட்டல் குழுவுக்கு அறிவியுங்கள்.

பெரும்பான்மை கட்சிகளின் அரசியல் இழுபறிகளுக்கு தமிழ் பேசும் மக்கள் இனியும் பலிக்கடா ஆக முடியாது. புதிய அரசமைப்புக்குத்தயாரில்லை என்றால் அரசமைப்பு பேரவையைக் கலைத்து விட்டு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எதுவும் தர தயாரில்லை என்று அகில உலகத்துக்கும் அறிவித்து விடுங்கள்.

இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விடும் என்று தமிழ் மக்களை இனி மேலும் நம்ப வைத்து இழுபறிப்பட இடமளிக்க முடியாது. இதற்கு நாம் பங்காளிகளாக இருக்கவும் மாட்டோம்.

அதிகாரப்பகிர்வு, தேர்தல் முறைமை, நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, நாட்டின் ஆட்புல ஒருமைப்பாடு, மொழியுரிமை, மத உரிமை, தேசியகீதம் ஆகிய ஏழு விடயங்கள் தொடர்பாக, வழிகாட்டல் குழுவில் இடம்பெற்றுள்ள ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகிய கட்சிகளுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது.

இந்த நான்கு கட்சிகளும் இணைந்து தயாரிக்கும் ஒரு கூட்டு அறிக்கையை, வழிகாட்டல் குழுவுக்குச் சமர்ப்பிக்க நாம் முடிவு செய்துள்ளோம்.

இது தொடர்பிலான எங்கள் வரைபு தயாரிக்கப்பட்டு நான்கு கட்சிகள் மத்தியிலும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. எமது இறுதி அறிக்கை, அடுத்த வழிகாட்டல் குழுக் கூட்டத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்.

கடைசியாக நடைபெற்ற வழிகாட்டல் குழுவின் முடிவின் படி, இந்த மாதம் 9,10,11 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த அரசமைப்பு பேரவை விவாதங்கள் ஒத்திவைக்கப்பட்டன.

அத்துடன் பெப்ரவரி மாதம் முதல் வாரத்துக்குள் அனைத்துக் கட்சிகளும் தத்தம் நிலைப்பாடுகளை அறிவிக்க உடன்பாடு ஏற்பட்டது. எனவே, இந்தக் காலகட்டத்துக்குள் உங்கள் நிலைப்பாடுகள் வழிகாட்டல் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கிறேன்.- என்றுள்ளது. (ஐ)

# தமிழகத்தைச் சேர்ந்த 10 ஆயிரம் பேர் கச்சதீவு திருவிழாவில் பங்கேற்பர்!

## இலங்கை கடற்படைத் தளபதி தகவல்



கொழும்பு, ஜன.08

கச்சதீவு திருவிழாவில் தமிழகத்தைச் சேர்ந்த பத்தாயிரம் பேர் பங்கேற்பார்கள் என்று இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவி விஜேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

கச்சதீவு திருவிழா தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதி வாரத்தில் கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழா நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவில் தமிழகத்தைச் சேர்ந்த 10 ஆயிரம் கத்தோலிக்க பக்தர்கள் பங்கேற்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

திருவிழாவுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக யாழ். பேராயர் உத்தியோகபூர்வமாகத் தமிழக கத்தோலிக்க சபைக்கு திருவிழா குறித்து அறிவிப்பார்.

அதன் பின்னர் தமிழக கத்தோலிக்க பக்தர்கள் இந்தத் திருவிழாவில் பங்கேற்பார்கள்.

புனித அந்தோனியார் தேவாலயம் புனரமைக்கப்பட்ட பின்னர் நடைபெறும் திருவிழாவில் பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் பங்கேற்பார்கள்.

இவ்வாறு திருவிழாவில் பங்கேற்கும் தமிழக கத்தோலிக்க பக்தர்கள் விசா பெற்றுக் கொள்ள வேண்டியதில்லை.- என்றார். (ஐ)

### குருநாகல் விபத்தில் இறந்த மாணவி:

# உயர்தர கணிதப் பிரிவில் மாவட்டத்தில் முதலிடம்

வவுனியா, ஜன.08

அண்மையில் விபத்தில் பலியான சத்தியநாதன் சிவதுர்க்கா என்ற மாணவியே, நேற்று வெளியாகியுள்ள உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கணிதப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாமிடம் பெற்றுள்ளார்.

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவியான சத்தியநாதன் சிவதுர்க்கா, வைத்தியரான தனது சிறிய தாயாருடன் வாகனத்தில் கொழும்பு நோக்கி சென்று கொண்டிருக்கையில் குருநாகலில் இடம்பெற்ற விபத்தில் பலியாகியிருந்தார்.

மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெறக்கூடிய மாணவி என்று எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட இந்த மாணவி கணிதப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

மகிழ்வைத் தரும் இந்த விடயம் தற்போது பெரும் வருத்தத்தையே அனைவரிடத்தேயும் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்க குரல் சேவையை மூடுவதற்கு அரசு தீர்மானம்




கொழும்பு, ஜன.08

சிலாபம் இரணவில பகுதியில் இருந்து இயங்கி வரும் 'அமெரிக்க குரல்' என்ற வானொலிச்சேவையின் ஒலிபரப்பு மத்திய நிலையத்தை மூடி விட அரசு தீர்மானித்துள்ளது.

கடந்த 23 ஆண்டுகளாக சிலாபத்தில் இந்த வானொலி ஒலிபரப்பு நிலையம் இயங்கி வருகின்றது.

இந்த வானொலி ஒலிபரப்பு நிலையம் 920 ஏக்கர் காணிப் பரப்பில் அமைந்துள்ளது.

இந்தப் பகுதிக்குள் இலங்கையர்கள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

படையினரும் பொலிஸாரும் கூட இந்தப் பகுதிக்குள் பிரவேசிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின், 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' என்ற வானொலிச் சேவை ஆசியாவின் பல பகுதிகளுக்குச் சிலாபத்திலிருந்தே ஒலிபரப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் வானொலி ஒலிபரப்பு மையத்தை மூடி, அந்தப் பகுதியை சுற்றுலா பகுதியாக மாற்றியமைக்க அரசு திட்டமிட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன. (ஐ)

# கலப்பு நீதிமன்றம் தேவையில்லை; இதுவே ஜனாதிபதியின் நிலைப்பாடு

## லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு



கொழும்பு, ஜன.08

போர்க்குற்ற விசாரணைகளுக்குக் கலப்பு நீதிமன்றம் தேவையில்லை என்பதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிலைப்பாடு என்று நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

போர்க் குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு வெளிநாட்டு நீதிவான்களுடன் கூடிய கலப்பு நீதிமன்றின் அவசியமில்லை என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும்.

ஒவ்வொரு தரப்பினரும் ஒவ்வொரு கருத்துக்களை வெளியிட முடியும் என்ற போதிலும் ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை.

வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு அவசியமில்லை என்பதே அரசின் தெளிவான நிலைப்பாடாகும்.

நீதி விசாரணைப் பொறிமுறைமை தொடர்பில் உள்நாட்டு நீதிமன்றங்களின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.- என்றார். (ஐ)

# படையினருக்கும் புனர்வாழ்வு அளிக்கப்படுதல் வேண்டும்

## ஆலோசனை செயலணியின் பரிந்துரையில் இதுவும் ஒன்று

கொழும்பு, ஜன.08

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டமையைப் போன்றே அரச படையினருக்கும் புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும் என்று நல்லிணக்க பொறிமுறைமை குறித்த ஆலோசனை செயலணி பரிந்துரை செய்துள்ளது.

அரசிடம் அண்மையில் வழங்கிய அறிக்கையில் இந்தப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு படைப் பிரிவாக வடக்கிலிருந்து கிரமமான அடிப்படையில் அகற்றிக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகச் சிரேஷ்ட படை அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

இலங்கை வரலாற்றில் இதற்கு முன்னர் படைப் பிரிவினரை புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு எவ்வித யோசனைகளும் முன்வைக்கப்படவில்லை.

இந்தப் புனர்வாழ்வு அளிக்கும் யோசனை ஒட்டுமொத்த படையினரையே இழிவுபடுத்தும் செயற்பாடு.

கொடூரமான குற்றச் செயல்களில் ஈடுபட்ட புலிப் பயங்கரவாதிகளுடன் தம்மையும் சமமாக நோக்கியுள்ளார்கள்.- என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# இலங்கையில் பாரதி 08



● முருகபூபதி – ஆஸ்திரேலியா

நண்பனுக்கு மற்றும் ஒரு பெயர் மித்திரன். மனிதவாழ்வில் நட்புக்கு மகத்தான அர்த்தம் உள்ளது. நட்பு வலிமையானது. நண்பர்களிடையே உருவாகும் பிரிவு வலிதரக்கூடியது. அத்தகைய பிரிவுகள் வரும்பொழுது பாதிப்புக்குள்ளாகும் நண்பர்கள் விதியையே நொந்துகொள்வார்கள்.

அதனால் விதியும் வலியது. பாரதி விதி குறித்தும், நட்பு தொடர்பாகவும் கவிதைகள் எழுதியிருப்பவர்.

கடந்த அங்கத்தில் வீரகேசரியில் பாரதியின் தாக்கம் பற்றிய குறிப்புகளையும் சலசலப்பு ஏற்படுத்திய விவாதங்கள் பற்றியும் எழுதியிருந்தோம்.

வீரகேசரி 1965 காலப்பகுதியில் ஒரு மாலைத்தினசரியை வெளியிடத்தொடங்கியது.

இந்தியாவில் பாரதியார் சுதேசமித்திரன் பத்திரிகையில் பணியாற்றியவர். சுதேசிகள் மத்தியில் வாழும் நண்பர்களை இணைக்கும் விதமாக அன்று அவர் அதில் தமது வலிமையான எழுத்துக்களை வெளியிட்டார்.



இ.சிவகுருநாதன்

சுதேசமித்திரன், இலங்கா மித்திரன், இஸ்லாமிய மித்திரன், முஸ்லிம் மித்திரன், மலாயா மித்திரன், உத்தம மித்திரன். முதலான சில பத்திரிகைகள் இலங்கை, இந்தியா, மலேசியா முதலான நாடுகளில் ஏற்கனவே வெளியாகியிருக்கின்றன. மலேசிய நண்பன் என்றும் ஒரு பத்திரிகை மலேசியாவில் வெளியாகிறது.

தமிழ் வாசகர்களின் நண்பனாக இலங்கையில் மித்திரன் வெளியானது.

வீரகேசரி தேர்ந்த வாசகர்களுக்காக வெளிவந்தாலும், வாசகபரப்பில் மற்றும் ஒரு சாராருக்காக மாலைத் தினசரியாக கொழும்பிலிருந்து வெளியான மித்திரன், வேலை முடிந்து வீடு திரும்பும் வாசகர்களின் தேவையை பூர்த்தி செய்தது.

அது வெளிவரும் தினத்தன்று காலையில் அல்லது முற்பகல் நடந்த செய்திகளும் அதில் இடம்பெற்று விடுவதனால் தமிழ் வாசகர்கள் சுடச்சுட தகவல்களை தெரிந்து கொண்டனர்.

மித்திரன் வெளிவரத் தொடங்கிய காலப்பகுதியில் வீரகேசரி ஆசிரியராக பணியாற்றிய கே.வி. எஸ். வாஸ், சில மர்மத்துப்பறியும் தொடர்கதைகளை அதில் எழுதிவந்தார். ரஜனி என்ற புனைபெயரில் அவர் தினமும் எழுதும் அக்கதைகளின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் திகிலூட்டும் முடிச்சுகளுடன் நிறைவு செய்து, மறுநாளும் வாசகர்கள் அதனைத்தொடர்ந்து படிக்கத்தக்கதாக ஆர்வத்தை தூண்டி வந்தார்.

பின்னாள்களில் ஜி.நேசன், கே.நித்தியாணந்தன், சோ. ராமேஸ்வரன், கே. விஜயன், ஜோர்ஜ் சந்திரசேகரன், ஆர். டி. ராஜா, வீ.ஆர். வரதராஜா, மொழிவாணன், திமிலை மகாலிங்கம் உட்பட பலரும் அத்தகைய தொடர்களை எழுதினார்கள்.

இது இவ்விதமிருக்க, மித்திரன் வாரமலர் சற்று வித்தியாசமாக ஆண் பெண் வாசகர்களைக் கவரும் வகையில் தொடர்களையும் சிறுகதைகளையும் சினிமாச்செய்திகளையும் வரவாக்கியது.

பாரதி நூற்றாண்டு காலப்பகுதிக்கு முன்பிருந்தே வீரகேசரி ஆசிரிய பீடத்தில் பணியாற்றிவரும் மூத்த பத்திரிகையாளர் திருமதி அன்னலட்சுமி இராஜதுரை, யாழ். நங்கை என்ற பெயரிலும் சிறுகதை, நாவல்கள் எழுதியிருப்பவர். அதனால் இலக்கியவாதியாகவும் அறியப்பட்டவர்.

இன்றும் வீரகேசரி குழுமத்தின் மற்றும் ஒரு வெளியீடான கலைக்கேசரியின் பொறுப்பாசிரியராக பணியாற்றுகிறார்.

விழிச்சுடர் (குறுநாவல்), உள்ளத்தின் கதவுகள் (நாவல்), நெருப்பு வெளிச்சம் (சிறுகதைத்தொகுதி), இருபக்கங்கள் (கவிதை), நினைவுப்பெருவெளி (வீரகேசரி அனுபவங்கள்) முதலான நூல்களை எமக்கு வழங்கியிருக்கும் அன்னலட்சுமி இராஜதுரை, பாரதி நூற்றாண்டு காலகட்டத்தில் இலங்கை வானொலியிலும் தலை நகரில் நடந்தபல நிகழ்ச்சிகளிலும் பாரதி தொடர்பாக உரையாற்றியிருப்பவர்.




திருமதி அன்னலட்சுமி இராசதுரை

பாரதியும் பெண்விடுதலையும் அவரது உரைகளின் தொனிப்பொருளாக உள்ளடக்கமாகியிருந்தன. ஜனரஞ்சகமான அம்சங்களையே பெரும்பாலும் தாங்கிவரும் மித்திரன் வாரமலர், பாரதியின் நூற்றாண்டை முன்னிட்டு சம்பிரதாயபூர்வமான சிறுகதைப்போட்டியையும் நடத்தியது.

போட்டிக்கென, 'சாதிகள் இல்லையடி பாப்பா', 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்', 'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை' முதலான பாரதியின் வரிகளே சிறு கதைப்போட்டித் தலைப்புகளாகின.

இதில் அறிமுக எழுத்தாளர்களும் மாணவர்களும் ஆர்வமுடன் கலந்துகொண்டனர்.

இளம்தலைமுறையினருக்கு ஊக்கமளிக்கும் பொருட்டும் அவர்களையும் எதிர்காலத்தில் படைப்பிலக்கியத்துறையில் ஈடுபடவைக்கவேண்டும் என்ற எண்ணத்திலும் நடத்தப்பட்ட இச்சிறுகதைப்போட்டியைத் தவிர வேறு குறிப்பிடும்படியாக பாரதி தொடர்பான ஆக்கங்கள் வரவில்லை. ஆனால், மித்திரனை ஈன்ற தாயான வீரகேசரியில் அதன் தொடக்க காலத்திலிருந்து இற்றை வரையில் பாரதிக்கான பரந்த களத்தினை அதில் நாம் பார்த்து வருகின்றோம்.

**தினகரனும் பாரதியும்**

ஏரிக்கரை பத்திரிகை **(Lake House)** என வர்ணிக்கப்படும் தினகரன் 1932 ஆம் ஆண்டு முதல் நாளிதழாக வெளியாகிறது. 23-05-1948 ஆம் திகதியன்று தனது முதலாவது தினகரன் வாரமஞ்சரியை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியது.

ஆங்கில, சிங்கள ஏடுகளையும் சஞ்சிகைகளையும் வெளியிட்டுவரும் ஏரிக்கரையிலிருந்து இயங்கும் ( Lake House) என்ற பெரிய நிறுவனத்தின் ஒரே ஒரு தமிழ்த் தினசரி **தினகரன்.**

அது வெளிவரத்தொடங்கிய காலகட்டத்தில் மற்றும் ஒரு இந்திய ஊடகம் என்ற மாயைதான் இலங்கை வாசகர்களிடம் உருவாகியிருந்தது. தினகரனை இலங்கையின் தமிழ்த் தேசியப் பத்திரிகையாக்கிய பெருமை பேராசிரியர் க. கைலாசபதியையே சாரும்.

இவருக்கு முன்னர் கே.கு.ப. நாதன் தினகரன் ஆசிரியராக பணியாற்றினார். பின்னாளில் இவர் கொழும்பில் தினபதி, சிந்தாமணி வெளியிட்ட சுயாதீன பத்திரிகை சமாஜத்தின் தந்தி மாலைத்தினசரியின் ஆசிரியரானார்.

பாரதி ஆய்வாளராகவும் அறியப்படும் பேராசிரியர் க. கைலாசபதியின் தினகரன் ஆசிரியப்பணி குறித்தும் இருவேறு கருத்தியல்கள் இலக்கிய உலகில் நிலவியதை அறிவோம்.

*'பல்கலைக்கழகத்திலிருந்து தமிழ்ச்சிறப்பு பட்டதாரியாக அவர் முதல் வகுப்பில் சித்தியெய்திய பின்னர், அன்று உயர்வாக மதிக்கப்பட்ட அரச நிர்வாகப்பதவியொன்றினைத் தேடியிருக்கவோ அல்லது உயர் கல்வி ஆராய்ச்சித்துறையில் இந்நாட்டிலோ, வெளிநாடு சென்றோ, மேலுக்கு வந்திருக்கவோகூடும். ஆனால், கைலாஸ் அவ்வாறு செய்யாது பத்திரிகையுள் புகுந்தார். அதனை வருவாய்க்கு வழியாக அன்றி, அதன் வாய்ப்புகளை உகந்தவாறு பயன்படுத்துவதில் கைலாஸ் குறியாயிருந்தமை தெளிவாகும்.*

*கைலாஸ் பத்திரிகைத்துறையுட் புகுந்த காலம் மேலைத்தேய நாகரிகமும் ஆங்கில மொழியும் தம் ஆதிக்கத்தை இழக்கத் தொடங்கிய காலம். பொருளாதார அரசியல் துறைகளில் மட்டுமின்றிப்பண்பாட்டுத் துறையிலும் அந்நிய ஆதிக்கம் தளரத்தொடங்கிய காலம். சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்பட்டதன் விளைவாகத் தமிழ் பேசும் மக்கள், இந்நாட்டில், தங்கள் இருப்பு, வரலாறு, வருங்காலம், தனித்துவம் முதலானவை குறித்து உத்வேகத்துடன் உணர, சிந்திக்கத்தலைப்பட்ட காலம். தமிழ் மொழி உபயோகச்சட்டம் நிறைவேற்றப்பட்டமை, சுதேச மொழி முக்கியத்துவம் பெறத் தொடங்கியமை, புதிதாக உருவான கலாசார அமைச்சு தமிழ்க்கலை வளர்ச்சிக்கு ஊக்கமளித்தமை, அதுவரை ஆங்கிலப் பத்திரிகைகளே பெற்றிருந்த அரசியல் செல்வாக்கையும் முக்கியத்துவத்தையும் பொதுமக்களைப் பரவலாகச் சென்றடைந்த சிங்கள, தமிழ்ப்பத்திரிகைகளும் பெறத்தக்க வாய்ப்புத் தோன்றியமை, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு காரணமாக இந்திய எழுத்தாளர்களுக்குப் பணம் அனுப்பும் வசதி கட்டுப்படுத்தப்பட்டமை... இவை யாவும் கவனத்திற் கொள்ளப்படவேண்டியவை'* என்று விரிவாக கைலாசபதியின் தினகரன் பிரவேசம் பற்றி பேராசிரியர் சி. தில்லைநாதன் பதிவு செய்துள்ளார், ( **நூல்: பன்முக ஆய்வில் கைலாசபதி**)



பேராசிரியர் க.கைலாசபதி

இந்திய எழுத்தாளர்களுக்கு பிரசுரம் களமும் கொடுத்து அதற்காக பணமும் தினகரன் வழங்கியது தவறல்ல. எழுத்தாளர்களுக்கு சன்மானம் வழங்கத்தக்க மூலதனமும் வருவாயும் நிரம்பப்பெற்றதுதான் லேக்ஹவுஸ் நிறுவனம்.

ஆனால், அக்காலப்பகுதியில் ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் புறக்கணிக்கப்பட்டதுதான் விமர்சனத்திற்குரியது.

தினகரனில் அவ்வேளையில் கதைகள் படைத்தவர்கள் சென்னை மவுண்ட் ரோட்டையும் மெரீனா பீச்சையும் பகைப்புலமாகக்கொண்டு எழுதினார்கள். இதனால் அன்றைய ஈழத்து தமிழ்த்தேசிய படைப்பிலக்கியம் தேக்கம் கண்டது.

அதனை உடைத்தெறிந்தவர்தான் கைலாசபதி. இவர் ஈழத்து எழுத்தாளர்களுக்கு தினகரனில் களம் தந்து ஊக்கமளித்தார். பத்திரிகையின் செல்நெறியை வகுத்தார். பாரதி தொடர்பாக ஏராளமான ஆய்வுகள் மேற்கொண்டவர். இரு மகாகவிகள், பாரதி இயல் ஆய்வுகள் முதலான இவரது நூல்கள் குறித்து இந்தத் தொடரில் பிறிதொரு அங்கத்தில் விரிவாகப்பார்க்க முடியும்.

கைலாசபதிக்குப் பின்னர், தினகரன் ஆசிரியராக பொறுப்பேற்ற இ. சிவகுருநாதன், யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப்பட்டம் பெறுவதற்காக சமர்பித்த ஆய்வில், 'தேசிய இலக்கியம் உருப்பெற்று வளர்ச்சி காண கைலாசபதி களம் அமைத்துக் கொடுத்தார்' என்று குறிப்பிட்டிருப்பதையும் பேராசிரியர் தில்லைநாதன் ஊடாக நாம் அறிகின்றோம்.




கைலாசபதி, தான் மாத்திரம் வளராமல், தன்னைச்சூழ இருந்தவர்களையும் வளர்த்தெடுத்தார். அவர்கள் பத்திரிகையாளர்களாயினும், படைப்பாளிகளாயினும், கலைஞர்கள், ஓவியர்கள், கார்டுனிஸ்ட்டுகளாயினும், சிற்றிதழ்காரர்களாயினும் அவர்கள் அனைவரும் தத்தமது துறைகளில் ஆரோக்கியமாக வளர்வதற்கு உற்றதுணையாக விளங்கியவர்.

பாரதியாரைச் சுற்றியும் எப்பொழுதும் நண்பர்கள் இருப்பார்கள். அவர்கள் இருக்குமிடத்தில் வாதங்களும் இடம் பெறும். யார், யார் என்ன எழுதியிருக்கிறார்கள் என்பது பற்றிய கலந்துரையாடல்கள் நிகழும். மொழிபெயர்ப்புகள் தொடர்பாகப் பேசப்படும்.

கைலாசபதியும் பாரதியைப் போன்றே தமக்கு நெருக்கமான இலக்கிய நண்பர்களிடம் கருத்துப்பரிமாறி பணிகளையும் ஒப்படைப்பார். யார், யார் தினகரனில் என்ன, என்ன எழுதவேண்டும், எத்தனை நாளில் அவற்றை ஆசிரிய பீடத்தில் கொடுக்கவேண்டும் என்று அந்த மின்னஞ்சல் யுகமில்லாத காலத்திலேயே கிட்டத்தட்ட பத்திரிகை ஆசிரியர் பாரதியைப்போன்றே இயங்கியவர் அவர்.

(18 ஆம் பக்கம் பார்க்க)







# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



20

## இலங்கையில் இந்தியத் தலையீடு

தமிழர் தரப்பில் வெளியாகிய விடுதலைப்புலிகளின் விமர்சன எழுத்துக்கள் இரு அம்சங்களைக் கண்டித்தன. இவை இரண்டும் தமிழீழ மக்களின் வாழ்வையும் அவர்களது அரசியல் எதிர்காலத்தையும் வெகுவாகப் பாதித்த விடயங்கள் ஆகும். ஒன்று, தமிழ் மக்களுக்கு எதிராக இந்திய இராணுவம் புரிந்த கொடுமைகளைக் கண்டித்தமை. இரண்டாவது, தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வாக இந்திய-இலங்கை உடன்பாட்டில் முன்வைக்கப் பட்ட யோசனைத்திட்டம். இந்த இரண்டு விவகாரங்கள் குறித்தும் விடுதலைப்புலிகள் இயக்கம் பலரகமான விமர்சன எழுத்துக்களை வெளியிட்டது. 'சாத்தானின் படைகள்' என்ற தலைப்பில்,.தமிழர் தாயகத்தில் இந்திய இராணுவம் புரிந்த அட்டூழியங்களை விவரித்து எமது அமைப்பு நூல் ஒன்றை வெளியிட்டது. ஐந்நூறுக்கு மேற்பட்ட பக்கங்களை உடைய இப்பெரிய நூலில், இந்தியத் தலையீட்டைக் கண்டிக்கும் ஆய்வுக்கட்டுரைகள், இந்தியப் படைகள் புரிந்த கொடுமைகள், அந்தக் கொடுமைகளை நேரில் கண்டவர்களின் சாட்சி விவரணைகள், பாலியல் வன்முறைக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளானோரின் வாக்குமூலங்கள், பாதிக்கப்பட்டோரின் உறுதி ஆணைப் பத்திரங்கள், கொடுமைகளைச் சித்திரிக்கும் புகைப்படங்கள் ஆகியன அடங்கிய இந்த நூலுக்கு நான் நீண்டதொரு முன்னுரை எழுதினேன். இந்திய அமைதிப் படையினரின் கொடிய போர்க்குற்றங்களையும், பாரதூரமான மனித உரிமை மீறல்களையும் இந்தத் தகவல் களஞ்சிய நூல் அம்பலப்படுத்தியது. இந்திய - இலங்கை உடன்பாட்டில் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தையும் திறனாய்வு செய்து, அத்திட்டத்தில் உள்ள குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி, விடுதலைப்புலிகள் அமைப்பு கட்டுரைகளையும் பிரசுரங்களையும் வெளியிட்டது. இந்திய அமைதிப் படைகளின் அட்டூழியங்களைத் தகுந்த சான்றுகளுடன் எமது இயக்கம் அம்பலப்படுத்திய போதும், இந்தியத் தரப்பு அதனை நிராகரித்தது. 'சாத்தானின் படைகள்' என்ற நூலை விமர்சித்த ஓர் இந்திய இராஜதந்திரி, அதனை இந்திய இராணுவத்துக்கு எதிரான விடுதலைப்புலிகளின் விசமப் பிரசாரம் என்று வர்ணித்திருக்கிறார்.

புதிர்கள் நிறைந்த சிக்கலான வரலாற்றைக் கொண்ட இந்தியத் தலையீட்டில் விடுதலைப் புலிகளின் பங்கு முக்கியமானதாகும். திருநெல்வேலியில் சிங்களப் படையினர்மீது கெரில்லாத் தாக்குதல் நடத்தியதன் விளைவாகவே இனக்கலவரம் வெடித்தது என்றும், அக்கலவரத்தைச் சாக்காக வைத்து இந்தியா, இலங்கையில் தலையிட்டது என்றும் கூறி முழுப் பழியையும் விடுதலைப்புலிகள் மீது சுமத்த சிறீலங்கா அரசு முனைந்தது. இது முற்றிலும் தவறான கண்ணோட்டம். பேரழிவாக வெளிப்பாடு கண்ட ஓர் இனப்படுகொலைக் கலவரத்தை விடுதலைப் புலிகளின் ஒரு கெரில்லா தாக்குதலுக்குள் மூடி மறைத்து விட முனைவது தவறான மதிப்பீடு ஆகும்.

> இந்தியா அரங்கேற்றிய அரசியல் இராஜதந்திர சதுர ஆட்டத்தில் எமது விடுதலை அமைப்பும் பங்கு கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டது. ஈழத் தமிழரின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்திய அரசு மேற்கொண்ட மத்தியஸ்த முயற்சிகள் அனைத்திலும் விடுதலைப் புலிகள் அமைப்பு பங்கு கொண்டது. இந்தியத் தலையீட்டின் இறுதிக் கட்டத்தில் இந்தியா எமது விடுதலை அமைப்பு மீது யுத்தப் பிரகடனம் செய்து ஆயுதங்களை களைய முற்பட்டபோது இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் போர் வெடித்தது. இந்தப் போர் தீவிரமடைந்து நீடித்து சென்ற வேளை எமது அமைப்பு சிறீலங்கா அரசுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தி இந்தியப் படைகளைத் தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேற்ற வழி சமைத்தது.

இந்தியாவின் தலையீடு சம்பந்தப்பட்ட விவகாரத்தில் விடுதலைப் புலிகள் எத்தகைய பங்கு வகித்தார்கள் என்பதைப் பார்ப்போம். கறுப்பு ஜூலை இனக் கலவரத்தை அடுத்து இந்திய அரசு ஏற்பாடு செய்த இரகசிய இராணுவப் பயிற்சித் திட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் பங்கு பற்றியது. இதைத் தொடர்ந்து இந்தியா அரங்கேற்றிய அரசியல் - இராஜதந்திர






சதுர ஆட்டத்தில் எமது விடுதலை அமைப்பும் பங்கு கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டது. ஈழத் தமிழரின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்திய அரசு மேற்கொண்ட மத்தியஸ்த முயற்சிகள் அனைத்திலும் விடுதலைப் புலிகள் அமைப்பு பங்கு கொண்டது. இந்தியத் தலையீட்டின் இறுதிக் கட்டத்தில் இந்தியா எமது விடுதலை அமைப்பு மீது யுத்தப் பிரகடனம் செய்து ஆயுதங்களை களைய முற்பட்டபோது இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் போர் வெடித்தது. இந்தப் போர் தீவிர மடைந்து நீடித்து சென்ற வேளை எமது அமைப்பு சிறீலங்கா அரசுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தி இந்தியப் படைகளைத் தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேற்ற வழிசமைத்தது. இப்படியாக எமது விடுதலை இயக்கம், இந்தியத் தலையீடு நிகழ்ந்த கால விரிப்பில், பல்வேறு சிக்கலான பங்குகளை வகித்தது. எனினும், எமது இயக்கம் எத்தனையோ சவால்களுக்கும் ஆபத்துக்களுக்கும் முகம் கொடுத்து வெற்றிப் பாதையில் முன்னேறியது. அரசியல், இராஜதந்திர, இராணுவப் பரிமாணங்களைக் கொண்ட இந்தியத் தலையீடு இறுதியில் படுதோல்வியைத் தழுவிக் கொண்டாலும், இதில் விடுதலைப்புலிகள் இயக்கம் மையமான பங்கு வகித்திருப்பதாலும், இத் தலையீடு பற்றிய இந்தியத் தரப்பு ஆய்வுகள் எமது அமைப்புமீது கண்டன விமர்சனங்களை முன்வைத்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. இக்கண்டன ஆய்வுகளில் பெரும்பாலானவை நேர்மையற்றவை; பக்கச்சார்புடையவை. எமது விடுதலை அமைப்பின் அரசியல் குறிக்கோளையும் இலட்சிய உறுதியையும் சரிவரப் புரிந்து கொள்ளாமல் எழுதப்பட்ட விமர்சனங்கள் இவை. நெருக்கடிகள் மிகுந்த அந்த வரலாற்றுச் சூழலில், எமது இயக்கம் உறுதி தளராது எமது மக்களின் நலன்களுக்கும் அரசியல் அபிலாஷைகளுக்குமே முக்கியத்துவம் கொடுத்தது. பல சந்தர்ப்பங்களில் பேரழிவை எதிர்கொண்ட போதும் எமது இயக்கம் தனது இலட்சியப்பாதையில் இருந்து விலகவில்லை.

இலங்கையில் இந்தியத் தலையீடு நிகழ்ந்த மிகக் கொந்தளிப்பான வரலாற்றுக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் எதிர்கொண்ட சம்பவங்களையும், முகம் கொடுத்த சவால்களையும், மேற்கொண்ட தீர்மானங்களையும் இப்பகுதியில் விவரித்துக் கூற விரும்புகிறேன். எமது இயக்கத்தின் பிரதிநிதியாகவும், ஆலோசகராகவும் முக்கிய நிகழ்வுகளில் நேரடியாகப் பங்கு கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பொய்க் குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்து, உண்மை நிலைமையை எடுத்து விளக்குவதே எனது குறிக்கோள். இந்திய - புலிகள் உறவு பற்றிய உண்மைச் சம்பவங்களைக் கால வரிசையில் தொகுத்து, செம்மையான முறையில் வரலாற்றுப் பதிவு செய்வது அவசியம் எனக் கருதுகிறேன்.

(தொடரும்...)

# பூமியில் மனித வாழ்வுக்கு கடலில் நுண்ணுயிரி அவசியம்



கடல் நீரில் வசிக்கும் உயிர்களில் உணவுச் சங்கிலியில் கீழ் மட்டத்தில் இருக்கும் நுண்ணுயிரி 'பிளான்ங்டன்'. இது ஒரு லீட்டர் நீரில் சுமார் 10 கோடி அளவில் இருக்கும். இவையே உலகின் பாதிக்கும் மேலான ஒட்சிசனை (பிராணவாயு) உற்பத்தி செய்கிறது.

புவி வெப்பமயமாதலால் காபனீரொட்சைட் (கரியமிலவாயு) அதிகரித்து மழைக்காடுகளைப் போல இந்த பிளான்ங்டன்களும் அழியும் நிலையை எட்டியுள்ளன.

ஆறறிவுடன் நாம் இருப்பதால் இந்த உலகத்தை நாமே ஆள்கிறோம் என்று அர்த்தமல்ல! நாமும் இந்த பூமியின் ஒரு அங்கம்.

அதைக் காக்க வேண்டிய கடமை நமக்கும் உள்ளது. உலக மக்கள் எல்லோருக்கும் தாழ்மையான கோரிக்கை இதுவே!

# உள்ளாடைகளுடன் பரீட்சை எழுதிய மாணவர்கள்




உத்தரபிரதேச மாநிலம் முசாபர் நகரில் ராணுவத்தில் பதிவு எழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை நடைபெற்றது. இதில் 11 ஆயிரம் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

பரீட்சை எழுத வந்த அனைவரும்தங்கள்ஆடைகளைக் களைந்து விட்டு உள்ளாடையுடன் பரீட்சை எழுத வேண்டும் எனக் கூறப்பட்டது.

இதனால் பரீட்சைக்கு வந்த அனைத்து இளைஞர்களும் உள்ளாடையுன் பெரிய மைதானத்தில் இருந்து பரீட்சை எழுதினர்.

'கடந்த முறை நடைபெற்ற பரீட்சையில் எங்களுக்கு மோசமான அனுபவம் ஏற்பட்டது. அனைவரும் எங்களை ஏமாற்றி ஒருவரின் வினாத்தாளை ஏனையோர் பார்த்து எழுதினார்கள். அதனைத் தவிர்ப்பதற்கே உள்ளாடையுடன் பரீட்சை எழுத வேண்டும் எனக் கூறினோம்' என்று இந்தச் சம்பவம் தொடர்பில் ஆட்சேர்ப்பு இயக்குனர் அலுவலக அதிகாரிகள் கூறினர்.

# உலகில் அதிவேக தானியங்கி கார் அறிமுகம்

உலகில் கார் நிறுவனங்கள் தாங்கள் தயாரிக்கும் கார்களில் பல புதுமைகளைப் புகுத்தி வருகின்றன.

இந்நிலையில், கார் தயாரிப்பில் முன்னணி வகித்து வரும் நிறுவனங்களில் ஒன்றான Faraday தற்போது உலகின் அதிவேக தானியங்கி கார்களைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்த அதிவேக தானியங்கி கார்களைத் தயாரிக்கும் பணியானது கடந்த 2016 ஆம் ஆண்டின் இறுதியில் தொடங்கப்பட்டது.

இந்தக் காருக்கு FF 91 என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தக் காரில், சக்தி வாய்ந்த1050 horsepower கொண்ட என்ஜின்கள் பொருத்தப்படவுள்ளன.

இந்தக் காரானது, 2.40 வினாடிகளில் 0-100 கி.மீ. வேகத்தைத் தொட்டு விடக்கூடியது.



# இரண்டாகப் பிளவடையும் மிகப் பெரிய பனிப்பாறை

உலகின் மிகப்பெரிய 10 பனிப்பாறைகளில் ஒன்றான Larsen C எனப்படும் அன்டார்ட்டிக்காவைச் சேர்ந்த பனிப்பாறை விரைவில் இரண்டாகப் பிளக்க உள்ளது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ராட்சதப் பனிப்பாறை 350 மீற்றர் கனவளவு கொண்டது.

இந்தப் பனிப்பாறையில் பல ஆண்டுகளாக வெடிப்பு தோன்றியிருந்த போதிலும் இந்தப் பிளவு கடந்த டிசம்பர் மாதம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

1995ல் Larsen A பனிப்பாறையில் ஏற்பட்ட அதிர்வு, 2002ல் Larsen B இல் ஏற்பட்ட திடீர் பிளவு ஆகியவற்றைத் தொடர்ந்து, இப்போது Larsen C பனிப்பாறையை விஞ்ஞானிகள் கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில் 5 ஆயிரம் சதுர கிலோமீற்றர்கள் பரப்பளவு கொண்ட இந்தப் பனிப்பாறை இன்னும் 20 கிலோ மீற்றர்கள் நீண்டால் இரண்டாகப் பிளந்துவிடும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.



# தொழில்நுட்பக்கதிர்

## 2 முன்பக்கக் கமெராக்களுடன் அறிமுகமாகின்றது

## vivo v5 plus




சந்தையில் ஸ்மார்ட் போன்கள் அதிகமாக விற்கப்பட்டாலும், மக்கள் விரும்புவது செல்ஃபி எடுப்பதற்கு நல்ல மொபைல் வேண்டுமென்றுதான்.

இப்போதெல்லாம், கைபேசியின் பின்புற கமெராவை யாரும் அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. முன்பக்கக் கமெராவினால் செல்ஃபி மயமாகிவிட்டது.

இந்நிலையில், முன்னணி ஸ்மார்ட் கைப்பேசி நிறுவனமான vivo நிறுவனம் ஓர் புதிய கைபேசியான vivo v5 plus யை அறிமுகம் செய்ய உள்ளது.

இந்தக் கைபேசியானது, செல்ஃபி பிரியர்களை கவர்வதற்காகவே தயாரிக்கப்பட்டுள்ளது. இரண்டு முன்பக்க கமெராவுடன் அறிமுகமாகும் இந்தக் கைபேசி இரண்டு சிம் போடக்கூடியதாகவும், திரையின் அளவு 5.5 அங்குலம் கொண்டதாகவும், மின்கலத்தின் சேமிப்புத் தன்மை 3000mAh கொண்டதாகவும், 4GB RAM உடையதாகவும், பின்பக்கக் கமரா 13MP கொண்டதாகவும், முன்பக்கக் கமெரா இதுவரை இல்லாத அளவு 20MP கொண்டதாகவும் காணப்படுகின்றது.

## ஜேம்ஸ்பாண்ட் வாகனம்



ஜேம்ஸ்பாண்ட் திரைப்படங்களில் அதிவேக ஸ்மார்ட் படகை பார்த்திருப்போம். இதை உண்மையாக்கும் விதமாக அதேபோன்ற படகை வடிவமைத்துள்ளனர். பல்வேறு நவீன வசதிகள் இதில் உள்ளன. குறிப்பாக மின்சாரத்தில் இந்தப் படகு இயங்குகிறது. ஒரு தரம் சார்ஜ் செய்தால் 100 கிலோ மீட்டர் வரை பயணிக்க முடியும் என்றும், 40 கிலோமீட்டர் வேகத்தில் செல்ல முடியும் என்றும் கூறப்படுகின்றது. இப்படகில் இரண்டு பேர் மட்டுமே பயணிக்க கூடிய வகையிலும் வடிவகைக்கப்பட்டுள்ளது. இந்தப் படகின் எடை 100 கிலோ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உலகிலேயே அதிக சேமிப்புக் கூடிய USB flash drive அறிமுகம்



உலகின் அதிக சேமிப்புத் தன்மை கொண்ட யுஎஸ்பி (USB) யை கிங்ஸ்டன் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

இந்த ஆனது USB ஆனது 2TB (2000GB) சேமிப்புத் தன்மை கொண்டது.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் சந்தையில் விற்பனைக்கு வரும் என்றும் அதன் விலை குறித்து இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த USB 72mmx26.94mmx21mm அளவு (Dimensions) கொண்டதாகவும், -25°C to 60°C காலநிலைகளில் இயங்கக் கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், சேமிப்பின் வேகம் 3.1 தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டள்ளது. அத்துடன் இந்த USB அனைத்து இயங்குதளங்களுக்கும் பயன்படுத்த முடியும் எனவும் கூறப்பட்டுள்ளது. ஏற்கவே இந் நிறுவனம் 1TB USB வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூகுள் அறிமுகப்படுத்தும் ஸ்மார்ட் கைக்கடிகாரம்



கூகுள் நிறுவனம் ஆன்ட்ரொய்ட் தொழிநுட்பத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள கைக்கடிகாரத்தை அறிமுகப்படுத்தவுள்ளது.

அன்ட்ரொய்ட் ஸ்மாட்போன்களை தொடர்ந்து அன்ட்ரொய்ட் இயங்குதளத்தில் இயங்ககூடிய ஸ்மார்ட் கைக்கடிகாரத்தை கூகுள் நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்தக் கைக்கடிகாரம் தொடு திரை வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், இவ்வருடத்தில் இந்தக் கைகடிகாரங்கள் சந்தையில் விற்பனைக்கு வரும் எனவும் கூறப்படுகின்றது.

இந்த ஸ்மார்ட் கைக்கடிகாரம் 2.0 அன்ட்ரொய்ட் இயங்கு தளத்தில் உருவாக்கப்பட்டுள்ளதாக கூகுள் நிறுவனத் தயாரிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கைகடிகாரத்தில் நேரம் பார்ப்பது மட்டுமன்றி கூகுள் தேடுபொறித் தளத்தையும் இது கொண்டுள்ளது.

மேலும் மிகச் சிறிய தொடு திரை அமைந்துள்ளதுடன் ஸ்மார்ட் கைக்கடிகாரத்தில் குறிப்புகளை கூட சேமித்து வைக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டள்ளது.

## அதிக RAM வசதி கொண்ட ஸ்மார்ட்போன் அறிமுகம்



உலகின் முதல் முதலாக 8 GB RAM வசதி யுடன் கூடிய ஸ்மார்ட் போனை தாய்வானைச் சேர்ந்த ஆஸூஸ் (asus) நிறுவனம் அறிமுகப் படுத்தியுள்ளது.

ஆஸூஸ் ஜென்போன் ஏஆர் (asus zenfone ar) என்று அழைக்கப்படும் இந்த ஸ்மார்ட்போன், அமெரிக்காவில் நடந்து வரும் கண்காட்சியில் (CES2017) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதில், டேங்கோ (tango)மற்றும் டேட்ரீம் (daydream) என இரு அம்சங்களைக் கொண்டுள்ளது. டேங்கோ கனிணியில் பயன்படுத்தும் உணரிகளைக் (சென்சார்கள்) கொண்டது. இதன்மூலம் ஒவ்வொரு புகைப்படத்தையும் முப்பரிமாண வடிவத்தில் காணமுடியும். டேட்ரீம் வசதி மூலம் விசுவல் ரியாலிட்டி மூலம் கேம்ஸ் மற்றும் வீடியோ வசதி பயனாளர்களுக்குக் கிடைக்கும். இதுதவிர, ஓட்டோ ஃபோக்கஸ் (auto focus) போன்ற வசதிகளை இக்கைபேசி கொண்டுள்ளது.

பொன்.வேணு கிருஷ்ணா




**ஆயுதக் குழுக்கள் இயங்கவும், பயிற்சி பெறவும், துருக்கி இடம் கொடுத்தது**

2010 இல் சிரிய அரசுக்கு எதிராக மக்கள் எழுச்சி இடம்பெற்றது. அந்தச் சந்தர்ப்பத்தை முஸ்லிம் சகோதரத்துவ கட்சி பயன்படுத்திக் கொண்டது. அப்போது உருவான ஆயுதக் குழுவுக்கு, சவூதி அரேபியாவும், கட்டாரும் நிதியும், ஆயுதங்களும் வழங்கின. இதே நேரம், ஆயுதக் குழுக்கள் இயங்கவும், பயிற்சி பெறவும், துருக்கி இடம் கொடுத்தது. எண்பதுகளில் நடந்ததைப் போன்று, 2010 போராட்டமும், சுன்னி முஸ்லிம்களின் எழுச்சியாகக் கருதப்பட்டது. (ஷியா, கிறிஸ்தவ சமூகங்களைச் சேர்ந்த சிரியர்கள், அந்தக் கிளர்ச்சியில் பங்கு பற்றவில்லை. அவர்கள் இன்றைக்கும் ஆசாத் அரசை ஆதரிக்கின்றனர்.)

**சுன்னி முஸ்லிம் அதிகாரிகளும், படைவீரர்களும் துருக்கிக்குத் தப்பி ஓடினார்கள்**

வெளிநாட்டு நிதி, ஆயுதங்கள் துருக்கி ஊடாக கிடைத்து வந்தன

2010 இல் சிரிய அரசுக்கு எதிரான, சுன்னி முஸ்லிம் சமூகப் போராளிகளின் ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்தது. தமது சமூகத்தைச் சேர்ந்த போராளிகளை எதிர்த்துப் போரிட விரும்பாத, சிரிய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய சுன்னி முஸ்லிம் இராணுவ வீரர்கள் மத்தியில் அதிருப்தி எழுந்திருந்தது. சிரிய இராணுவத்தில் இருந்த, கணிசமான அளவு சுன்னி முஸ்லிம் அதிகாரிகளும், படைவீரர்களும் துருக்கிக்குத் தப்பி ஓடினார்கள். அவர்கள் அங்கிருந்து ''சுதந்திர சிரியா இராணுவம்'' (FSA) என்ற பெயரில் இயங்கினார்கள். ஆனால், மேற்கத்தேய நாடுகளில் எதிர்பார்க்கப்பட்டமை போன்று, சிரிய சுதந்திர இராணுவம், பலமான எதிர்ப்புச் சக்தியாக உருவெடுக்கவில்லை.

சிரிய அரசுக்கு எதிராகப் போராடும் போராளிக் குழுக்களுக்கு, தாராளமாக நிதி, ஆயுதங்களை அள்ளி வழங்க பல வெளிநாடுகள் முன்வந்தன. இந்த வெளிநாட்டு நிதி, ஆயுதங்கள் துருக்கி ஊடாகக் கிடைத்து வந்தன.

**ஈராக்கிய அல்குவைதா, அல் நுஸ்ரா (Jabhat al-Nusra) என்ற பெயரில் சிரியாவில் களமிறங்கியது.**

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, ஈராக்கிய அல்குவைதா சிரியாவுக்குள் ஊடுருவியது. பின்லேடனின் அல்குவைதாவும், ஈராக் அல்குவைதாவும் ஒன்றல்ல. ஈராக் அல்குவைதா, அந்த நாட்டு சுன்னி முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவ படுத்திய அமைப்பு. பின்லேடனின் அல்குவைதாவின் அரசியல் கொள்கைகளை வரித்துக் கொண்டனர். அதில் முக்கிய மானது, முதலாம் உலக யுத்த முடிவில் ஏற்பட்ட பிரிட்டிஷ் - பிரெஞ்சு ஒப்பந்தம் (Syces & Picot Agreement.).

**ஈராக் நாட்டை மட்டுமல்ல, சிரியாவையும் சேர்த்து அரசமைப்பது அவர்களின் எதிர்கால இலட்சியம்.**

முதலாம் உலகப்போரின் முடிவில் தான், இன்றுள்ள சிரியா, ஈராக் என்ற தேச எல்லைகள் பிரிக்கப்பட்டன. எல்லை பிரிப்பது குறித்து, அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த அரபு மக்களுடனோ, அவர்களின் பிரதிதிகளுடனோ கலந்தாலோசிக்கப் படவில்லை. அதைக் காரணமாகக் காட்டும் அல்குவைதா, அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து வருகின்றது. அதனால், ஈராக் நாட்டை மட்டுமல்ல, சிரியாவையும் சேர்த்து அரசமைப்பது அவர்களின் எதிர்கால இலட்சியம். ஈராக்கிய அல்குவைதா, அல் நுஸ்ரா (Jabhat al-Nusra) என்ற பெயரில் சிரியாவில் களமிறங்கியது.

**அந்த இயக்கத்தில் எந்த நாட்டவரும் உறுப்பினராகச் சேரலாம்**

லிபியாவில் கடாபிக்கு எதிராகப் போரிட்ட போராளிகள் சிரியாவில் வந்து குவிந்தார்கள்

அல் நுஸ்ரா பெற்ற போர்க்கள வெற்றிகளை, FSA பெற்ற வெற்றிகள் என்று திரித்துக் கூறினார்கள்.

அது ஓர் அல்குவைதா பாணி இயக்கம். அதன் அர்த்தம், அந்த இயக்கத்தில் எந்த நாட்டவரும் உறுப்பினராகச் சேரலாம். அதனால், சர்வதேச ஜிகாதிகளையும் ஒன்று சேர்க்க முடிந்தது. குறிப்பாக லிபியாவில் கடாபிக்கு எதிராகப் போரிட்ட போராளிகள் சிரியாவில் வந்து குவிந்தார்கள். ஆட்பலம் ஆயுத பலம் மிக்க அல் நுஸ்ரா, பல இடங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. சிரியா, லெபனானில் வாழும் மக்களுக்கு இந்த விவரங்கள் தெரியும். ஆனால், மேற்கத்தேய ஊடகங்கள் சிரியாவில் அல்குவைதாவின் இருப்பை மூடி மறைத்து வந்தன. அல் நுஸ்ரா பெற்ற போர்க்கள வெற்றிகளை, FSA பெற்ற வெற்றிகள் என்று திரித்துக் கூறினார்கள். ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களும், சிரியாவில் போரிடுவது பற்றிய தகவல்கள், அண்மைக் காலமாக வெளிவருகின்றன. அதற்குப் பிறகு தான், சிரியாவில் அல் நுஸ்ரா என்ற அல்குவைதா பாணி இயக்கம் இருக்கின்றது என்ற உண்மையை ஒத்துக்கொள்ள ஆரம்பித்தன.


A few days before his death, Harroun was looking forward to getting an early parole release and returning to Syria to fight.

''அல்குவைதாவும், அமெரிக்காவும் எதிரிகள்'' என்று நம்பும் அப்பாவியா நீங்கள்? அமெரிக்க இராணுவத்தின், இரகசியமான துணைப்படை போன்றது தான் அல்குவைதா என்பது, ஏற்கனவே பலதடவைகள் நிரூபிக்கப் பட்ட விடயம். ஒரு முன்னாள் அமெரிக்க இராணுவ வீரர். அப்போது, Al Nusrah இல் சேர்ந்து போராடினார். Eric Harroun என்ற 30 வயது இளைஞர், முஸ்லிமாக மதம் மாறி, சிரியாவின் ''விடுதலைப் போராட்டத்தில்'' பங்கெடுத்து வருகிறார். சிரிய தீவிரவாதக் குழுக்கள் மத்தியில், ''அமெரிக்கன்'' என்று செல்லமாக அழைக்கப்பட்டவர். ஆனால், இவர் மட்டுமே ஒரேயோர் அமெரிக்கர் அல்லர். இன்று வரையில், எத்தனை அமெரிக்கர்கள் சிரிய அல்குவைதாவில் சேர்ந்து போரிடுகிறார்கள் என்ற விவரம் யாருக்கும் தெரியாது.

Eric Harroun சிரியாவிலும், அமெரிக்காவிலும் பிரபலமாக அறியப்பட்ட ஒருவர். அதற்குக் காரணம், சிரிய படைகளுக்கு எதிரான பல தாக்குதல்களில் பங்குபற்றியிருக்கிறார். சிரிய இராணுவ ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த்தியதைக் காட்டும் வீடியோ ஒன்றில், இவர் தலையைக் காட்டுகிறார். அதைத் தவிர, இன்னொரு வீடியோவில், சிரிய அதிபர் ஆசாத்துக்கு எதிராகக் கொலைப் பயமுறுத்தல் விடுக்கின்றார். அப்போது நடந்த மோதலில், சில தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் எனவும், எரிக் ஹரூனும் அவர்களில் ஒருவர் என்றும் சிரிய அரசு அறிவித்திருந்தது. ஆனால், தான் இன்னும் சாகவில்லை என்று, Eric Harroun பேஸ்புக் மூலம் அறிவித்துள்ளார். மேலும், தான் Al Nusrah வில் சேரவில்லை என்றும், (மதச்சார்பற்ற) FSA வில் சேர்ந்திருக்கிறார் என அவர் அறிவித்துள்ளார்.

ஆயினும், சுதந்திர சிரிய இராணுவம் என்ற FSA, முழுக்க முழுக்க முன்னாள் சிரிய படையினரையும், சிரிய பிரஜைகளையும் கொண்ட படை என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், இந்த அமெரிக்கர் போன்ற வெளிநாட்டுப் போராளிகள், பொதுவாக அல்குவைதாவின் கிளை அமைப்பான Al Nusrah போன்ற இயக்கங்களில் சேர்வது ஊரறிந்த இரகசியம் ஆகும். அமெரிக்கர்களுக்கும், அல்குவைதாவுக்கும் நெருங்கிய உறவு இருக்கிறதென்பது இன்றைக்கும் பலருக்குத் தெரியாது. அதனால், ஏதாவது பொய் சொல்லி தட்டித்துக் கொள்ளப் பார்க்கின்றனர்.

மூலம்:https://news.vice.com/article/american-jihadist&eric-harroun-dies-at-31

WAR & CONFLICT

'American Jihadist' Eric Harroun Dies at 31

By Robert Young Pelton

April 10, 2014 5:10 am

Eric Harroun, the US Army vet who went to Syria to fight with the Free Syrian Army died Tuesday, according to his family.Harroun, 31, was found unresponsive and declared dead at his father's home in Phoenix, Ariz. Wednesday afternoon. An autopsy will be conducted over the next two days. "With deep sorrow, we regret to inform you of our beloved Eric Harroun's death. He will be missed by his family, friends, and many people around the world his life has touched," his family members posted on Harroun's Facebook page. After spending two months fighting, Harroun, who was also as known as the "American Jihadist" returned to Istanbul where he voluntarily briefed members of the US Consulate including the FBI, CIA and even federal prosecutors on his activities and his interest in arranging support and weapons for the U.S. backed rebels.


Instead of helping to provide weapons and support to the FSA via Harroun, the FBI arrested him, charged him with terrorism and put him in solitary confinement for six months in a U.S. prison.The center point of the government's allegations were that Harroun fought with al Nusra, an al Qaeda linked group

சிரியாவில் போரிட்ட இன்னோர் அமெரிக்கர் பெயரும் ஊடகங்களில் அடிபட்டது. Matthew VanDyke என்ற பெயரை உடைய அந்த அமெரிக்கர், தான் ஓர் ''ஊடகவியலாளர்'' என்று சொல்லி சமாளிக்கப் பார்த்தார். இவர் முன்பு லிபியாவில் கடாபி அரசுக்கு எதிராகப் போரிட்டவர். அங்கே வேலை முடிந்தவுடன் சிரியா வந்து விட்டார். அவரது புகைப்படமும், சிரிய அரச ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டமையால்தான், வெளியுலகம் அவரைப் பற்றி அறிந்து கொண்டது. இவர்களைப் போல இன்னும் எத்தனை அமெரிக்கர்கள், அல்குவைதா தீவிரவாதிகள் என்ற பெயரில் உலகத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்களோ? அந்த ஒபாமாவுக்கே வெளிச்சம்!

(கேள்வி தொடரும்...)

### திருத்தந்தையின் புத்தாண்டு வாழ்த்து

இப்புதிய ஆண்டின் தொடக் கத்தில் உலகின் மக்களுக்கும் நாடுகளுக்கும் எமது இதயங் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம் என டுவிட்டரில் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### 2016ஆம் ஆண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் நிகழ்வுகள்

2016ஆம் ஆண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் நிறைவேற்றிய நிகழ்வுகளில் ஏறக்குறைய நாற்பது இலட்சம் பேர் கலந்து கொண்டுள்ளனர். இது 2015 ஆம் ஆண்டைவிட அதிகம் என திருப்பீட இல்ல நிர்வாகத்துறை தெரிவிக்கின்றது.

# அன்னை மரியா வழியாக நாம் அனைவரும் ஒரே குடும்பத்தினர் என்கிறார் திருத்தந்தை

## புத்தாண்டு திருப்பணியின்போது ஆசிச் செய்தி

நாம் அநாதைகள் அல்லர்; நமக்கொருஅன்னை இருக்கிறார் என்ற எண்ணம் - நாமனைவரும் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள்என்றசிந்தனையை நோக்கி இட்டுச் செல்கி றது என தூய பேதுரு பேராலயத்தில்புத்தாண்டு திருப்பலியில் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். இறைவனின் தாயாகவும், நமதுஅன்னையாகவும் ஆண்டின் முதல் நாளில் அன்னை மரியாவை நோக்குவது ஆண்டு முழுவதும் அன்னை நம்முடன் வரவிருக்கும் ஓர் உறுதிப்பாட்டை நினைவுகூர்வதாகும் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.



## முன்னாள் திருத்தந்தைக்கு நல்வாழ்த்து கிறிஸ்மஸ் அன்று திருத்தந்தை தெரிவிப்பு

வத்திக்கானில் முன்னாள் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்கள் தங்கி இருக்கும் இல்லம் சென்று கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். இரு திருத்தந்தையரும் சிற்றாலயத்தில் சிறிது நேரம் செபித்த பின்னர் சிறிது நேரம் உரையாடினர். வத்திக்கானில் முன்னாள் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்கள் வாழ்வது வீட்டில் ஒரு ஞானமுள்ள தாத்தா வாழ்வதுபோல் உள்ளது என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பல தருணங்களில் கூறியிருக்கிறார்.



## கடத்தப்பட்ட அருள் பணியாளர் டாம் விடுதலைக்கு உதவுமாறு விண்ணப்பம்

ஏமனில் 4 மார்ச் 2016 அன்று ஐ.எஸ். இஸ்லாமிய் அரசால் கடத்தப்பட்ட இந்திய சலேசிய சபை அருள்பணியாளர் டாம் அவர்கள் தனது விடுதலைக்காகத் திருத்தந்தை பிரான்சிஸ், இந்திய அரசு மற்றும் உலகளாவிய கத்தோலிக்கருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பல மாதங்களாக எந்தச் செய்தியும் வெளிவராத நிலையில் கடத்தல்காரர்கள் வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள ஒரு காணொலியில் அருள் பணியாளர் டாம் அவர்கள் தமது விடுலைக்கு உதவுமாறு விண்ணப்பித்துள்ளார். ஏமனில் பிறரன்பு மறைப்பணியாளர் சகோதரிகள் சபை நடத்திய முதியோர் இல்லத்தை ஆயுதம் தாகுதலின்வர்கள் நடத்திய தாக்கியபோது அருள்பணியாளர் டாம் கடத்தப்பட்டார்.

கடந்த ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அருள்பணி டாம் அவர்களின் விடுதலைக்காக வேண்டுகோள் விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உண்மையின் எண்ணங்கள்

# கிறிஸ்மஸ் ஒரு குடும்பத்தின் கதை

அன்னை மரியா வழியாக நாம் அனைவரும் ஒரே குடும்பத்தினர் என்று 2017 ஆவது புத்தாண்டுத் திருப்பலியில் திருத்தந்தை பிரதான்சிஸ் அவர்கள் தெரிவித்து முழு உலக மக்கடுளையும் ஒரு குடும்பமாகப் படம்பிடிக்கிறார்.

கிறிஸ்து பிறப்பு பெருவிழா கூட ஒரு குடும்பத்தின் கதைதான். சாதாரண மக்களின் வாழ்க்கைக் கதை. குடும்பங்களில் நடைபெறும் அன்றாட நிகழ்வுகளின் கதை. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் குடும்பத்திலேயே தீர்வு கண்ட கதை. மரியா தூய ஆவியால் கருவுற்ற செய்தியால் தயங்கிய யோசேப்பு - இறைவனின் தாயாவது எப்படி - கலக்கத்தின் மத்தியிலும் இறை நம்பிக்கை தளராத அன்னை மரி - இவர்களின் குடும்ப சவால்களின் பங்கெடுப்பு தான் கிறிஸ்து பிறப்பு விழா. இன்று எதிர்நோக்கப்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் குடும்பத்திலேயே தீர்வு காணப்பட வேண்டும்.

## கலங்கரை விளக்கு அன்னை தெரேசா கிறிஸ்மஸ் செய்தியில் எலிசபெத் அரசி

மிகச் சாதாரண மக்கள் மிக உன்னதமானவற்றைச் செய்யமுடியும் என்பதற்குக் கொல்கத்தாவின் அன்னை தெரேசா சிறந்ததோர் எடுத்துக்காட்டு என 90 வயதான அரசி எலிசபெத் கிறிஸ்மஸ் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பல உன்னதப் பணிகளில் ஈடுபட்டுள்ள பலர் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் அளவு புகழ்பெறுவதில்லை என்றாலும் அவர்களது பணியை அர்ப்பண உணர்வுடன் செய்துவருகின்றனர். இவ்வாறு மறைந்து வாழுவோருக்கு அன்னை தெரேசா ஒரு கலங்கரை விளக்காக இருக்கிறார் என அரசி மேலும் தெரிவித்துள்ளார்.

## அன்னை தெரேசா பெயரில் உலகத் திரைப்பட விழா

### ஜன 5 முதல் கோவாவில்




அன்னை தெரேசா அகில உலக திரைப்பட விழா இந்தியாவின் கோவா நகரில் ஜனவரி 5 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை கோவா தலத்திருஅவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்னையின் வாழ்வு - பணிகள் ஆகியவற்றை வெளிச்சத்திற்குக் கொணர்வதன் வழியே ஆயிரக்கணக்கானவர்கள் பயனடைவர் என்ற நோக்கத்துடன் இந்த திரைப்பட விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் உருவாக்கப்பட்ட In the name of God's poor, இந்தியாவில் உருவாக்கப்பட்ட All for God's Love - Nirmal Hriday ஆகிய திரைப்படங்களும் பிரித்தானியாவில் உருவாக்கப்பட்ட Mother Teresa and Me மற்றும் ஸ்பெயின் நாட்டில் உருவாக்கப்பட்ட The , Fifth World என்ற திரைப்படமும் அங்கு திரையிடப்படவுள்ளன.

## உலக இளையோர் தின கருப்பொருள்

2017ஆம் ஆண்டில் சிறப்பிக்கப்படும் 32ஆவது உலக இளையோர் தினத்துக்கு - 'வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர் (லூக். 1:49)' என்ற கருப்பொருள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் திருத்தந்தை சுட்டிக்காட்டியுள்ள இந்த தலைப்புகள் 2014 முதல் 2016ஆம் ஆண்டுவரை சிறப்பிக்கப்பட்ட உலக இளையோர் தினத்தின் மையப்பொருள்களின் தொடர்ச்சியாக உள்ளன என்றும் திருப்பீட பொது நிலையினர் குடும்பம் மற்றும் வாழ்வு அவை அறிவித்துள்ளது.

## இரக்கம் பற்றிய 'உலகத் திருத்தூது' மாநாடு மணிலாவில்

2017ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை இரக்கம் பற்றிய நான்காவது உலகத் திருத்தூது மாநாடு மணிலாவில் 'இரக்கத்தில் ஒன்றிப்பு - இரக்கத்துக்காக மறைப்பணி' என்ற தலைப்பில் இடம்பெறுகிறது.

இரக்கம்பற்றிய உலக திருத்தூது மாநாடு கத்தோலிக்கத் திருஅவையில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்றது. இரக்கம் பற்றிய முதல் உலக மாநாடு உரோமையில் 2008ஆம் ஆண்டிலும், 2 ஆவது மாநாடு போலந்தின் கிரக்கோவில் 2011ம் ஆண்டிலும், 3 ஆவது மாநாடு கொலம்பியாவின் பொகோட்டாவில் 2014ஆம் ஆண்டிலும் நடைபெற்றன.

காலைக்கதிர் Kalaikkathir



# பெண் சமத்துவம் எங்குள்ளது...?

■ மாலா கோகிலவாணி

அடுப்படியே உலகம் என்று பெண்களுக்காக வகுக்கப்பட்ட வாழ்க்கை முறை இன்று பல மாறுதல்களை அடைந்திருந்தாலும் அவர்கள் இன்னும் பயணிக்க வேண்டிய தூரங்கள் அதிகமாகவே காணப்படுகின்றன.

பெண்கள் இன்று பல துறைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள் என்ற ஒருபக்க நியாயப்பாடுமிக்க கருத்துக்களும் பெண்களுக்கு சமத்துவம் கிடைக்கப்பெற்றுவிட்டதென்ற நியாயப்பாடுகளும் இன்று சமூகத்தில் முன்மொழியப்பட்டு வருகின்றன.

அக்கருத்துக்களின் அடிப்படையில் பார்த்தால், பெண்கள் ஒவ்வொரு துறையிலும் கால்பதித்துள்ளனர். அப்படியே கால்பதித்திருந்தாலும் அவர்கள் சமத்துவமாக மதிக்கப்படுகின்றார்களா? சுரண்டல்கள் என்பதும் இரண்டாந்தரமாகப் பார்க்கப்படும் அடிமட்ட சிந்தனைகளிலிருந்தும் பெண்கள் விடுபட்டுவிட்டார்களா? என்றால் அவை இன்னும் அடையப்படவில்லை என்பதே பெண்கள் தரப்பு நியாயப்பாடாகக் காணப்படுகின்றது.

இன்று வீதியில் செல்லும் ஒரு பெண்ணை தமக்கு சமமானவள் என்று நினைப்பவர்கள் எத்தனைபேர்தான் உள்ளனர். மாறாக அவள் பெண் என்னும் கண்ணோட்டத்தையே இன்றும் காணமுடிகிறது.

கல்வித்துறை முதல் அனைத்து துறைகளிலும் பெண்கள் உயர்ந்த இடத்தை அடைந்தாலும் சமூகத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் அந்தஸ்து என்பதும் அவர்கள் சார்ந்த துறைகளில் எதிர்நோக்கும் சவால்கள் என்பதும் அளப்பரியன. இன்று பாடசாலை முதல் வைத்தியசாலை என்று அனைத்து இடங்களிலும் பெண்களுக்கான வன்முறைகள் அதிகரித்தே காணப்படுகின்றன. பெண்கள் பாதுகாப்பற்றவர்களாகவும் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாகவும் காணப்படும் நிலை இன்று அதிகரித்தே காணப்படுகிறது.

பெண்களின் பாதுகாவலர்களாகவும் ஆண்கள் இருப்பது எமது சமூகத்தின் இயலாமையை எடுத்துக்காட்டுகின்றது. ஆண், பெண் சமத்துவம் என்பது எமது சமூகத்தில் நிலை நிறுத்தப் பட்டிருக்கும் என்றால் 'பெண் வன்முறை', 'பெண் பாதுகாப்பு', 'இரண்டாம்தர நிலை' என்ற பதங்களுக்கான தேவை இன்று இருந்திருக்காது.

சமூகத்தில் ஊடுருவிப் போயிருக்கும் பெண்ணடிமை என்ற ஆணிவேரைப் பறித்தெறிய வேண்டும். பிறக்கும் குழந்தைகளிலிருந்தே ஆண், பெண் சமத்துவம் என்பது வலியுறுத்தப்பட வேண்டும். ஒரு குழந்தை குடும்பத்திலிருந்து அடுத்த படிக்கு காலடி எடுத்து வைப்பது என்றால் அது பாடசாலைப் பருவத்தில்தான். மாணவ பருவத்திலே ஆண், பெண் சமத்துவம் என்பது வலியுறுத்தப்படுமானால் அதுவே சமூக மாற்றத்துக்குக் காரணமாக அமையும்.

பெண்கள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை அதுசார்ந்து செயற்படும் நிறுவனங்கள் சமூக மட்டத்தில் ஏற்படுத்துவனவாக இருந்தால் அது சமத்துவத்துக்குப் பங்களிப்புச் செய்யக் கூடியதாக இருக்கும். பெண் விழிப்புணர்வு செயற்பாடுகளில் வெறுமனே பெண்களை மட்டும் பங்குகொள்ளச் செய்யாது அது சார்ந்த விளக்கங்களை ஆண்களுக்கும் வழங்குவதற்கு முயல வேண்டும்.

வெறுமனே பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளை மட்டும் கருத்திற் கொண்டு செயற்படாது பெண்களின் வளர்ச்சி சார்ந்த செயற்றிட்டங்களில் இந்த நிறுவனங்கள் அக்கறை செலுத்துவனவாகத் திகழ்ந்தால் பெண் சமத்துவத்தை இலகுவில் அடைந்துவிடலாம். பெண் அடிமை, பெண் பாரபட்சம், பெண் வன்முறைகள் என்பவை எந்தெந்த மட்டங்களிலிருந்து எழுகின்றன என்பதை அறிந்து அதற்கு முற்றுப் புள்ளியிட்டால் மட்டுமே பெண் சமத்துவம் சாத்தியமானதாக அமையும்.



# பெண்கள் பற்றிய பொன்மொழிகள்

★ அன்பு செய்யும் பெண்ணின் நெஞ்சம் எப்போதும் இளமை உடையது - டேவிட்ஹ்யூம்

★ பெண்களின் கண்ணீர் உலகிலேயே மிக ஆற்றலுள்ள நீர் சக்தி - வில்சன் மிஸ்னர்.

★ பெண் எந்தக் காற்றிலும் அசைந்தாடிக் கொண்டிருக்கும் நாணலைப் போன்றவள். ஆனால், பெரும்புயலிலும் அவள் ஒடிந்து விழ மாட்டாள் - வேட்லி.

★ பெண்ணின் இதயம் அவளுடைய உதடுகளில் இருக்கிறது. ஆனால் அவளுடைய ஆன்மாவோ அவளுடைய கண்களில் இருக்கிறது - லோர்ட் பைரன்.

★ பொய்மை, கோழைத்தனம், கீழ்க்குணம் ஆகிய மூன்றுமே பெண்கள் பெரிதும் வெறுப்பவை - ஷேக்ஸ்பியர்.

★ பெண்ணே மனிதனின் உயர்ந்த ஊக்கங்கள் எல்லாவற்றுக்கும் விளக்கு - ஜேம்ஸ் எல்லீஸ்.

★ ஒரு பெண்ணின் உள்ளமாகிய கடலில் இரக்கம், தியாகம், கற்பு, காதல் ஆகிய நன்முத்துக்களைக் காணலாம் - பெஸ்லிங்

★ பெண்கள் இறைவனின் படைப்புகளில் எல்லாம் அழகானவை, மேலானது - மில்டன்.

# பெண்ணின் பாதங்கள் தீர்மானிக்குமா?

பெண்ணின் பாதங்களை வைத்து அவர்களின் கணவரின் தலைவிதியை அறிய முடியும் என்று சொல்கிறார்கள்.

அதாவது மனைவியின் பாதம் எவ்வாறு இருக்கிறதோ, அதனைப்பொறுத்தே கணவனின் வாழ்க்கை சிறப்பாக இருக்குமா? இருக்காதா? என்று கூறிவிட முடியும் என்கிறது சாமுத்திரிகா சாஸ்திரம்.

★ பெண்ணின் இரண்டாம் விரல், கட்டை விரலை விட பெரிதாக இருந்தால், அந்தப் பெண் கணவனுக்கு அடங்கமாட்டாள். அவர் சொல்வது எதையும் கேட்காமல் தனக்குதானே முடிவு எடுத்துக்கொள்வதால், திருமண வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினையின் காரணமாக கணவனின் நிம்மதி பாதிக்கப்படும்.

★ கால்விரல்கள் அனைத்தும் பெரிய தோற்றதில் இருந்தால், மலையின் பாரத்தை போன்றே, அனைத்து சுமைகளையும் தாங்கி, கணவனின் வெற்றிக்கு உறுதுணையாக இருப்பாள். மேலும், நல்ல குணம் படைத்தவளாக இருப்பாள்.

★ பெண்கள் நடக்கும்போது, அவர்களின் நான்காம் விரலும், சுண்டுவிரலும் பூமியில் படாமல் இருந்தால், அவர்கள் கணவன் மீது நம்பிக்கையற்றவர்களாக இருப்பார்கள். இதனால் வாழ்வில் சண்டை சச்சரவுகள் ஏற்படும்.

★ நான்காம் விரலும், சுண்டு விரலும் அளவில் ஒரே மாதிரியாக இருந்தால், கணவருக்கு தொழில் நஷ்டம் உண்டாகும்.

★ அனைத்து விரல்களுக்கு இடையே இடைவெளி அதிகமாக இருந்தால், இவர்கள் பண விடயத்தில் ஊதாரியாக இருப்பார்கள். கட்டுக்கடங்காமல் செலவுகளைச் செய்வார்கள்.





# நீங்கள் வீட்டில் தனியாக இருக்கும் பெண்ணா...?

★ வீட்டின் 'கோலிங் பெல்'லை யார் வந்து அடித்தாலும், உடனே சென்று கதவைத் திறந்து விடாதீர்கள். வீட்டுக்கு வந்துள்ள நபர் யார் என்பதை கதவு இடுக்கு வழியே பார்த்துவிட்டு, வந்திருப்பவர் பழக்கப்பட்ட நபர் தான் என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

★ உங்களுக்கு சற்றும் அறிமுகமில்லாத நபர்கள் வீட்டுக்கு வந்தால், அவர்களை ஒருபோதும் உள்ளே அனுமதிக்காதீர்கள். மாறாக வாசலிலேயே வைத்து வந்த காரணத்தைக் கேட்டு அறிந்துகொள்ளுங்கள்.

★ தேவையான நேரம் தவிர மற்ற நேரங்களில் வீட்டு கேற்றை பூட்டி வைத்துவிடுங்கள்.

★ அருகில் வீடுகள் இல்லாமல், நகரின் வெளிப்புறங்களில் வசிப்பவர்கள் இருட்டிய நேரங்களில் நடைப் பயிற்சி மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

★ வீட்டைச் சுற்றிலும் செடி கொடிகளை வளர்த்திருந்தால், திருடர்கள் அதன் பின்புறம் பதுங்கியிருக்கவும் வாய்ப்பிருக்கிறது.

★ வீட்டு உள்வேலைகளுக்குப் பெண் வேலையாள்களையும், வீட்டின் வெளி வேலைகளுக்கு ஆண் வேலையாள்களையும் நியமித்துக் கொள்வது சிறந்தது.

# செக்குமாட்டுக்கு வைக்கோல் கட்டினமாதிரி தீர்வென்றதை வைச்சே பேயராக்குகினம்....!

''வானம் பார்த்த பூமியில் நெல்லை விதைச்சுப் போட்டு, 'எப்படா மழை வரும்?' என்று ஏங்கிறதே, எங்கடை கமக்காரரின் தலைவிதியாகப் போட்டுது'' என்று கவலைப்பட்டபடியே வாத்தியாருடன் சந்தியடியில் வந்தமர்ந்தார் ஏரம்பர்.

''இதைப்பற்றியெல்லாம் கவனமெடுத்து, நிலைமையைச் சீராக்க வேண்டியவை, பதவிக்கும் பவிசுக்கும் போட்டி போடுறதிலையே காலத்தைக் கழிக்கினம்'' என்றாள் செல்லாச்சி, கச்சான் வியாபாரத்தைக் கவனித்தபடி.

''அரசியல்வாதிகளிலும் அதிகாரிகளிலும் பிழை இருக்கலாம். ஆனால், இயற்கை பொய்த்ததுக்கு அவையை எப்படிக் குற்றம் சாட்டுறது?'' என்று கேட்டார் ஏரம்பர்.

''என்னண்ணை கதைக்கிறாய்?'' என்று வெடித்த செல்லாச்சி, ''செக்கு மாட்டிலை ஒரு தடியைக் கட்டி, அதன் நுனியிலை ஒரு வைக்கோல் கட்டைக் கட்டி விடுவினமாம். மாடு வைக்கோலை எட்டித் தின்னலாம் என்று போக வைக்கோலும் முன்னுக்குப் போகும். அப்பிடியே வைக்கோலுக்குப் பின்னாலை மாடு நடந்து கொண்டே இருக்க, செக்குக்காரனுக்கு வேலை முடியுமாம். அது மாதிரி, தீர்வென்ற ஒன்றைக் காட்டியே எங்களுக்குப் பேய்ப் பட்டம் கட்டுகினம். கிராமசபை உறுப்பினரிலையிருந்து, மாகாணசபை, நாடாளுமன்ற உறுப்பினர் வரை எல்லோரும் தீர்வைப்பற்றித்தான் கதைக்கினமே தவிர, தங்கடை அதிகாரத்துக்குள்ளை செய்யிறதுகளைச் சீராகச் செய்யிறதாகக் காணவில்லை''என்றாள்...



அப்போது ஜீவனுடன் வந்தமர்ந்த ரூபன் ''மச்சான், கிழவி உச்சத்திலை நின்று ஆடுது. வாயைக் குடுத்துப் போடாதை'' என்று நண்பனை எச்சரித்தான். ஜீவனும் கைபேசிக்குள் மூழ்கினான்.

இதனைக் கவனித்தபடியே ஏரம்பர் ''இலங்கை முழுவதிலும் எல்லாம் குழம்பித்தானே கிடக்குது'' என்று செல்லாச்சிக்குப் பதில் சொன்னார்.

அதுவரை அமைதியாக இருந்த வாத்தியார் ''அப்பிடி மேம்போக்காகச் சொல்ல முடியாது'' என்று கதைக்கத் தொடங்கினார்.

''யுத்தம் நடந்தபோதும், அதுக்கு முந்திப் பிந்தியும், தெற்கிலை நிர்வாகக் கட்டமைப்பிலையும் வாழ்க்கை முறையிலையும் குழப்பம் பெரியளவில் வரேல்லை. இடையிலை வெடிச்ச குண்டுகள் நட்டக் கணக்கிலைதான் வந்தன. ஆனால், எங்கடை பக்கத்திலை எல்லாமே அழிஞ்சு, வாழ்க்கை முறையே மாறிக்கிடக்கு'' என்று நிலைமையை

## ஊர்வம்பு

குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

விளக்கினார் வாத்தியார்.

''அது சரிதான் வாத்தியார், ஆனால் மழை பெய்யாதது்க்கு அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் எப்படிக் குறை சொல்லுறது?'' என்று தனது தரப்பை நியாயப்படுத்தினார் ஏரம்பர்.

தென்னிலங்கையிலும் வேலை பார்த்த வாத்தியார் சிரித்தபடியே சொல்லத் தொடங்கினார்...

''தெற்கிலை ஆறுகள், குளங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. அதுகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்கினம். அது போதாதென்று இப்பவும் குளங்களை அமைத்து, மழைத்தண்ணியைத் தேக்கி வைக்கினம். இந்த வேலைகள் யுத்தத்துக்கு முன்பிருந்து இன்றை வரைக்கும் தொடர்கின்றன.'' என்று கூறி மூச்சு வாங்கினார் வாத்தியார்.

இந்த இடைவெளியில் செல்லாச்சி ''இங்கே இருக்கிற குளங்களையும் தூர்த்து கட்டடங்களைக் கட்டுகினமே தவிர, கடலிலை வீணாகக் கலக்கிற மழைத்தண்ணீரைத் தேக்கி வைச்சு, தேவையான நேரம் பயன்படுத்த வழியில்லை'' என்றாள்.

''இதெல்லாம் உடனே செய்யிற காரியங்களே? அதோடை அதிக நிதி தேவைப்படுகிற வேலைத் திட்டங்கள் ....'' என்று இழுத்தார் ஏரம்பர்.

''வாக்கு வாங்கும் போது 'வானத்தை வளைப்போம்; மணலைத் திரிப்போம்' என்று சொல்லுறவை... பிறகு சாட்டுச் சொல்ல முடியுமே?'' என்று கொக்கியைப் போட்டாள் செல்லாச்சி.

''அதுதானே, இப்ப இருக்கிற அரசியல்வாதிகள் 'சைக்கிள் குடுக்கிறம், மரம் நடுகிறம்' என்று வாக்குப் பொறுக்குகினமே தவிர, நீண்டகாலத் திட்டம் என்ன போட்டுச் செயல்படுத்தியிருக்கினம்? இவ்வளவு காலத்திலை இவை நட்ட மரங்கள் வளர்ந்திருந்தாலேயே மழை கொட்டோ கொட்டென்று கொட்டியிருக்குமே. ஆனால் முந்தி நட்ட மரங்களைக் காணேல்லை. இப்பவும் நடுகினம்.'' என்று விரக்தியுடன் சொன்னார் வாத்தியார்.

''இவைக்கு ஏற்ற மாதிரி அதிகாரிகளும் 'சாடிக்கு ஏற்ற மூடியாக' வாச்சிருக்கினம்.'' என்றாள் செல்லாச்சி.

அதுவரை மற்றவர்கள் கதைப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த ரூபன் ''இப்ப நடக்கிற அதிபர்கள் நியமனத்தைப் பாருங்கோவன். முதலமைச்சர், அமைச்சர், அதிகாரிகள் என்று ஆளாளுக்கு குழப்பியடிக்கினம்'' என்றான்.

''அதுதான் அதிபர் பரீட்சையிலை சித்தியடைஞ்சவைக்கு நியமனம் வழங்கியாச்சே'' என்று அறிந்ததைச் சொன்னார் ஏரம்பர்.

''பரீட்சையிலை சித்தியடைஞ்சவை வழக்குப் போட வெளிக்கிட்டவையாம். அதுக்குப் பிறகுதான் விழுந்தடிச்சு நியமனம் போட்டவையாம்'' என்று காதில் விழுந்ததைச் சொன்னான் ஜீவன்.

''இப்ப பதில் அதிபர்கள் நியமனம் சிக்கலிலை வந்து நிக்குதாம்'' என்றான் ரூபன்.

''நிர்வாகம் தொடர்ந்து நல்லபடியாக நடக்கிறதுக்காகக் கொண்டுவந்த விதிமுறைகளை, தங்கடை வசதி வாய்ப்புகளுக்காகப் பயன்படுத்தினால் சிக்கல் வரும்தானே'' என்று பொடிவைத்துக் கதைத்தார் வாத்தியார்.

''பூடகமாகக் கதைக்கிறியள்'' என்றார் ஏரம்பர்.

மடித்த கால நீட்டியபடியே விளக்கத் தொடங்கினார் வாத்தியார்...

''தகுதியான அதிபர் கிடைக்காத போது ஆசிரியர் தரத்தில் இருப்பவரை அதிபராக்கி பாடசாலையை தொடர்ந்து நடத்தத்தான் 'பதில் அதிபர்' நியமனம் கொண்டுவரப்பட்டது'' என்ற வாத்தியாரிடம்...

''அப்ப அதிபர் கொழும்புக்குப் போகும்போது, அடுத்த நிலையிலை இருப்பவரிடம் பொறுப்புகளைக் கொடுத்து விட்டுச் சென்று, பிறகு வந்து பொறுப்பேற்பது மாதிரியோ?'' என்று கேட்டான் ரூபன்.

அதற்குச் சிரிப்பையே பதிலாக்கிய வாத்தியார் ''ஆனால் 'தகுதியான அதிபர் கிடைக்காவிட்டால்' என்பதைக் கைவிட்டு, 'ஆசிரியரை அதிபராக நியமிக்கலாம்' என்பதைத் தங்களுக்கு ஏற்ற மாதிரி பயன்படுத்த ஆரம்பித்ததால்தான் பிரச்சினை பிரகண்டமாக மாறியிருக்கு'' என்றார்.

''முன்பிருந்த தொழிற்சங்கத் தலைவர்மார் சிலரும் இப்பிடித்தான் அதிபராகியிருக்கினமாம். அதை வைச்சு இன்றைவரைக்கும் தொடருதாம். அதிலும் யுத்த காலத்திலை சிலபல தேவைகளுக்காகக் கண்டும் காணாமலும் விடப்பட்டதைப் பயன்படுத்தி ஆளாளுக்கு விளையாடித் தள்ளியிருக்கினம்'' என்றார் ஏரம்பர்.

''இடப்பெயர்வுக்குப் பிறகு கதிரையைப் பிடிச்ச சிலர் தொடக்கிய சீர்குலைவுகள்தான், இன்று வரையும் தொடர்கிறதென்றெல்லோ கதைக்கினம்'' என்றான் ஜீவன்.

''புலிகள் யாழ்ப்பாணத்திலை இருக்கும்போது தரமான பலரும் நிர்வாகத்திலை இருந்தவையாம். இடப்பெயர்வின்போது அவைக்குக் கீழை இருந்த சிலர் 'ஆமி வந்தால் உங்களுக்குத்தான் பிரச்சினை' என்று அவையை வெருட்டி அனுப்பிப் போட்டு கதிரையிலை பசையைத் தடவி இருந்திட்டினமாம். அப்ப தொடங்கினதுகள்தான், வாழையடி வாழையாக வருகுதாம்'' என்று காதில் விழுந்ததைக் கூறினான் ரூபன்.

''நேர்மையானவை 'ஏன் பிரச்சினை?' என்று ஒதுங்க, நட்டா முட்டிகளுக்கு வாய்ப்பாகப் போட்டுதாம்'' என்றாள் செல்லாச்சி.

பழைய சம்பவம் ஒன்றை நினைத்துச் சிரித்த வாத்தியார் ''ஒரு பெண் அதிகாரி, தான் எழுதி வெளியிட்ட புத்தகங்களின் வெளியீட்டு விழாக்களுக்கு, தன்னிடம் வேலை பார்க்கிறவையை சிறப்புப் பிரதி பெற வரச் சொல்லுவது வழக்கம். அப்பிடி போற ஆக்கள் பிரதியைப் பெற்றுக் கொண்டு, ஆயிரம் ரூபாவுக்குக் குறைய தட்டிலை போட்டால், அடுத்தநாள் அலுவலகத்திலை கூப்பிட்டு மனுசி ஏசிப் போடும்'' என்றார்.

''இப்பிடித்தான் தொண்டர் ஆசிரியர்களில், கஷ்ரப்பட்டு வேலை பார்த்தவர்கள் எல்லாம் வீதியிலை நிற்க, ஒரு நாள்கூட வேலை பார்க்காத சொந்தம் பந்தத்துக்கெல்லாம் நியமனம் வாங்கிக் கொடுத்த அதிபர்களும் இருக்கினம்''என்று போட்டுடைத்தான் ரூபன்.

''ஆனால், அவையவை தன்தன் வேலை முடிஞ்சால் போதும் என்று இருக்கிறதாலைதான், கோல்மால்கள் தொடர்கின்றன. அந்தந்தத் துறைகளிலை இருக்கிறவை, இதுகளைப் பகிரங்கப்படுத்த முன்வரவேணும்'' என்றான் ஜீவன்.

''இந்த நிலைமை எல்லாம் மாகாண சபை வந்த பிறகாவது மாறும் என்று பார்த்தால், 'சட்டிக்குத் தப்பி அடுப்புக்குள்ளை விழுந்த மாதிரி' ஆகியிருக்கு'' என்று கவலைப்பட்டார் ஏரம்பர்.

''வயித்துப்பிள்ளைத்தாச்சியை இரண்டு பஸ்கள் மாறி, வன்னிப் பள்ளிக்கூடத்துக்கு போக வைச்சவை, பிரபலமானவையையும், செல்வாக்கு இருக்கிறவையையும் 'சுத்திச் சுத்தி சுப்பற்றை கொல்லைக்குள்ளை' என்று நகரப் பாடசாலைகளுக்குள்ளையே ஓடித்திரிய அனுமதிச்சிருக்கினம்'' என்று எரிச்சலுடன் சொன்னாள் செல்லாச்சி.

''இதுகள் எல்லாம் கனகாலத்துக்கு நடக்காது. இளையதலைமுறைக்கு உலகமே சுருங்கி உள்ளங்கைக்குள் வந்திட்டுது; அறிவு பரந்து விரிந்து விட்டது. அதனால் பழைய ஆக்களின் உருட்டும் பிரட்டும் இனிமேல் செல்லுபடியாகாது'' என்று நம்பிக்கையுடன் சொன்னார் வாத்தியார்.

அதனை தலையசைத்து ஆமோதித்த ஏரம்பர், ''கொஞ்ச நாளைக்கு முதல் வங்கியிலை காசெடுக்க வரிசையிலை நின்றனான். காசாளர் இளம் பெண்பிள்ளை. அப்ப மூத்த ஊழியர் ஒருவர், கணக்குப்புத்தகம் ஒன்றை கொடுத்து 'இது அரசாங்க உயர் அதிகாரியுடையது. உடனை வேலையை முடிச்சுத்தாரும்' என்று நீட்டினார். அதுக்கு அந்தப் பிள்ளை 'சோ வட்'(So what) அவ தலைமை அதிகாரி என்றால் நான் தலைமை காசாளர்' என்று பகிடி விட்டுப் போட்டு நிக்கிறவையின்ரை அலுவல்களைப் பார்த்து முடிச்ச பிறகுதான், அந்த அதிகாரியின் கணக்குப் புத்தகத்தைத் தொட்டவ.'' என்று தனது அனுபவத்தைக் கூறி முடித்தார் .

''அலுவலகங்களிலை ஏற்படுகிற இந்த மாதிரியான மாற்றங்கள், அரசியலிலும் ஏற்பட வேணும்'' என்றபடியே எழுந்து நடந்தார் வாத்தியார்.

மற்றவர்களும் புறப்படவே, கச்சான் கடை கட்டினாள் செல்லாச்சி.

# சனி மாற்றம் உங்களுக்கு எப்படி?



**திருக்கணித பஞ்சாங்கப்படி எதிர்வரும் 26.01.2017 அன்று வியாழக்கிழமை இரவு 07.53 மணிக்கு சனி பகவான், விருச்சிக இராசியில் இருந்து தனுசு இராசிக்கு பெயர்ச்சியாகிறார். இனி ஒவ்வோர் இராசி அன்பர்களுக்கும் சனிப்பெயர்ச்சி எப்படி இருக்கும் என்பதையும் அத்துடன் ஒவ்வோர் இராசி அன்பர் களுக்கும் என்னென்ன பரிகாரம் செய்ய வேண்டும் என்பதையும் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.**

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

### சிம்ம இராசி :

மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்

அர்தாஷ்டம சனி விலகி விட்டது. அப்பாடா விட்டது தொல்லை என்று நிமிர்ந்து உட்காருங்கள். இப்பொழுது பஞ்சமஸ்தானமான 5 ஆம் இடத்துக்கு சனிபகவான் வந்துவிட்டார். கேந்திராதிபதி திரிகோணத்தில் அமர்ந்து விட்டான். வாட்டிவதைத்த பிரச்சினைகள் தீர்ந்துவிடும். உங்களுக்கு உதவி செய்ய நல்ல மனம் படைத்தவர்கள் தாமே முன்வந்து உதவி செய்வார்கள். உங்கள் திட்டம் கச்சிதமாக முடியும். குடும்பத்தில் சச்சரவுகள், குழப்பம் இருந்தாலும் தீர்ந்து விடும். பஞ்சை எடுத்தாலே கையில் நூலாக மாறி விடும். கடந்த சனிப்பெயர்ச்சியில் பட்ட கஷ்டங்கள் அடேங்கப்பா கொஞ்சமா நஞ்சமா? இனிமேல் அதுபோல் கஷ்டங்கள் வராது. இனி என்னென்ன செய்ய வேண்டும் என்று கனவு கண்டு நிறைவேற்ற நினைத்தீர்களோ அத்தனையும் அருமையாகச் செய்து முடிப்பீர்கள். பஞ்சம சனி, வேலை, தொழில், திருமண விசேடங்கள் அத்தனையும் தருவதோடு, சிலருக்குக் குழந்தைப் பாக்கியமும் கொடுக்கும்.

பரிகாரம்!

சனிக்கிழமையில் நீல நிறம் கலந்த வஸ்திரத்தை தானம் செய்யுங்கள். வியாழக்கிழமையில் விநாயகருக்கு அருகம்புல் வைத்து வணங்குங்கள். சனி பகவானையும் சனிக்கிழமையில் வணங்கி வாருங்கள்.

### கன்னி இராசி:

உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்

உங்களுக்குச் சனி பகவான் உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் அமர்ந்து அர்த்தாஷ்டம சனியாகிவிட்டான். சிலர் பயமுறுத்துவார்கள் ஆனாலும் பயப்பட வேண்டாம். பஞ்சமாதிபதி 4 ஆம் இடத்தில் அமர்ந்து விட்டதால் கெடுதல் செய்ய மாட்டான். 6 ஆம் இடத்தையும், 10 ஆம் இடத்தையும், உங்கள் ஜென்மத்தையும் சனி பார்வை செய்வதால், ரோக நிவர்த்தி ஆகும். பலநாள்களாக வேலைக்கு அலைந்தவர்கள் புதிய வேலையில் சேர்ந்து விடுவார்கள். தொழில்துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உட்கார நேரம் இல்லை என்று சொல்லும் அளவுக்கு வேலைகள் வந்த வண்ணம் இருக்கும். வழக்கில் இருந்த சொத்து கைக்கு வந்துவிடும்.

பரிகாரம்!

சனிக்கிழமையில் எள் சாதம் காக்கைக்கு வைத்து வாருங்கள். சனிக்கிழமையில் நீல நிறத்திலோ அல்லது கறுப்பு நீலத்திலோ ஆடை அணியுங்கள். சனி பகவானையும் சனிக்கிழமையில் வணங்கி வாருங்கள்.

## தினசரி ராசி பலன் 08.01.2017

| | | |
|---|---|---|
| சுபநேரம் | : காலை : 6.30 – 7.30 | |
| | மாலை : 3.30 – 4.30 | |
| ராகு காலம் | : 4.30 – 6.00 | |
| குளிகன் | : 3.00 – 4.30 | |
| எமகண்டம் | : 12.00 – 1.30 | |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சம நோக்கு நாள்

**மேஷம்:** நன்மை - நெடுநாளைய ஆசைகள் நிறைவேறி நன்மைகள் பலவும் தரும் நன்னாள்.

**ரிஷபம்:** பாசம் - அன்பானவர்களின் ஆதரவு கிடைக்கும் நன்னாள்.

**மிதுனம்:** தாமதம் - எண்ணிய எண்ணங்கள் யாவும் தாமதமாகவே நிறைவேறும் நன்னாள்.

**கடகம் :** புகழ் - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து புகழ் நல்கும் நன்னாள்.

**சிம்மம் :**சாதனை - வேதனைகள் தீர்ந்து சாதனைகள் நிறையும் நன்னாள்.

**கன்னி:** உயர்வு - அனைத்துக் காரியத்திலும் முயற்சியுடன் செயற்பட்டால் உயர்வு தரும் நன்னாள்.

**துலாம்:** நஷ்டம் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் அளவான ஆசைகள் இருப்பது இழப்பின் அளவை குறைக்கும் நன்னாள்.
சந்திராஷ்டமம் : சித்திரை 3,4 ஆம் பாதங்கள்.

**விருச்சிகம்:** அமைதி - மனக் குழப்பங்கள் குறைந்து நிம்மதி எனும் அமைதி காணும் நன்னாள்.

**தனுசு:** நலம் - இன்று மன மற்றும் உடல் ஆரோக்கியத்தில் நலம் காணும் நன்னாள்.

**மகரம்:** வெற்றி - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து வெற்றி நல்கும் நன்னாள்.

**கும்பம்:** கோபம் - அசுர குணம் மிளிரும், அன்பு குறையும், அனைவரிடத்திலும் அமைதியுடன் விலக நலம் நல்கும் நாள்.

**மீனம்:** ஆர்வம் - செய்யும் செயல்களில ஆர்வம் மிகுந்து காணப்படும் நன்னாள்.

# இலங்கையில் பாரதி...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் இலக்கிய உலகில் தாக்கத்தை ஏற் படுத்திய பாரதி சிந்தித்த **கிருத யுகம்** தொடர் பாக எழுதியிருக்கும் மு.தளையசிங்கத்துக்கு கைலாசபதியின் மார்க்ஸியச் சிந்தனைகளில் அபிப்பிராய பேதங்கள் இருந்தன. கைலாச பதியை விமர்சித்தவர்களில் **மு.தளையசிங்கம்** முக்கியமானவர்.

கண்டியிலிருந்து வெளியான **செய்தி** எனும் பத்திரிகையில் இவர் எழுதிய 'ஏழாண்டு இலக் கிய வளர்ச்சி' என்ற தொடரில் பின்வருமாறு பதிவு செய்திருக்கிறார்:

*'பத்திரிகைக் கொம்பனியின் பங்குதாரர் களின் உறவின் காரணமாய் சந்தர்ப்பவசத்தால், தினகரன் ஆசிரியரான கைலாசபதி, வர்த்தகத் தையே பிரதான நோக்கமாகக்கொண்டு இலக்கியத்தைப் பற்றி அக்கறைப்படாது, அதுவரையும் வெறும் புதினத்தாளாக இயங் கிவந்த ஒரு முதலாளி வர்க்கப்பத்திரிகைக் குள் இலக்கியத்தைப் பற்றிய ஓரளவுக்குத் தரமான பொதுவுடைமைக் கருத்துக்களை மட்டும் புகுத்தவில்லை. கூடவே அதே வண்டியில் கா. சிவத்தம்பி, ஏ.ஜே. கனகரத்னா போன்ற இலக்கியம் பற்றிய தரமான கருத்துக் களையுடைய வேறு பலரின் செல்வாக்கை யும் பக்கபலத்தையும் சேர்த்துக்கொண்டு வந்தார்.'*

கைலாசபதியைத் தமது எழுத்துக்களில் விமர்சித்து வந்த மு.தளையசிங்கமும்கூட தினகரனை இலக்கியத்தரமாக வெளியிடுவ தற்கு அவர் மேற்கொண்ட ஆக்கபூர்வமான முயற்சிகளை விதந்து பாராட்டியிருக்கிறார்.

இவர்கள் இருவரதும் சிந்தனைகளைப் பாரதியின் வெளிச்சத்திலிருந்தே இலக்கிய உலகம் அவதானித்திருக்கிறது.

கைலாசபதிக்குப் பின்னர், தினகரன் ஆசிரி யப் பொறுப்பை ஏற்ற **இ. சிவகுருநாதன்** மாத்திரமே இங்கு நீண்டகாலம் பணியாற்றிய மூத்த பத்திரிகையாளராவார்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராக 1981 இல் தெரிவான சிவகுருநாதன், அதன் பின்னர் 1983 - 84 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலும் அந்தப் பத வியை வகித்தவர்.

ஊடகத்துறையிலிருந்தவாறே சட்டமும் பயின்று, கொழும்பு சட்டக்கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளராகவுமிருந்த சிவகுருநா தன், மற்றும் ஒரு பத்திரிகையாளர் எஸ்.திருச் செல்வம் தொடங்கிய கொழும்பு கலை இலக்கிய நண்பர்கள் என்ற அமைப்பிலும், காலப்போக்கில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தி லும் தலைவராக இருந்தவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் அங்கு வெளியான **இளங்கதிர்** என்னும் இதழின் ஆசிரியராகவும் இயங்கியி ருக்கும் இவர், அங்கு **இந்து தர்மம்** என்னும் மற்றும் ஓர் இதழ் வெளிவருவதற்கும் முக்கிய பங்காற்றியவர்.

ஈழத்து இலக்கிய உலகையும் இங்குள்ள படைப்பாளிகளையும் நன்கு தெரிந்துவைத் திருந்த சிவகுருநாதன், தினகரனில் பல சந்தர்ப்பங்களில் பாரதி தொடர்பான ஆசிரியத் தலையங்கங்களும் எழுதியுள்ளார்.

தினகரன் வாரமஞ்சரியும் காலத்துக்குக் காலம் பாரதி ஆய்வுகளை வெளியிட்டும் மறுபிரசுரம் செய்தும் வந்திருக்கிறது. ருஷ்ய எழுத்தாளர் ஏ.ஷெலிஷேவ், கைலாசபதி, செ. கணேசலிங்கன், இளங்கீரன், சி.மௌனகுரு, சொக்கன், க.நவசோதி, மு.கனகராசன், மு. சடாட் ரன், வேல் அமுதன், அராலி வெ.சு. நடராசா, அன்புமணி, க. கந்தசாமி, அந்தனிஜீவா, பொன்னி ஆனந்தன், சகுந்தலா நல்லையா, ஏ. இக்பால், தமிழக எழுத்தாளர் ராஜம் கிருஷ் ணன் ஆகியோரின் பாரதி பற்றிய ஆக்கங்களும் ஸ்ரீதேவகாந்தன், ஷெய்கு இஸ்ஸதீன், மு. துரை சாமி, பாண்டியூரான், வளவை வளவன், சி.ஆறு முகம் முதலான பலரின் கவிதைகளும் பாரதி நூற்றாண்டு காலத்தில் தினகரன் வாரமஞ் சரியை அலங்கரித்திருக்கின்றன.

தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன், காலம் அறிந்து அதற்குப்பொருத்தமாகவும் பல விட யங்களைச் செய்திருப்பவர்.

பாரதி நூற்றாண்டு காலத்தில்தான் பேரா சிரியர் கைலாசபதி கொழும்பு அரசினர் மருத்து வமனையில் 1982 டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி காலமானார்.

அவர் அதற்கு சில தினங்களுக்கு முன்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந் தார். அவர் மறைவதற்கு முதல்நாள் டிசெம்பர் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தினகரன் வாரமஞ்சரியில் கைலாசபதி எழுதியிருந்த 'பாரதியின் புரட்சி' என்ற கட்டுரையைச் சிவகுருநாதன் வெளிவரச் செய்திருந்தார்.

கைலாசபதி மருத்துவமனைக் கட்டிலிலி ருந்து அதனையும் பார்த்துவிட்டுத்தான் நிரந் தரமாகக் கண்களை மூடிக்கொண்டார் என்ற துயரமான தகவலையும் இங்கு பதிவுசெய் கின்றோம்.

(தொடரும்)

# பல் தேசிய கம்பனிகளுக்கு தேசிய வளங்கள்; அரசுக்கு எதிராக அனைவரும் போராடுவோம்!

## ஜே.வி.பி. அழைப்பு



இராமலிங்கம் சந்திரசேகர்
(மத்திய குழு உறுப்பினர் - மக்கள் விடுதலை முன்னணி)

நமது நாட்டில் பெறுமதிமிக்க வளங்கள், அரச நிறுவனங்களை விற்கின்ற கொள்கையே தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரத் தந்திரோபாயமாகக் கொண்டுள்ளது. நமது ஆண்டை ஆட்சியாளர்கள் இதற்கு முன்னரும் நமது நாட்டு வளங்களை விற்பதன் மூலமாக நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற கருத்தை வளர்த்தனர்.

1988 இல் நாட்டு வளங்களை விற்பதை ஆரம்பித்த அப்போதைய அரசாங்கம், அதன் மூலமாக நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமெனக் கூறிய போதும் அதற்கு எதிராகப் பெரும் மக்கள் எதிர்ப்பலை தோற்றம் பெற்றது. அதன் பின்னர் மக்கள் மயமாக்கல் என்னும் பெயரில் விற்பனை ஆரம்பமாவதும், அப்போது முழுப் பக்கப் பத்திரிகை விளம்பரங்களில் அதில் ஒரு பங்கு உங்களுக்குண்டு என விளம்பரம் செய்தனர். ஆனால், மக்கள் மயமாக்கல் மூலமாக நாட்டுக்கோ மக்களுக்கோ கிடைத்த நன்மைகள் ஏதுவும் கிடையா.

தற்போதைய அரசாங்கம் புதியதொரு கருத்தைக் கொண்டு வந்துள்ளது. அவை தனியார் அரச - ஒருங்கிணைப்பு எனும் பெயரில் நாட்டு வளங்களை கம்பனிகளுக்குத் தாரைவார்ப்பதற்குத் திட்டமிட்டுள்ளது. இவ்விதமாக இந்த அரசாங்கமும் ஒரே விதமான ரொபியை விஷம் தடவி பல்வேறு பெயர்களில் மக்கள்முன் கொண்டுவந்துள்ளது.

அரசாங்கத்தின் ஏலப்பட்டியலில் பிரதானமாக முதலிடம் வகிப்பது அம்பாந்தோட்டைத் துறைமுகமாகும். புவி அமைவிடத்தைப் பார்க்கின்றபோது, அம்பாந்தோட்டைத் துறைமுகம் முன்னேற்றக்கூடிய ஒரு துறைமுகமாகும். முதலில் இதை அமைப்பதற்கான நடவடிக்கைகளை சந்திரிகாவின் அரசாங்கமே தீர்மானித்தது, அப்போது கப்பல்களுக்கு எரிபொருள் வழங்கல், நீர், உணவு போன்ற சேவைகளை வழங்கும் துறைமுகமாக மாற்றுவதே அப்போதைய நோக்கமாக இருந்தது.

ஆனால், ராஜபக்ஷ அரசாங்கம் அத்திட்டத்தை மாற்றி பொருள்ககளை ஏற்றி, இறக்கும் துறைமுகமாக மாற்றியது. இப்போது அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விற்பதற்காக இரண்டு காரணங்களை அரசாங்கம் முன்வைக்கிறது.

ஒன்று, துறைமுகத்துக்குக் கப்பல் வருவதில்லை. இரண்டாவதாக, கடன் சுமை. ஏதாவதொரு துறைமுகத்துக்கு கப்பல்கள் வரும்போது, துறைமுகம் யாருக்குச் சொந்தம் என்ற விடயத்தை அவர்கள் கவனத்தில் கொள்வதில்லை. துறைமுகத்தை விற்பதன் மூலம் கப்பல்கள் வராமைக்குத் தீர்வு கிடைக்கப் போவதுமில்லை. ஆனால், துறைமுகத்தை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ், வைத்துக்கொண்டு சேவை வழங்கும் மையமாக முன்னேற்ற முடிவதுடன், அதன் மூலமாகப் பெரும் இலாபத்தையும் ஈட்டலாம்.

### அம்பாந்தோட்டை துறைமுகம் 2115 ஆகஸ்ட் வரை சீனாவிடம்!

அவ்வாறான வாய்ப்பு இருக்கின்ற போதுதான் இதனை விற்கப்போகின்றார்கள். கடனிலிருந்து மீள்வதாகக் கூறி 1200 டொலர் பில்லியனுக்கு சீன கம்பனிக்கு கையளிக்கப்படவுள்ளது. ஆயிரத்து 200 டொலர் பில்லியனில் அரசாங்கம் குருநாகலையிலிருந்து ஹபரணைக்கு 970 டொலர் பில்லியன் செலவில் ரயில் பாதை அமைக்கப்போவதாகக் கூறுகிறது. ரயில் பாதை அமைப்பதன் மூலம் கடன் சுமை தீரப்போவதில்லை. அடுத்து இதிலுள்ள பாதகமான விடயம் என்னவெனில் 99 வருட குத்தகையாகும். 2115 ஆம் ஆண்டு வரையில் அம்பாந்தாட்டை துறைமுகம் சீன கம்பனிக்குச் சொந்தமாகப் போகிறது. 2115 ஆம் ஆண்டு இதனை வாங்கிய சீனரும் இருக்கப் போவதில்லை. கொடுத்த ரணிலும் இல்லை. இதனை எழுதும் நானும் இல்லை. இதனை வாசிக்கின்ற நீங்களும் இல்லை.

அதாவது, கொடுத்தால் கொடுத்தது தான். இதைக் கையளிப்பதன் மூலமாக சீனக் கம்பனிக்கு 80 வீதமும் அரசாங்கத்துக்கு 20 வீதமும், அதாவது 15 வருடங்களுக்கு இதன் இலாபம் அரசாங்கத்துக்கு வழங்கப் போவதில்லை. அதேபோன்று 15 வருடங்களுக்கு வரிவிலக்களிக்கவும் தீர்மானித்துள்ளது. ஆகவே, தற்போதைய ரணில் - மைத்திரி அரசாங்கம் அன்றாட வாழ்க்கையைக் கொண்டுசெல்வதற்காக நாட்டு மக்களுக்குச் சொந்தமான வளங்களை விற்றுத் தீர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்.



### 15 ஆயிரம் ஏக்கர் தாரை வார்ப்பு

அதுமட்டுமல்ல, அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அருகில் 15 ஆயிரம் ஏக்கர் காணியை சீனக் கம்பனிக்குத் தாரைவார்க்கப் போகின்றது. நமது நாட்டில் 17 வர்த்தக வலயங்கள் உள்ளன. கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயம் 192 ஏக்கர், கொக்கலை வர்த்தக வலயம் 195 ஏக்கர் மொத்தமாக 17 வலயங்களை எடுத்துக்கொண்டால் 2000 ஏக்கருக்குக் குறைவு.

அதேவேளை, இந்தியா போன்ற பெரியநாட்டில் மிகப் பெரிய சுதந்திர வர்த்தக வலயமாக ஸ்ரீ-சிட்டி இந்தியாவின் மொத்தப் பரப்பளவு 7000 ஏக்கராகும்.

அப்படி இருக்கும்போது, நமது நாட்டுக்குச் சொந்தமான 15000 ஏக்கர் காணியை சீனக் கம்பனிக்கு தாரை வார்ப்பது ஏன்? இந்தக் காணிகள் எமது மூதாதையர்களின் எலும்புக் கூடுகளால் உரமான பூமியாகும். அதேபோன்று அவர்களின் வியர்வையால் இந்தப் பூமி வளமடைந்துள்ளது.

அப்படியான பூமியை சீனக் கம்பனிக்குத் தாரைவார்ப்பதற்கு இடமளிப்பதா? கொழும்பு நகரைப் போன்று பத்தில் ஒரு பகுதியை இவ்விதமான தனியார் கம்பனிக்கு தாரைவார்க்கப் போவது சரியா? கொக்கல, கட்டுநாயக்க, பியகம ஆகிய பகுதிகளில் பெருந்தொகையான காணிகள் உள்ள போது, இவ்வாறு அம்பாந்தோட்டை காணியைத் தாரைவார்க்கின்றனர்.

அது மட்டுமல்ல கற்பிட்டிப் பிரதேசத்துக்கு அருகில் 14 தீவுகள் உள்ளன.

### 12 தீவுகளையும் தாரை வார்க்கப் போகிறது அரசு

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இவைகளை விற்றுத் தீர்க்க முயன்ற போதிலும், அவர்களால் இரண்டு தீவுகளை மட்டுமே விற்க முடிந்தது. ஆனால், தற்போதைய அரசாங்கம் சுற்றுலாத் துறையை முன்னேற்றுவதாகக் கூறி ஏனைய 12 தீவுகளையும் தாரைவார்க்கப் போகிறது.

பிரதேச செயலகத்துக்குச் சொந்தமாகவுள்ள இந்தக் காணிகளை, இப்போதும் சுற்றுலா சபை கையேற்றுள்ளது. நாட்டுக்குச் சொந்தமான தீவுகளையும் விற்றுத் தீர்க்கும் நிலைக்கு இந்த அரசாங்கம் வீழ்ந்துள்ளது.

அதுமட்டுமல்ல, உலக துறைமுக வரிசையில் 26 ஆவது இடத்தை வகிக்கின்ற கொழும்புத் துறைமுகத்தையும் விற்பதற்கு இந்த அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது. இந்தியாவில் இருக்கும் பெரிய துறைமுகங்களை விட உயர் நிலையில் உள்ள கொழும்புத் துறைமுகம், கிழக்கு இறங்கு துறைமுகத்தை 18 மீற்றர் ஆழமாக்கி நவீனமயப்படுத்தியுள்ளது. இப்போது உலகில் உள்ள பெரிய கப்பல்களை மீள் கப்பலேற்றல் நடவடிக்கைகளை கிழக்கு இறங்குதுறையால் மேற்கொள்ள முடியுமான நிலை இருக்கிறது. இதன் மூலம் அரசாங்கத்துக்கு பெரும் இலாபத்தை ஈட்டவும் முடியும். அதையே இப்போது தனியார் கம்பனிக்குத் தாரை வார்க்கப் போகிறது. அதில் 15 வீதம் அரசாங்கத்துக்கும் 85 வீதம் தனியார் கம்பனிக்கும் சொந்தமாகும் விதத்தில் 35 வருடங்களுக்குக் குத்தகைக்கு வழங்குவதற்காக ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

### புல்மோட்டை கனிய வளத்தை விற்கத்திட்டம்

நமது நாட்டில் முக்கியமான கனிய வளம் புல்மோட்டை கனிய மணலாகும். அந்தக் கனியவளத்தில் 70-80 வீதம் வரையில் முக்கியமான கனிமங்கள் அடங்கியுள்ளன. உலகத்தில் இருக்கும் கனிமங்களில் கூடுதலான அடர்த்தியுள்ள கனிமங்கள் இதில் அடங்கியுள்ளன. இல்மனைட், ரூடைல், மொனசைட் மற்றும் கானட் போன்ற அதிக பெறுமதிமிக்க கனிமங்கள் இதில் அடங்கியுள்ளன.

நாட்டில் உள்ள மிகப்பெறுமதியான கனியவளம் புல்மோட்டை எனப் பாடசாலையில் கற்பிக்கப்படுகின்றது. அவ்வாறு இருக்கும் போது இந்த அரசாங்கம் தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை நியமித்து கனியமணலை விற்றுத் தீர்க்கப் போகிறது. அதேபோன்று உலகத்தில் முக்கியமான கனியமான காரியம் கஹட்டகஸ்ஹேன சுரங்கத்தையும் விற்றுத் தீர்க்கத் திட்டமிட்டுள்ளது.

ஈரத்தன்மை குறைவான மிகவும் சுத்தமான காரியத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய கஹட்டகஸ்ஹேன சுரங்கத்தை அரசாங்கம் ஏலத்தில் விடத் தீர்மானித்துள்ளது. இவ்விதமான துறைமுகங்களை விற்குமானால் - கனிய வளங்களை விற்குமானால் - இது ஓர் அரசாங்கமல்ல. இது சரியாக பகிரங்க ஏல விற்பனைக்கார நிறுவனமாகும். பழைய மேட்டுக்குடி வீடுகளில் ஊதாரிப் பையன் ஒருவன் இருந்தால் என்ன நடக்கும் என்பது உங்களுக்குத் தெரியும்.

வீட்டுக்குச் சொந்தமான தென்னை, காணிகள், தோட்டங்கள், வீட்டிலுள்ள பெறுமதியான மரத்தளபாடங்கள் விற்கப்படும். குடித்து கும்மாளம் அடிப்பதற்காக வீட்டுக்குச் சொந்தமான வளங்களை அழித்துவிடுவான். இந்த அரசாங்கம் எஜமான் வீட்டில் பிறந்த குடிகாரனைப் போன்றதாகும். நமது நாட்டின் பொருளாதார வளங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய மிகப்பெறுமதியான இயற்கை வளங்களை, மனித வளங்களை இருக்கின்ற போது, ஊதாரிப் பையனைப் போல ரணில் - மைத்திரி அரசாங்கம் நடந்துகொள்கிறது.

### வெடிக்கப் போகும் போராட்டங்கள்

அதனால் நமது நாட்டில் பெறுமதியான இயற்கை வளங்களை விற்றுத் தீர்த்து வரும் இந்த அரசாங்கத்துக்கு பொருளாதாரக் கொள்கைகளையும், அழிவுமிக்க ஆட்சிகளையும் தோற்கடிப்பதற்கு போராட முன்வரவேண்டும். போராட முன்வருமாறு கேட்டு மக்களுக்கு அறைகூவல் விடுக்கின்றோம். தற்போது அம்பாந்தோட்டைக் காணிகளை விற்பதற்கு எதிராக மிகப் பெரிய மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. துறைமுகத்தை விற்பதற்கு எதிராகப் போராடுவதற்குச் சகல தொழிற்சங்கங்களும் அணிதிரண்டுள்ளன, அதேபோன்று கஹட்டகஸ்ஹேன காரியச் சுரங்கம், தொடர்பில் புல்மோட்டை ஊழியர்களைச் சந்தித்து அதை விற்பதற்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேபோன்று கற்பிட்டி தீவுகளைத் தாரைவார்ப்புக்கு எதிராக மக்களை அணிதிரட்டும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும் அம்பாந்தோட்டைத் துறைமுக ஊழியர்களின் போராட்டம், தம்மை நிரந்தரமாக்கும்படி கேட்கும் போராட்டத்தை வெகு தீவிரமாக முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது. அதன்மூலம் ஊழியர்களின் உரிமையை நிலைநாட்டும் போராட்டம், அடுத்த ஆண்டில் உக்கிரமடையப் போகின்றது. இவை அனைத்துக்கும் மக்கள் விடுதலை முன்னணியும், அதன் தொழிற்சங்கங்களும் முன்னின்று போராடுகின்றன.

### நீங்கள் குளிர்காயுங்கள்; நாங்கள் சூடேற்றுவோம்

இவர்களுக்காய் விடுக்கும் செய்தி, இந்தக் குளிர் காலத்தில் அதாவது டிசெம்பர் மாதத்தில் நீங்கள், ஹொங் கொங், டுபாய் சென்று குளிர்காய்ந்து வாருங்கள்.

அடுத்த ஜனவரி மாதம் ஆர்ப்பாட்டங்களால் இந்த நாட்டை நாங்கள் சூடேற்றுகின்றோம். இந்த வளங்கள் எமக்கு மட்டும் சொந்தமானவையல்ல. பிறந்த, பிறக்காத மக்களுக்கும் சொந்த மான இந்த வளங்களைப் பாதுகாக்க வேண்டும். அதனால் அரசாங்கத்துக்கு எதிரான சகல மக்கள் சக்திகளும் ஒன்றிணைக்கப்பட்ட பரந்தளவிலான மக்கள் சக்தியை உருவாக்கி பெரும்போராட்டத்தை முன்னெடுக்கப்படவிருக்கின்றது. ★

# வாக்கியமா திருக்கணிதமா சரி?

**கனடாவிலிருந்து கௌசிகர்**

நம்மவர்களில் பெரும்பான்மையானோர் வாக்கிய பஞ்சாங்கத்தையே பின்பற்றுகின்றனர். ஏனையோர் திருக்கணித பஞ்சாங்கத்தைப் பாவிக்கின்றனர். இவர்களில் அநேகமானோர் அவர்கள் பயன்படுத்தும் பஞ்சாங்கமே சரியானது என நம்புகின்றனர். ஒரு சிலர் சரியான பஞ்சாங்கம் எது எனத் தெரிந்து கொண்டும் பிழையானதைப் பின்பற்ற வேண்டும் என்று அடம் பிடிக்கின்றனர்.

கனடாவில் திருக்கணித பஞ்சாங்க வெளியீட்டுக்குப் பொறுப்பானவர் இரகுநாதையர். வாக்கிய பஞ்சாங்கப்படி விரதங்களை அனுஷ்டிக்க வேண்டும் என்று அடம்பிடிக்கும் குழுவின் தலைவராகவும் அவர் உள்ளார்.

வாக்கியமா, திருக்கணிதமா சரியென்று உங்களில் பலருக்கும் வேண்டப்பட்ட பெருந்தகை ஒருவர் தகுந்த ஆதாரத்துடன் நிரூபித்துள்ளார். அதனை மறுத்துப் பிழை என்று எவராலும் நிரூபிக்கமுடியாது. அவர் பிழையென்று நிரூபித்திருக்கும் பஞ்சாங்கக் கணிதரால் கூட அந்த நிரூபிப்பை நிராகரிக்க முடியாது. எந்தப் பஞ்சாங்கக் கணிதராலும் செய்யமுடியாத ஆச்சரியப்படத்தக்க அந்த நிரூபிப்பைத் தொடர் கட்டுரைகளில் பாருங்கள்.

வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்களுக்கு இடையில் பல வேறுபாடுகள் அடுத்த வருடம் வருகின்றன. ஆரம்பத்தை சமஸ்கிருதத்தில் உபாகர்மம் என்று சொல்வார்கள். அதில், உள்ள பிழையை முதலில் பார்ப்போம். 2017 ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள் வெளி வரத் தொடங்கி விட்டன. மெய்கண்டானின் 07-08-2017 இற்குரிய தாள் இணைப்பு ஒன்றில் உள்ளது.

இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என 4 வேதங்கள் உள்ளன. பிராமணர்கள் இதில் ஏதாவதொரு வேதத்தைப் பின்பற்றுவர்களாக இருப்பார்கள். யஜுர் வேதத்தைப் பின்பற்றுபவர்கள் பூணூல் மாற்றும் தினம் யஜுர் வேத உபாகர்மம் என்றும், இருக்கு வேதத்தைப் பின்பற்றுபவர்கள் பூணூல் மாற்றும் தினம் இருக்கு வேத உபாகர்மம் என்றும் சொல்லப்படும். இதனைப் பிராமணர்கள் ஆவணி அவிட்டம் என அழைப்பர்.

இரகுநாதையர்வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றி வெளிவரும் மெய்கண்டான், லீலா, அஷ்டலட்சுமி போன்ற சகல கலண்டர்களிலும் இருக்கு, யஜுர் வேத உபாகர்மம் 07-08-2017 என்று பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சித்திரை, வைகாசி,.... என்பன சூரியனைக்கொண்டுகணிப்பிடப்படும் மாதங்கள். இவை சௌரமான மாதங்கள் எனப்படும். இதே போன்று, திதியை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயம் செய்யும் மாதங்களும் உள்ளன. இவை சாந்திரமான மாதங்கள் என்று சொல்லப்படும்.

இருக்கு வேத உபாகர்மமும் அனுஷ்டிக்கப்பட வேண்டும். 2017இல் சிராவணசுத்த பூரணையும், திருவோணமும் 07-08-2017இல் வருகின்றன. அன்று சரியான தினத்திலேயே இருக்கு, யஜுர் வேத உபாகர்மம் குறிக்கப்பட்டுள்ளது. இதனைப் பிழை என்று எவ்வாறு சொல்ல முடியும் என்று ஆச்சியப்படுவீர்கள்.

யாழ்ப்பாணத்தில் 07-08-2017இல் நள்ளிரவுக்கு முன் சந்திர கிரகணம் தோற்றவுள்ளது. சந்திர கிரக்ணத்தன்று உபாகர்மம் செய்யலாமா? நள்ளிரவுக்கு முன்னர் சந்திர கிரகணம் தோற்றினால் அன்று உபாகர்மம் செய்யக் கூடாது




ஆடி அமாவாசைக்கு அடுத்த நாள் பிரதமையில் ஆரம்பிப்பது சிராவண மாதம் எனச் சாந்திர மானத்தில் சொல்லப் படும். இதில் பூரணையில் யஜுர் வேத உபாகர்மமும், திருவோணத்தில் என்ற விதிமுறை காலப்பிரகாசிகை என்ற பழம்பெரும் சோதிட நூலில் இருப்பதைப் பின்வரும் இணையத் தளத்தில் பாருங்கள்.

https://ia601205.us.archive.org/6/items/Kalaprakasika1982EditionByN.Iyer/Kalaprakasika%201982%20Edition%20by%20N.%20Iyer_text.pdf

சிராவண சுத்தத் திருவோணத்தன்று நள்ளிரவுக்கு முன்னர் சந்திர கிரகணம் தோற்றினால் முதலில் வரும் அத்த நட்சரத்தில் 28-07-2017இல் இருக்கு வேத உபாகர்மம் செய்ய வேண்டும். யாழ்ப்பாணத்துப் பஞ்சாங்க சரித்திரத்தில் இன்று வரை பின்பற்றப்படாத இந்த விதிமுறை தர்மசிந்து என்னும் வேத சாஸ்திர நூலில் உள்ளது. அதன் இணையதள முகவரி இதோ.

http://www.kamakoti.org/kamakoti/dharmasindhu/bookview.php?chapnum=6

சிராவண சுத்தப் பூரணையன்று நள்ளிரவுக்கு முன்னர் சந்திர கிரகணம் தோற்றினால் பாத்திரபத சுத்தப் பூரணையன்று 06-09-2017இல் யஜுர் வேத உபாகர்மம் செய்யவேண்டும். இந்த விதிமுறை 06-08-1990இலே யாழ்ப்பாணத்தில் திருக்கணித பஞ்சாங்கத்தில் பின்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இரகுநாதையரே! நீங்கள் இருக்கு அல்லது யஜுர் வேதத்தைப் பின்பற்றுபவராக இருந்தால், கொக்குவிலில் இருந்து கொண்டு ஒகஸ்ட் 07, 2017 இல் சந்திர கிரகணத்தன்று உபாகர்மம் செய்வீர்களா? இதே கேள்வியையே இரகுநாதையர் பஞ்சாங்கத்தைப் பின்பற்றும் ஏனையவர்களிடமும் முன் வைக்கின்றேன்.

இரகுநாதையரே! வெளிவரப் போகும் 2017 வாக்கிய பஞ்சாங்கத்திலும் 07-08-2017 சந்திர கிரகணத்தன்று இருக்கு, யஜுர் வேத உபாகர்மம் என்று கலண்டர்களில் உள்ளவாறு பிழையாகக் குறிப்பிடப் போகிறீர்களா? அல்லது கலண்டர்களில் உள்ள இருக்கு, யஜுர் வேத உபாகர்மப் பிழைகளைத் திருக்கணிதப் பஞ்சாங்கத்தைக் கொப்பியடித்துத் திருத்தி, வாக்கியம் பிழை என்றும் திருக்கணிதமே சரி என்றும் நிரூபிக்கப் போகிறீர்களா? இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தினர் கிரகண விவரங்களைக் கணிக்கின்றனரா அல்லது கொப்பியடிக்கின்றனரா என்ற விவரம் அடுத்த கட்டுரையில் வெளிவரும்.



ஈராக் தலைநகர் பாக்தாத்தில் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற சக்திவாய்ந்த கார்க்குண்டுத் தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாக்தாத்தின் வடமேற்கு பகுதியில் பிரபலமான வணிக சந்தை ஒன்றுக்கு அருகில் வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட கார் ஒன்றின் மூலம் இந்த குண்டுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு எந்தவொரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும் ஐ.எஸ். தீவிரவாதிகளே தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## ஜனவரி 13 இல் புத்தாண்டு

பிரித்தானியா முழுவதும் புத்தாண்டு முதலாம் திகதி கொண்டாட்டப்படுகிறது என நீங்கள் நினைத்தால் அது தவறு.

பிரித்தானியாவில் தொலை தூரத்தில் இருக்கும் Foula (பவுலா) தீவில் இந்த பண்டிகைகளை வேறு நாள்களில் கொண்டாடுகிறார்கள்.

பழமையான கிரிகோரியன் காலண்டரில் உள்ளது படி இங்கு வாழும் மக்கள் 1900 ஆம் ஆண்டுகளிலிருந்து ஜனவரி 6 ஆம் திகதி கிறிஸ்துமஸ் பண்டிகையையும், ஜனவரி 13 ஆம் திகதி புத்தாண்டையும் கொண்டாடுகிறார்கள்.

பாட்டு பாடியும், ஒருவருக்கு ஒருவர் பரிசு பொருள்கள் கொடுத்தும் இந்த நாள்களை அவர்கள் மேலும் சிறப்புக்குள்ளாக்குகிறார்கள்.

காலகாலமாக நாங்கள் இப்படித் தான் செய்து கொண்டிருக்கிறோம். இங்கு வசிக்கும் எல்லோரும் புத்தாண்டு மற்றும் கிறிஸ்துமஸ் அன்று ஒரே இடத்தில் கூடி பண்டிகையை கோலாகலமாக கொண்டாடுவோம். பிற்காலத்திலும் இந்த வழக்கம் தான் தொடரும் என்று அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

## அரசியலில் குதிக்கவுள்ளார் பேஸ்புக் இணை ஸ்தாபகர்!




பேஸ்புக் சமூக வலைத் தளத்தின் இணை ஸ்தாபகரும் தலைவருமான Mark Zuckerberg 2020ஆம் ஆண்டில் அரசியலில் குதிப்பார் என பல்வேறு வதந்திகள் பரவி வருகின்றன.

2017 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் உள்ள 30 மாநிலங்களுக்குப் பயணம் செய்து மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள எதிர்பார்த்துள்ளதாக Mark Zuckerberg தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்துள்ள ஒருவரே இவ்வாறு மக்களின் கருத்துக்களை அறிய எதிர்பார்ப்பார் என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையிலேயே பேஸ்புக் சமூக வலைத்தளத்தின் இணை ஸ்தாபகரான இவர் அரசியலில் பிரவேசிக்கக்கூடும் என கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தான் அரசியலில் ஈடுபடுவது எவ்வாறு என்பது குறித்து தனது சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடி உள்ளமை மேலும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

1984 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி நியூயோர்க்கில் பிறந்த 32 வயதான Mark Zuckerberg, பேஸ்புக் சமூக வலைத்தளத்தின் இணை ஸ்தாபகர் என்பதுடன் அந்த நிறுவனத்தின் தலைவராகவும் முதன்மை செயல் அதிகாரியாகவும் இருந்து வருகிறார்.

பேஸ்புக் சமூக வலைத்தள நிறுவனத்தின் மொத்த மதிப்பு 51.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பா.ஜ.கவின் செயற்குழுக் கூட்டத்தில் பணமதிப்பு நீக்கம்
# 5 சட்டபேரவைகளின் தேர்தல் குறித்து முக்கிய ஆலோசனை!

டில்லி, ஜன.08

பா.ஜ.கவின் செயற்குழுக் கூட்டத்தில் பணமதிப்பு நீக்க நடவடிக்கை மற்றும் 5 மாநில சட்டப் பேரவைத் தேர்தல் குறித்து முக்கிய ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளன.

பா.ஜ.க. தேசிய செயற்குழு கூட்டம் டெல்லியில் நேற்று முன்தினம் காலை ஆரம்பமாகியது. இதனை பிரதமர் நரேந்திர மோடியும் கட்சியின் தேசியத் தலைவர் அமித் ஷாவும் ஆரம்பித்து வைத்தன.

அத்வானி உள்ளிட்ட மூத்த தலைவர்கள், மாநில முதல்வர்கள், மத்திய அமைச்சர்கள் மற்றும் 350 இற்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் செயற்குழுவில் பங்கேற்றுள்ளனர்.

இந்த கூட்டத்தில் உத்தரப் பிரதேசம், பஞ்சாப் உள்ளிட்ட 5 மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து முக்கிய வியூகங்கள் வகுக்கப் பட்டுள்ளன.

முதல்நாள் கூட்டத்தில் கட்சியின் தேசிய தலைவர் அமித்ஷா உரையாற்றியிருந்தார்.

அவர் அந்த உரையில் தெரிவித்தவை வருமாறு:-

கறுப்புப் பணத்தை ஒழிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டிவந்தன. தற்போது கறுப்புப் பணத்தை ஒழிக்க பழைய 500, ஆயிரம் ரூபா தாள்கள் செல்லா என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.




ஆனால், ஏன் இந்த நடவடிக்கை எடுத்தீர்கள் என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்புகின்றன.

மத்திய அரசின் பணமதிப்பு நீக்க நடவடிக்கை பிரதமர் நரேந்திர மோடியின் துணிச்சலான நடவடிக்கை. இவற்றுக்கு மக்கள் ஆதரவு அளித்துள்ளனர். எனவே உத்தரப் பிரதேசம், பஞ்சாப், உத்தராகண்ட், கோவா, மணிப்பூர் மாநிலங்களின் சட்டப் பேரவைத் தேர்தல்களில் பா.ஜ.க. வெற்றி பெறுவது நிச்சயம்.

பணமதிப்பு நீக்க நடவடிக்கை தொடர்பாக அண்மையில் எடுக்கப் பட்ட கருத்துக் கணிப்புகளில் பெரும்பான்மை மக்கள் மத்திய அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனால் எதிர்க்கட்சிகள் கலக்கம் அடைந்துள்ளன.

இந்திய இராணுவ வரலாற்றில் முதல்முறையாகக் கடந்த செப்ரெம்பரில் பாகிஸ்தான் எல்லைக்குள் புகுந்து சர்ஜிக்கல் ஸ்டிரைக் தாக்குதல் மூலம் தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன. தீவிரவாதிகளை பாகிஸ்தான் தொடர்ந்து ஊக்குவித்து வந்தால் பாகிஸ்தானுக்கு எதிராகப் புதிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# பணமதிப்பு நீக்கத்துக்குப் பின்னர் 81 லட்சம் பேர் வரை வேலையிழப்பு!



## மம்தா சாடுகிறார்

புதுடில்லி, ஜன.08

பிரதமர் நரேந்திர மோடியின் பணமதிப்பு நீக்க நடவடிக்கைக்குப் பின்னர் மேற்கு வங்கத்தில் சுமார் 81.50 லட்சம் பேர் வேலையிழந்துள்ளனர் என்று அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நிர்வாகக் குழு சந்திப்புக்குப் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மம்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பணமதிப்பு நீக்கத்தால் மாநிலத்துக்கு 5 ஆயிரத்து 500 கோடி வருவாய் இழப்பு சுமார் 1.7 கோடி மக்கள் ஏற்பட்டுள்ளது. இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்கு வங்கத்தில் 81.50 லட்சம் பேர் வேலையிழந்து பரிதவித்து வருகின்றனர்.

மேற்கு வங்க மாநில அரசு மேற்கொண்ட ஆய்வுகளின்படி பெற்ற தரவுகளின் அடிப்படையில் இதனை நான் தெரிவிக்கிறேன். தேயிலை, சணல், பீடி மற்றும் நகைத் தொழில்களில் அதிகமாக வேலையிழப்பு ஏற்பட்டுள்ளது.

வேளாண் துறையும் மோசமான பாதிப்புக்குள்ளானது. பணத் தட்டுப்பாட்டால் விவசாயிகளால் பயிர்செய்ய முடியவில்லை. இதனால் விலை உயர்வு ஏற்படும். மக்களிடம் பணமேயில்லாத போது ரொக்கமற்ற பொருளாதாரத்தை அறிமுகம் செய்ய மத்திய அரசு முயற்சி செய்கின்றது.

எனவே, குறைந்தபட்சப் பொதுத் திட்டத்தின் கீழ் அனைத்துக் கட்சிகளும் தங்களுக்கிடையே உள்ள வித்தியாசங்களை மறந்து அடுத்த பொதுத்தேர்தல்கள் வரை தேசிய அரசை உருவாக்க முன்வரவேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

நாட்டின் நலனுக்காக இதனைக் கூறுகிறேன்.

நாட்டை இந்த நெருக்கடியிலிருந்துக் காப்பாற்றுமாறு நான் குடியரசுத் தலைவரிடத்திலும் முறையிடுவேன் செய்கிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் வெற்றிக்காக உழையுங்கள்; விவசாயிகளுக்கு விரைந்து உதவுங்கள்

## ஆட்சித் தரப்பினருக்கு சசிகலா அறிவுரை



திண்டுக்கல், ஜன.08

உள்ளூராட்சித் தேர்தலில் அனைத்துப் பகுதிகளிலும் அ.தி.மு.க. வெற்றிக்காக உழைக்க வேண்டும் என்றும், பருவமழை பொய்த்ததால் வேதனையில் இருக்கும் விவசாயிகளிடம் அரசின் திட்டங்களை விரைவாக கொண்டு சென்று சேர்க்க உதவ வேண்டும் என்றும் அ.தி.மு.க. நிர்வாகிகளுக்குப் பொதுச் செயலாளர் சசிகலா அறிவுறுத்தியுள்ளார்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு, அ.தி.மு.க. பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்ற சசிகலா, கடந்த 4 ஆம் திகதி முதல், மாவட்ட நிர்வாகிகளைச் சந்தித்து வருகிறார்.

திண்டுக்கல், தேனி, விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர்கள், எம்.பி., எம்.எல்.ஏக்கள் உள்ளிட்ட நிர்வாகிகளை அவர் நேற்று முன்தினம் காலை சந்தித்துள்ளார்.

ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. அலுவலகத்துக்குச் சென்ற அவரை, முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் உள்ளிட்டோர் வரவேற்றுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது, உள்ளூராட்சித் தேர்தலில் அனைத்து பகுதிகளிலும் அ.தி.மு.க. வெற்றிக்காக உழைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

மேலும்,பருவமழை பொய்த்ததால் விவசாயிகள் மிகுந்த வேதனை அடைந்துள்ளனர். அவர்களிடம் அரசின் திட்டங்களை விரைவாகக் கொண்டு சென்று சேர்க்க உதவ வேண்டும் என்றும் நிர்வாகிகளிடம் சசிகலா தெரிவித்துள்ளார்.

# பயிர்கள் கருகுவதால் தொடரும் சோகம் : பெண்கள் உட்பட 144 விவசாயிகள் உயிரிழப்பு!

தர்மபுரி, ஜன.08

தமிழகத்தில், பருவமழை பெய்யாத காரணத்தால் அணை, ஏரி, குளங்கள் வறண்டுள்ளன.

இதன்காரணமாக, டெல்டா பகுதி மற்றும் திருவள்ளூர், திருவண்ணாமலை, ஈரோடு, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் சம்பா, எள், மக்காச்சோளம், மஞ்சள் போன்ற பயிர்கள் கருகியுள்ளன.

இந்த வேதனையைத் தாங்காமல் மாரடைப்பு ஏற்பட்டும், தற்கொலை செய்தும் 122 விவசாயிகள் உயிரை இழந்திருந்தனர்.









இந்த எண்ணிக்கை தற்போது 144 ஆக மேலும் உயர்ந்துள்ளது. இந்நிலையில் புதுக்கோட்டை மாவட்டம் நமன சமுத்திரம் அருகே உள்ள தேக்காட்டூரைச் சேர்ந்தவர் செல்லம்மாள் (வயது70) என்பவரும் உயிரிழந்துள்ளார்.

இவருக்குச் சொந்தமான 5 ஏக்கரில் நெல்லைக் கிணற்று தண்ணீரைக் கொண்டு சாகுபடி செய்துள்ளார். போதிய நீர் இல்லாததால் பயிர் கருகத் தொடங்கியது. இது பற்றி, நேற்று முன்தினம் காலை குடும்பத்தினரிடம் அவர் கவலையுடன் பேசிக்கொண்டிருக்கும்போது மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மணமேல்குடி கிராமத்தைச் சேர்ந்தவர் காளியம்மாள் (வயது 65) என்பவரும் இதே காரணத்தால் உயிரிழந்துள்ளார்.

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்: ஆஸ்திரேலியா ஹட்ரிக் வெற்றி!



சிட்னி, ஜன.08

ஆஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகள் மோதிய 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 220 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியுள்ளது.

ஆஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகள் மோதிய 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் இடம்பெற்றது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட் இழப்புக்கு 538 ஓட்டங்களைக் குவித்து 'டிக்ளேர்' செய்தது. பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 315 ஓட்டங்களை எடுத்தது. 223 ஓட்டங்கள் முன்னிலையில் ஆடிய ஆஸ்திரேலியா 2 ஆவது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 241 ஓட்டங்களைக் குவித்து 'டிக்ளேர்' செய்தது. இதனால் பாகிஸ்தானுக்கு 465 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

2 ஆவது இன்னிங்சை ஆடிய பாகிஸ்தான் நேற்று முன்தினம் 4 ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 1 விக்கெட் இழப்புக்கு 55 ஓட்டங்களை எடுத்து இருந்தது.

நேற்றைய 5 ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டத்தில். தொடர்ந்து விளையாடிய பாகிஸ்தான் 80.2 ஓவரில் 244 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதனால், ஆஸ்திரேலியா 220 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றுள்ளது. சர்பிராஸ் அகமது அதிக பட்சமாக 72 ஓட்டங்களை (ஆட்டம் இழக்காமல்) எடுத்தார். ஹாசல் வுட், ஸ்டீவ் ஒகிபி ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், நாதன் லயன் 2 விக்கெட்டுகளும் எடுத்தனர்.

ஆஸ்திரேலியா பெற்ற 'ஹட்ரிக்' வெற்றி இதுவாகும். அந்த அணி முதல் டெஸ்டில் (பிரிஸ்பேன்), 39 ஓட்டங்களாலும், 2 ஆவது டெஸ்டில் (மெல்போர்ன்) இன்னிங்ஸ் மற்றும் 18 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்று இருந்தது. ஆஸ்திரேலியா 3-0 என்ற கணக்கில் தொடரை வென்று பாகிஸ்தானை வெள்ளையடித்துள்ளது. டேவிட் வோர்ணர் ஆட்ட நாயகன் விருதையும், ஸ்டீவ் சுமித் தொடர் நாயகன் விருதையும் பெற்றனர்.

அடுத்து இரு அணிகளும் மோதும் 5 ஒரு நாள் போட்டி தொடர் இடம்பெறவுள்ளது. முதல் ஆட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி பிரிஸ்பேனில் நடைபெறவுள்ளது.

# கோஹ்லி டோனிக்கு சளைத்தவர் அல்லர்!

## ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவிப்பு



சென்னை, ஜன.08

அணித்தலைவர் பொறுப்பை ஏற்றுள்ள கோஹ்லி, டோனிக்கு எந்த வகையிலும் சளைத்தவர் அல்லர் என்று இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

டோனி மிகச்சிறந்த அணித்தலைவர் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக விராட் கோஹ்லியின் திறமையை நாம் குறைத்து மதிப்பிட முடியுமா? டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியான வெற்றிகளை குவித்ததன் மூலம் தான் ஒரு சிறந்த அணித் தலைவர் என்பதை கோஹ்லி நிரூபித்துள்ளார். எனவே கோஹ்லி சளைத்தவர் இல்லை. இப்படித்தான், கங்குலி அணித் தலைவர் பதவியிலிருந்து விலகியபோது, இனி இந்திய அணி என்னவாகும் என்ற கேள்வி எழுந்தது. ஆனால், ராவிட், கும்ப்ளே ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டனர். அவர்களைத் தொடர்ந்து டோனியின் தலைமையின் கீழ் இந்திய அணி வெற்றிகளை வசமாக்கியது. அதுபோலவே கோஹ்லியின் தலைமையிலும் இந்திய அணி சிறப்பாகச் செயற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# யாழ். கழக கிரிக்கெட் அணி ஒழுங்குத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.08

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு 3 சுற்றுப் போட்டிக்கான அணி ஒழுங்குத் தெரிவு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, 17/10 இலக்கத்தில் உள்ள சங்கத் தலைவரின் வீட்டில் இடம்பெறும் என்று சங்கம் அறிவித்துள்ளது.

சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் பிரதிநிதிகளை இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# யுவராஜ் சிங்குக்கு திருமணப் பரிசு!

புதுடில்லி, ஜன.08

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் இருபதுக்கு 20 தொடருக்கான இந்திய அணியில், யாருமே எதிர் பார்க்காத வகையில் யுவ ராஜ்சிங் இடம்பெற்றுள்ளார்.

35 வயதான யுவராஜ்சிங் 3 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஒரு நாள் போட்டி அணிக்கு தேர்வாகி உள்ளார். இவர் கடைசியாக 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் விளையாடியிருந்தார்.

இதேபோல் இருபதுக்கு 20 போட்டியில் விளையாடி 10 மாதங்களுக்கு மேல்



ஆகிறது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி மொகாலி யில் இடம்பெற்ற இருபதுக்கு 20 போட்டியில் விளையாடியிருந்தார்.

யுவராஜ்சிங்கை இந்திய அணிக்கு மீண்டும் தேர்வு செய்தமை மூலம் இந்திய கிரிக்கெட் சபை அவருக்கு திருமணப் பரிசு கொடுத்துள்ளது என்று முன்னாள் அணித் தலைவரும், கிரிக்கெட் வர்ணனையாளருமான கவாஸ்கர் கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய அணியில் மீண்டும் தேர்வு செய்யப்பட்டதற்கு யுவராஜ்சிங் தகுதியானவரே. ஒவ்வொரு முறையும் அவர் தகுதியின் அடிப்படையிலேயே அணிக்குத் திரும்புகிறார். தேர்வு மூலம் கிரிக்கெட் சபை அவருக்குச் சற்று தாமதமாக திருமணப் பரிசை அளித்துள்ளது. 21 வயது இளைஞர் போல் அவர் இருக்கிறார். களத்தடுப்பில் யுவராஜ்சிங் இன்றுவரை அபாரமாகவே செயற்படுகிறார்- என்றார்.

# இந்தியாவுக்காக இலங்கையை கைவிடுகிறது தென்னாபிரிக்கா!



கொழும்பு, ஜன.08

இந்திய அணியுடன் விளையாட வேண்டும் என்பதற்காக இலங்கை அணியுடனான தொடரை ரத்து செய்ய தென்னாபிரிக்க அணி முடிவு செய்துள்ளது.

தற்போது இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. மீண்டும் இலங்கை அணி தென்னாபிரிக்காவில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இந்நிலையில், தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை இந்திய அணிக்கு அழைப்பு விடுத்துள்ளது.

4 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் 3 இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட விருப்பம் தெரிவித்துள்ளது.

இதன்பின்னர் பங்களாதேஷ், ஆஸ்திரேலியா தொடர்கள் இருப்பதால் இலங்கை அணியுடன் விளையாட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இலங்கை கிரிக்கெட் சபைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தென்னாப்பிரிக்கா கிரிக்கெட் சங்கத்தின் தலைமை நிர்வாகி ஹாரூண் லார்கட் கூறியுள்ளார்.

இருப்பினும் இந்திய கிரிக்கெட் சபை தென்னாபிரிக்காவின் விருப்பத்திற்கு இன்னும் சம்மதம் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# முல்லை. மாவட்டத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு

## கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே.ஆயர்குலன்

முல்லைத்தீவு, ஜன.08

முல்லைத்தீவு மாவட்டத்தை வறட்சியினால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டமாக பிரகடனப்படுத்தி, வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே.ஆயர்குலன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் குறித்த மீளாய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தில்நடைபெற்றிருந்தது. இங்கு உரையாற்றுகையிலேயே ஆணையாளர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

முல்லைத்தீவு மாவட்டத்தில் எமது திணைக்களத்தின் கீழ் உள்ள 40 வரையான குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு சில குளங்கள் தவிர பெரும்பாலான குளங்களில் நீர்மட்டம் குறைவாகவே காணப்படுகின்றது.

இதேபோல் காலபோக நெற்செய்கையில் மானாவாரியாக செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கையில் 50 வீதமானவை முழுமையாக அழிவடைந்திருக்கின்றது. இதனால் விவசாயிகள் பெரும் இழப்பைச் சந்தித்திருக்கின்றார்கள்.

இந்நிலையில் அழிவால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படவேண்டியது கட்டாயமாகும். குறிப்பாக முத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் நெற்செய்கை, மற்றும் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு அழிவுகளுக்கான நிவாரணம் வழங்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல் ஏனைய பகுதிகளிலும் உள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். – என்றார். (ம-81)

# சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்க 8 எம்.பிக்களுக்குக் காலக்கெடு!

சொத்துக்கள் தொடர்பான விவரங்களை உடனடியாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கையளிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய 8 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளார்.

சொத்து விவரங்கள் தொடர்பான அறிக்கையைக்கையளிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மாத காலம் அவகாசம் வழங்கப்பட்டது.

எனினும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 8 பேர் இதுவரை தமது சொத்து விவரங்கள் பற்றிய அறிக்கையை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம்கையளிக்கவில்லை. அதனால் சொத்து விவரங்களைக் கையளிக்குமாறு இறுதித்தடவையாக அவர்களுக்குஅறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் தமது சொத்து விவரங்களைச் சபாநாயகரிடம் கையளித்திருந்தால், அது பற்றி உடனடியாகத் தமக்கு அறியத் தருமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

இந்த இறுதி அறிவிப்புக்குப் பின்னரும் சொத்து விவரங்களைவழங்காதநாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படும் எனவும் தேர்தல்கள்ஆணைக்குழுதீர்மா

# விடுதலை அடையும் வரை எமது போராட்டம் ஓயாது

## ஜேர்மனி தமிழர் ஒருங்கிணைப்புக் குழு தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் கூடவுள்ள நிலையில் மாபெரும் மக்கள் பேரணி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஜேர்மனி தமிழர் ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஜேர்மனி தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மறுக்கப்பட்டுவரும் நீதியை தாமதமின்றி வழங்குமாறு 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி புலம்பெயர் வாழ் ஈழத் தமிழர்கள் பல்லாயிரம் பேர் ஜெனிவாவில் ஒன்று கூடிய நிகழ்வுகள் இன்றும் முடியவில்லை. விடுதலை அடையும்வரை எமது போராட்டம் ஓயாது என்பதையே அவை பறைசாற்றின.

எதிர்வரும் மார்ச் மாதம் கூடவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கூட்டத்தொடரை முன்னிட்டு 06.03.2017 அன்று நடைபெறும் மாபெரும் மக்கள் பேரணி என்றும் இல்லாதவாறு இந்த முறை முக்கியம் பெறுகின்றது.

இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் சம்பிரதாய வருகைகளும் அள்ளிவீசும் வாக்குறுதிகளும் தமது வாழ்வில் எதுவித மாறுதல்களையும் ஏற்படுத்திவிடவில்லை. தமிழர்களுக்கான நீதி சர்வதேச சமூகத்தால் பிராந்திய நலன்களுக்குள் பலியிடப்படுகிறது. இதை உணர்ந்து கொண்டதனாலேயே எமது தாயக மக்கள் ஏழாண்டு மௌனம் கலைத்து 'எழுக தமிழராய்' பேரெழுச்சி கொண்டுள்ளார்கள்.

தமிழர்கள் மீதான இனப்படுகொலைக் குற்றத்தில் இருந்து தப்பிக்கும் ஒரே காரணத்துக்காக சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புகளை மறுபேச்சின்றி இலங்கை அரசு நிறைவேற்றிவருகிறது.

இந்த நல்லிணக்கப் பொறிக்குள் தெரிந்தே விழுந்துகிடக்கும் அனைத்துலக நாடுகளின் சுயநலப்போக்கால் ஏற்பட்ட விரக்தி ஒரு பக்கமும் தாயக அரசியல் தலைமைகளின் அடிபணிவு அரசியல் போன்ற முட்டுக்கட்டைகள் மறுபக்கமுமாக சூழ்ந்து கொண்டுள்ளன. இந்த வேளையில் ஜெனிவா பேரணி மற்றும் கிழக்கில் நடைபெறும் 'எழுக தமிழ்' நிகழ்வு வரலாற்று முக்கியத்தை பெறுகின்றன.

'இலட்சியத்தில் ஒன்றுபட்டு எழுச்சி கொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது' என்ற தேசியத் தலைவர் பிரபாகரனின் சிந்தனைத் தடத்தில் களமும் புலமும் ஒன்றிணைந்து எமது தேசம் விடுதலை பெற்று எமது மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் வரை மாவீரர்களை மனதில் நிறுத்தி உறுதியோடு போராடுவோமாக.- என்றுள்ளது. (ஐ)

# பகிரங்க சேவை ஓய்வூதியர் கூட்டம்

சங்கானை, ஜன.08

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் ந.சிவரஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி.மேற்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி. கி.செந்தூரன் கலந்துகொள்வார். (ம-21)

## அரசுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும இவ்வாறு கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி போன்றவற்றுக்கு ஆட்சி செய்வதற்கு ஒரு நாடு இருக்க வேண்டும். முஸ்லிம் காங்கிரஸ் அரசியலில் ஈடுபடுவதற்கு ஒரு நாடு இருக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியலில் ஈடுபடுவதற்கு வடக்கு இருக்க வேண்டும். இதனாலேயே நாங்கள் போராடி வருகின்றோம்.

அம்பாந்தோட்டைக்கு வந்து கண்ணீர்ப் புகைக்குண்டு, கல், தண்ணீர்த்தாரை தாக்குதல்களை எதிர்கொண்டு எமது நேரத்தை நாம் செலவிடுவது எமக்குக் கிடைக்கும் விருப்பு வாக்குகளுக்காக அல்ல.

இது நாட்டின் எதிர்காலம் தொடர்பான பிரச்சினை. இது நாட்டின் தேசியக் கொடி தொடர்பான பிரச்சினை. இதனால் சுத்தமான அம்பாந்தோட்டை பூமியை அசுத்தப்படுத்திய இந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக ஒரு புதிய சக்தியாக ஒன்றிணையுமாறு சகலருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் - எனவும் டலஸ் அழகப்பெரும ஊடகவியலாளர் மாநாட்டில் கூறினார்.

## புதிய அரசமைப்பு தொடர்பான

# மக்கள் கருத்தறியும் அறிக்கையில் போதிய விளக்கம் இல்லையாம்

புதிய அரசமைப்பு தொடர்பான மக்கள் கருத்தறியும் அறிக்கையில் போதிய விளக்கம் இல்லை என்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் கருத்துக்கள் போன்று வரையறுக்கப்பட்ட குழுக்களின் கருத்துக்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன என்றும் அவர் கூறினார்.

புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் போது இலங்கையின் அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மக்களின் கருத்துக்களை அறியும் முறைமையொன்றை கடைப்பிடிக்க முடியுமா எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

மக்கள் கருத்தறிவதற்கான குழு நியமிக்கப்பட்டு நாடு முழுவதும் கருத்தறியும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. ஆனால், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்று வரையறுக்கப்பட்ட குழுக்களின் கருத்துகள் மட்டுமே அந்த அறிக்கையில் உள்ளடங்குவதாக அந்த அறிக்கை வாசிக்கும்போது எனக்குத் தோன்றியது.

எனவே, மக்களிடம் மிகவும் நெருங்கி கருத்துக்களை உள்வாங்கக்கூடிய முறைமையொன்றே முக்கியமானது. - எனத் தெரிவித்தார். (ம)

## அம்பாந்தோட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படவிருந்த நிலையில், நேற்று முன்தினம் முதல் 14 நாள்களுக்கு அம்பாந்தோட்டையின் சில பிரதேசங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

நீதிமன்றத்தின் தடை உத்தரவையும் மீறி நேற்று நடைபெற்ற முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கான ஆரம்ப நிகழ்வுகளைக் குழப்பும் வகையில் பெரிய அளவிலான ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் 52 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 23 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டம் தொடர்பாக மேலும் பலரைக் கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## அம்பாந்தோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாந்தோட்டைக்கு விஜயம் செய்தபோது அம்பாந்தோட்டையில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதோடு பிரதான வீதிகளில் ரயர்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுப் போக்குவரத்துக்கும் தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட அதிரடிப் படையினரும் கலகம் அடக்கும் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது கண்ணீர்ப் புகைத் தாக்குதல் மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் என்பன நடத்தப்பட்டன. அச்சமயம் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டோர் கல்வீச்சும் நடத்தினர். குண்டர் குழு ஒன்றும் ஆர்ப்பாட்டக் காரர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்பட்டது. இச்சம்பவங்களில் 3 பொலிஸார் உட்பட 23 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் அனேகமானோர் கல்வீச்சுசில் காயமடைந்தவர்கள் என அம்பாந்தோட்டை வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சுமித் மனதுங்க கூறினார்.

இந்தப் போராட்டக் களேபரங்களுக்கு மத்தியிலும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கான ஆரம்ப நிகழ்வுகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றன.

# தேசிய தைப்பொங்கல் விழா நாளை தலைமன்னாரில்!

தேசிய இளைஞர் தைப்பொங்கல் விழா நாளை திங்கட்கிழமை தலைமன்னாரிலுள்ள பியர் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலில் செயற்படுகின்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் சட்டதரணி டபிள்யு. ஜீ.எஸ்.எரந்திக தலைமையில் இந்த விழா இடம்பெறும்.

இந்த விழாவில் தென்பகுதி, வடபகுதியைச்சேர்ந்த இரண்டாயிரம் இளைஞர், யுவதிகளைக் கலந்துகொள்ளச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக தலைமன்னார் வரை இன்று விசேட ரயில் சேவைஒன்றும்இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய பொங்கல் விழா கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-81-112)

## கண்ணீர்ப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் சீனாவின் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கூட்டு எதிர்க் கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் நாமல் ராஜபக்ஷவும் கலந்துகொண்டார். (ம)

## யாழ். இந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். இந்துக் கல்லூரியில் கணிதப் பிரிவில் 18 மாணவர்களும், உயிரியல் பிரிவில் 7 மாணவர்களும் '3ஏ' சித்தியைப் பெற்றுள்ளனர்.

வேம்படி மகளிர் கல்லூரியில் உயிரியல் பிரிவில் 13 மாணவிகளும், கணிதப் பிரிவில் 2 மாணவிகளும், வர்த்தகப் பிரிவில் 10 மாணவிகளும் '3ஏ' சித்தியைப் பெற்றுள்ளனர்.

# யாழ்ப்பாணம் வரலாற்றில் நீங்கள் எப்போதும் கண்டிராத நிகழ்வு

## உங்கள் நகரில் கணக்கிட முடியாத இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில் தொகையான ஆபரணங்கள்

யாழ்ப்பாண யுவதிகள் தங்க முலாம் பூசப்பட்ட மற்றும் ரேடியம் பூசப்பட்ட அமெரிக்கன் வைர நகைகளைக் கொள்வனவு செய்யலாம்.

உரிய ஏற்றுமதி விலையான ரூ. 1500/- 3000/- வரையிலான நகைகளுக்கு

**ரூபா. 100/- 200/- 300/- மட்டுமே**

**2017 ஜனவரி 09,10,11 (திங்கள், செவ்வாய், புதன்) திகதிகளில்**
**நேரம்: காலை 9.00 மணி முதல் இரவு 7.00 மணிவரை**
**(பகல் உணவு இடைவேளை கிடையாது)**

**ரூ.100/- 200/- 300/-** இற்கு விற்பனை செய்யும் **ரூ.3000/-**

ஏற்றுமதி பெறுமதி கொண்ட 10 இலட்சம் நகைகளை இன்றே கொள்வனவு செய்யுங்கள்

**இவ் விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.**

- ★ஒஸ்டேலியன் டயமன் மோதிரம் ரூ.100/- only
- ★சிபரா தங்க முலாமிடப்பட்ட கம்மல் ரூ.100/- only
- ★அமெரிக்கன் டைமன் கல் பதித்த கம்மல் ரூ.100/- only
- ★மேல் நாட்டு மாதிரியிலான தோடுகள் ரூ.100/- only
- ★அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் ரூ.200/- only
- ★அவுஸ்திரேலிய டயமன்ட் செயின் ரூ.300/- only
- ★பஞ்சாப் பியூட்டி குயின் மாலை ரூ.300/- only
- ★அமெரிக்க டயமன்ட் நெக்லஸ் ரூ.300/- only
- ★கிரிஸ்டல் நெக்லஸ் செட் ரூ.300/- only
- ★ஹைட்ராப்பாத் முத்து நெக்லஸ் செட் ரூ.300/- only
- ★இத்தாலிய டயமன்ட் தோடுகள் ரூ.300/- only
- ★ரேடியம் பிளேடிங் டயமன்ட் பிரேஸ்லெட் ரூ.300/- only
- ★ஜெய்பூர்,குண்டன் நெக்லஸ் செட் ரூ.300/- only
- ★அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் ரூ.300/- only

**விசேட சலுகை: விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு ரூபா 500/- &, ரூபா 5000/- வரை ஆபரணங்கள்** (சி/204)

# இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்

அனுமதி இலவசம் தொலைபேசி:0776070459 Sponsor: S&G International Agency (Pvt) Ltd.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.